
# தமிழரசு


செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

ஜனவரி - 2009

விலை ரூ.10/-






சென்னை துறைமுகம் – மதுரவாயல் உயர்மட்ட மேம்பாலத்திற்கு
மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் **மன்மோகன் சிங்** அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
உடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் மற்றும்
மாண்புமிகு மத்திய அமைச்சர் பெருமக்கள் உள்ளனர்.(18.1.2009)

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039 - 40

மார்கழி - தை

ஜனவரி 2009

மலர் : 41 இதழ் : 7



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு.ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்மஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம்: www.tn.gov.in




**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.**

கொடைத் தன்மையும். குன்றாத புகழும் தவிர வாழ்க்கைக்கு ஆக்கம் தரக் கூடியது வேறெதுவும் இல்லை.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...




- தமிழ்ச் சமூகத்தின் அங்கமாக உள்ள ஒவ்வொருவரின் முன்னேற்றத்திற்கும் உழைத்துவரும் அரசு **(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 21.1.2009 அன்று மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள் **ஆற்றிய உரை)** ........ **2**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**

- தமிழர்களைக் காப்பாற்ற சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றியே ஆகவேண்டும் ........ **19**
- இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் கடல்சார் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது ........ **25**
- உலகப் பொருளாதார மீட்சியில் தமிழகம் முன்னணி வகிக்கும் ........ **39**

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**

- ஆளுநர் உரை கலைஞர் அரசின் திசைகாட்டும் கருவி! ........ **55**
- தமிழகத்தில் நல்லதொரு கண்காணிப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது! 'ஃப்ரண்ட்லைன்' ஆங்கில ஏடு பாராட்டு ........ **72**


**முதலாம் அட்டை**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 21.1.2009 அன்று மேதகு ஆளுநர் திரு. **சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள் உரை ஆற்றினார்.

**நான்காம் அட்டை**

சர்க்கரைப் பொங்கலுக்கான பொருள்களை இலவசமாக வழங்கிடும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தொடங்கி வைத்தார். (1.1.2009)


# தமிழ்ச் சமூகத்தின் அங்கமாக உள்ள ஒவ்வொருவரின் முன்னேற்றத்திற்கும் உழைத்துவரும் அரசு

**தமிழ்நாடு**
**சட்டமன்றப் பேரவையில்**
**21.1.2009 அன்று**
**மேதகு ஆளுநர்**
**திரு. சுர்ஜித்சிங் பர்னாலா**
**அவர்கள்**
**ஆற்றிய உரை**

**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,**

**வணக்கம்.** 2009 ஆம் ஆண்டில், பதிமூன்றாவது சட்டமன்றப் பேரவையின் பத்தாவது கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது அன்பான தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளையும் தமிழர் திருநாள் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. மக்களாட்சி மாண்புக்கு எதிராக பயங்கரவாதம் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தலையெடுத்திடும் போதிலும் – இந்தியத் திருநாட்டின் அளவில், தலைநகர் டில்லி, ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், சட்டீஸ்கார், மிசோராம், ஜம்மு–காஷ்மீர் ஆகிய ஆறு மாநிலங்களில் அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் ஜனநாயகம் நிலைநாட்டப் பட்டதையும், அவற்றைத் தொடர்ந்து திருமங்கலம் இடைத் தேர்தலில் ஜனநாயகத்தின் வலிமை



உணர்த்தப்பட்டதையும் பெருமையாகக் கருதி; இந்த உரையை உங்கள் முன் வைப்பதில் இந்த அரசு உவகை கொள்கிறது. கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் இந்த ஆட்சியில் நடந்த மூன்று இடைத் தேர்தல்களில் பெற்ற வெற்றிகளை, இந்த அரசின் செயல்பாடுகளுக்கு மக்கள் அளித்த மதிப்புரையாகக் கொண்டு, மேலும் ஆர்வமுடன் இப்பணியைத் தொடர இந்த அரசு உறுதி மேற்கொள்கிறது.

3. மனித சமுதாயத்தையே அச்சுறுத்தி வரும் பயங்கரவாதத்தின் பிறிதொரு வெறியாட்டமாக, அண்மையில் மும்பையில் நடைபெற்ற சம்பவங்கள் நமது இதயங்களை உலுக்கியுள்ளன. மத நல்லிணக்கத்திற்கும், மனித நேயத்திற்கும் எதிரான இத்தகைய கொடுஞ்செயல்களுக்கு இந்த அரசு தனது கண்டனத்தைத் தெரிவிப்பதுடன், பலியானோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது. அண்மைக் காலத்தில், நமது நாட்டின் பல்வேறு பகுதிகளில் இத்தகைய பயங்கரவாதச் செயல்கள் நடைபெற்றுவரும் சூழ்நிலையில், தமிழகத்தில் இவைகள் தலைகாட்டாமல் இருக்க இந்த அரசு விழிப்புடன் கண்காணித்து வருகிறது.

**பயங்கரவாதச் செயல்கள் குறித்து விரைவாகப் புலன்விசாரணை செய்து முடித்து, அச்செயல்களில் ஈடுபடுவோருக்கு உரிய தண்டனை கிடைத்திடுவதை உறுதிசெய்யும் நோக்கில், தேசியப் புலனாய்வு அமைப்பு ஒன்றை புதிதாக உருவாக்குவதற்காக மத்திய அரசு இயற்றியுள்ள சட்டத்தை வரவேற்கும் அதே வேளையில், மாநில அரசின் அதிகாரங்களில் குறுக்கிடாமலும், தனி நபர் சுதந்திரத்தைப் பாதிக்காத வகையிலும் இந்த அமைப்பு செயல்பட வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்துகிறது.**

4. பயங்கரவாதச் செயல்கள் குறித்து விரைவாகப் புலன்விசாரணை செய்து முடித்து, அச்செயல்களில் ஈடுபடுவோருக்கு உரிய தண்டனை கிடைத்திடுவதை உறுதிசெய்யும் நோக்கில், தேசியப் புலனாய்வு அமைப்பு ஒன்றை புதிதாக உருவாக்குவதற்காக மத்திய அரசு இயற்றியுள்ள சட்டத்தை வரவேற்கும் அதே வேளையில், மாநில அரசின் அதிகாரங்களில் குறுக்கிடாமலும், தனி நபர் சுதந்திரத்தைப் பாதிக்காத வகையிலும் இந்த அமைப்பு செயல்பட வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்துகிறது.

5. பக்கத்து நாடான இலங்கையில், உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டு பசி பட்டினியால் வாடுகின்ற இலங்கைத் தமிழ்ப் பெருமக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருள்களை அனுப்பிட, மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, இலங்கைத் தமிழர் நிவாரணத்திற்கென ரூபாய் 48 கோடி அளவிற்கு நிதியைத் திரட்டி, உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பொருள்களை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக அவர்களுக்குத் தமிழக அரசு அளித்துள்ளது. இலங்கையில் உள்ள தமிழர்கள் சொந்த மண்ணில் வாழும் சுதந்திரமின்றி, உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பின்றி அல்லற்படுவதை அகற்றி; ஆற்றொணாத் துயரத்திற்கு ஆட்படும் அவர்களுக்கு, அங்கு நடைபெறும் போர், பிரச்சினையைத் தீர்க்க உதவாது என்ற கருத்தை வலியுறுத்தி வருகிற நமது இந்தியப் பேரரசு,

பேச்சுவார்த்தை போன்ற உரிய வழிமுறை வாயிலாக, அந்த நாட்டில் அமைதி தவழ்வதற்கான முயற்சிகளை இனியும் காலந்தாழ்த்தாது மேற்கொண்டு நாளும் வதைபடும் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானித்தவாறு இந்த அரசு கேட்டுக்கொள்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு நிதியுதவி அளித்த தமிழ் மக்களின் உணர்வும் இக்கோரிக்கையில் இரண்டறக் கலந்து இழையோடுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

6. இலங்கையில் தொடர்ந்துவரும் வன்முறையால் தமிழ்நாட்டில் அகதிகளாக 73,300 பேர் முகாம்களில் தங்கியுள்ளனர். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை, மத்திய அரசின் நிதியுதவிபெற்று இரு மடங்காக உயர்த்தியதோடு, இம்முகாம்களில் உள்ள அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தியுள்ளது. இவர்களின் குழந்தைகள் கல்விபயிலத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படுகின்றன. தாயகம் திரும்ப இயலாது, தொடர்ந்து அகதிகளாக வாழ நேரிட்டுள்ள இவர்களது தங்குமிடங்களின் கட்டமைப்பை மேலும் மேம்படுத்த இந்த அரசு ஆவன செய்யும்.

7. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர் மற்றும் தமிழ் நிலத்துப் பேரறிவாளர்களும் பொறியாளர்களும் பெரிதும் விரும்பியதும் – வருங்கால வளமிகு தமிழகத்தை உருவாக்கக் கூடியதுமான – பெருந்திட்டமாம் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதில் – குறுக்கிடுகின்ற சிக்கல்களைக் களைந்து – வாணிபத் தொடர்பு பெருகி, பொருளாதாரத் துறையில் இந்நாடு புத்தெழுச்சி பெறத் தேவையான இந்தப் பெரும்பணியினை மத்திய அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த அரசு வலியுறுத்துகின்றது.

8. தமிழகத்தில் 2005 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தின்போது நான்குமுறை பெருமழை பெய்து, அதிலே 22 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டது போன்று, தற்போது 19.11.2008 முதல் 28.11.2008 வரை வடகிழக்குப் பருவமழை அதிகமாகப் பெய்தமையாலும், 'நிஷா' புயலாலும், 12 மாவட்டங்களில் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்தப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொண்டதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் அவசர உதவிகளையும் இந்த அரசு வழங்கியுள்ளது. இப்பணிகளை மேற்பார்வையிட, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைச்சரவைத் துணைக் குழு



ஒன்று அமைக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட இடங்களைத் தமிழக அமைச்சர்கள் நேரில் பார்வையிட்டு நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. 7.12.2008 அன்று இந்த 12 மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி முதலமைச்சர் அவர்கள் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதம் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

9. 2005 ஆம் ஆண்டு வெள்ளத்தின்போது உயிரிழந்த 497 பேர்களின் குடும்பத்தினருக்கு, அப்போது தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 2 கோடியே

10. குடிசைகள் இழப்புக்காக 2005 ஆம் ஆண்டு 93 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது. தற்போது 231 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மழையினால் பாதிக்கப்பட்ட மற்றும் வெள்ளம் சூழ்ந்த வீடுகளுக்குச் சிறப்பு நிவாரண உதவியாக, 2005 ஆம் ஆண்டு 22 மாவட்டங்களில் 466 கோடியே 97 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதென்றால், தற்போது 12 மாவட்டங்களில் மட்டும் 402 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தவரை, 2005 ஆம் ஆண்டில் 148 கோடி




49 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது. தற்போது 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சேதத்தில் உயிரிழந்த 205 பேர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டில் 1,520 கால்நடை உயிரிழப்புகள் ஏற்பட்டு, 86 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டதற்கு மாறாக, தற்போது 5,982 கால்நடை இழப்புகள் ஏற்பட்டு, நிவாரணமாக 1 கோடியே 79 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

ரூபாய் சிறப்பு நிவாரண உதவியாகத் தரப்பட்டது. தற்போது இதற்காக 150 கோடி ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது.

11. பயிர்ச் சேதம் என்ற வகையில் 2005 ஆம் ஆண்டு 368 கோடி ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக தற்போது 388 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய அனைத்து நிவாரண உதவிகளையும் சேர்த்து, 2005 ஆம் ஆண்டு 931 கோடி ரூபாய் 22 மாவட்டங்களில் ஏற்பட்ட இழப்புகளுக்காக வழங்கப்பட்டதென்றால், தற்போது 12

மாவட்டங்களில் ஏற்பட்ட இழப்புகளுக்காக மட்டும் 1,027 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

12. மதிப்பிடப்பட்டுள்ள இழப்புகளின் அடிப்படையில், நிவாரணப் பணிகளுக்காக ரூபாய் 3,789 கோடி மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மத்திய அரசு முதற்கட்டமாக ரூபாய் 200 கோடி நிதியுதவி அளித்துள்ளது. மத்திய அரசின் அதிகாரிகள் குழு பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நேரில் சென்று வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களின் அளவையும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரணப் பணிகளையும் பார்வையிட்டுச் சென்றுள்ளது. அவர்களது அறிக்கையின்படி போதிய நிவாரண உதவிகள் வழங்கவும், இப்பகுதிகளை முழுமையாகச் சீரமைக்கவும், தமிழக அரசிற்குத் தேவைப்படும் நிதியுதவியை விரைவில் வழங்கும்படி மத்திய அரசை வலியுறுத்தியுள்ளோம்.

13. இனி இப்படிப்பட்ட பெருமழை பெய்யும்போது அதனால் இத்தகைய சேதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான நிரந்தரப் பாதுகாப்புத் திட்டங்களையும் இந்த அரசு தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. கரூர், திருச்சி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில், காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்காக, ரூபாய் 211 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ், சென்னை மாநகரத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் தடுப்பதற்காக ரூபாய் 1,560 கோடி மதிப்பீட்டிலான பெரும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, அண்மையில் ரூபாய் 690 கோடி மதிப்பிலான பணிகளுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் இந்த ஆண்டில் தொடங்கப்படும்.

14. இயற்கைச் சீற்றங்களால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட அவர்கள் பயிர்க்காப்பீடு செய்து கொள்வதற்கான திட்டம் பல ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வந்தபோதிலும், இந்த அரசுதான் காப்பீட்டுத்

**இலங்கையில் தொடர்ந்துவரும் வன்முறையால் தமிழ்நாட்டில் அகதிகளாக 73,300 பேர் முகாம்களில் தங்கியுள்ளனர். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித் தொகையை, மத்திய அரசின் நிதியுதவிபெற்று இரு மடங்காக உயர்த்தியதோடு, இம்முகாம்களில் உள்ள அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தியுள்ளது.**

தொகையில் 50 சதவீதத்தை மானியமாக 2006 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. இதன் பயனாக, 2005–2006 ஆம் ஆண்டில் சுமார் ஒரு இலட்சம் விவசாயிகள் மட்டுமே பயிர்க்காப்பீடு செய்த நிலை மாறி, 2006–2007 ஆம் ஆண்டில் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளும், 2007–2008 ஆம் ஆண்டில் சுமார் ஐந்தரை இலட்சம் விவசாயிகளும், 2008–2009 ஆம் ஆண்டில் எட்டரை இலட்சம் விவசாயிகளும் இந்த மானியத்தைப் பெற்று பயிர்க்காப்பீடு செய்து கொண்டுள்ளனர். இதனால், 2007–2008 ஆம் ஆண்டில் பெய்த பெருமழையால் ஏற்பட்ட இழப்பிற்காக முன் எப்போதும் இல்லாத அளவில், 3 இலட்சம் விவசாயிகள் ரூபாய் 279 கோடி இழப்பீடாகப் பெற்றுள்ளனர். இத்திட்டம் வரும் நிதியாண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



15. மாநிலங்களின் நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க, தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்பு, முதற்கட்டமாக மாநிலங்களுக்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டங்களையாவது செயல்படுத்த மத்திய அரசு நிதியுதவி வழங்கவேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் 19.12.2007 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார்கள். இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன உதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க தேசிய வளர்ச்சிக் குழு இசைவு அளித்துள்ளதன் அடிப்படையில்; வெள்ளக் காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான காவிரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தின் முதற்கட்டமாக காவிரி ஆற்றின் குறுக்கே கட்டளையில் ரூபாய் 165 கோடி மதிப்பீட்டில் கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கவுள்ளன. மற்றொரு திட்டமான, ரூபாய் 369 கோடி மதிப்பீட்டில் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கான தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கு 9.2.2009 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ளது. எனவே. இத்திட்டங்களுக்குத் தேவையான நிதியுதவியை உடனடியாக வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

16. பதிமூன்றாவது நிதிக் குழுவிடம் நமது மாநிலத்தின் கோரிக்கைகளை விரைவில் முன்வைக்க உள்ளோம். தமிழ்நாடு போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு நிதிப்பகிர்வு; தேவைக்கும் குறைவாக இருந்துவரும் நிலையை மாற்றி, மாநிலங்களின் செயல்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து. நியாயமான நிதிப்பங்கீடு அளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.


17. கடந்த காலத்தில் மதுவிலக்குக் கொள்கையில் நமது தமிழ் மாநிலம் உறுதியுடன் செயல்பட்ட போதிலும் – நன்மையிலும் தீமை உண்டு என்பதுபோல – கள்ளச் சாராயம் கடலெனப் பெருகியும் – விஷச் சாராயச் சாவுகள் நூற்றுக்

கணக்கில் தொடர்ந்தும் – கேடு விளைந்த நிலையில், மறு ஆய்வு செய்து 1971 ஆம் ஆண்டு மதுவிலக்கு தளர்த்தப்படவும் – அதற்குப் பின் நடைபெற்ற ஆட்சிகளிலும் அதே நிலை தொடர்ந்து வருகின்ற சூழலில் – பா.ம.க. நிறுவனத் தலைவர் மருத்துவர் ச.இராமதாசு அவர்களும், பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், ஆன்மீகவாதிகள் எனச் சான்றோர் பலரும் கடந்த மாதம் 22 ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்து தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அவர்கள் கூறியதில் ஒத்த கருத்துடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, கடந்த இரண்டாண்டுகளில் தமிழகம் முழுவதிலும் 1,300 மதுக் கூடங்களை (பார்) மூடியுள்ளது என்பதையும், அதே போல் 128 சில்லறை மது விற்பனைக் கடைகளும் மூடப்பட்டுள்ளன என்பதையும் நினைவூட்டி, தொடர்ந்து படிப்படியாக முழு மதுவிலக்கினை எய்திடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும்; அதுவரையில் ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகள், கல்வி நிலையங்கள் போன்ற பொது இடங்களுக்கு அருகில் விதிமுறைகளுக்கு மாறாக மதுக்கடைகள் அமையாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்வது என்றும் முடிவெடுத்துள்ளது. மதுக்கடைகள் திறந்திருக்கும் நேரம் காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை என்றிருந்ததில், 1 மணி நேரத்தைக் குறைத்து – 2009 ஜனவரி 1 ஆம் தேதி முதல், காலை 10 மணியிலிருந்து இரவு 10 மணி வரையில் மட்டுமே மதுக்கடைகள் இயங்கும் என்று அறிவித்து அதற்கிணங்க ஆணையும் பிறப்பித்துள்ளது. முழு மதுவிலக்கைக் கொண்டு வருவதற்கான எண்ணத்தோடு இந்த அரசு செயல்படுகிறது என்பதற்கான சான்றுகள் தான் இவை.

18. பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டில் அவரது கனவை நனவாக்கி, நமது நாட்டிலேயே மிகக் குறைந்த விலையில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி இந்த அரசு புதிய வரலாறு படைத்துள்ளது. இது தவிர, அத்தியாவசிய உணவுப் பொருள்களாகிய துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில் மற்றும் கோதுமை மாவு போன்றவற்றை அரசே



கொள்முதல் செய்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்கும் சிறப்புப் பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதோடு, இத்திட்டத்தின்கீழ் 2.10.2008 முதல் பத்து மளிகைப் பொருள்கள் மொத்தமாக ரூபாய் 50 என்ற மலிவான விலையில், நியாய விலைக் கடைகள் மூலம் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. விலைவாசி உயர்வின் சுமையைக் குறைத்து, மக்களுக்கு ஆறுதலாக இந்த அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கைகள் நமது நாட்டிற்கே முன்மாதிரியாக அமைந்துள்ளன.



19. சாதாரண மற்றும் சன்னரக நெல்லுக்கு, குவின்டால் ஒன்றுக்கு முறையே ரூபாய் 850 மற்றும் ரூபாய் 880 என மத்திய அரசு கொள்முதல் விலையை நிர்ணயித்துள்ள போதிலும்; விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைக்குக் கூடுதலாக ஊக்கத்தொகை வழங்கி, சாதாரண மற்றும் சன்ன ரக நெல்லுக்கு குவின்டால் ஒன்றுக்கு முறையே ரூபாய் 1,000 மற்றும் ரூபாய் 1,050 என இந்த அரசு கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கி வருகிறது. நடப்பாண்டில் 16.5 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படும்.

20. **கரும்பு கொள்முதல் விலையை, 811.80 ரூபாய் என்ற அளவிலிருந்து, இரண்டு ஆண்டுகளாக மத்திய அரசு உயர்த்தாத போதும், விவசாயிகளின் நலன் கருதி கரும்பு விலையை டன் ஒன்றுக்கு ரூபாய் 1,050–ஆக இந்த அரசு உயர்த்தியுள்ளது. இந்த விலை மேலும் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், ரூபாய் 1,100 என மேலும் உயர்த்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இஃதன்னியில், போக்குவரத்துக் கட்டணத்திற்காக 90 ரூபாயும், சர்க்கரைக் கட்டுமான ஊக்கத்தொகையாக சராசரியாக 30 ரூபாயும் வழங்கப்பட்டு, கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு டன் ஒன்றிற்கு ரூபாய் 1,220 கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.**

21. தொழில் முனைவோர் எளிதில் அணுகக் கூடியதாகவும், ஒளிவுமறைவற்ற செயல்பாடுடைய தாகவும் இந்த அரசு திகழ்வதால் புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்குத் தொடர்ந்து வந்தவண்ணம் உள்ளன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், இதுவரை ரூபாய் 37,595 கோடி முதலீட்டில் 29 புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக தொழில்முனைவோருக்குச் சலுகைகள் வழங்கப்பட்டு, 2,05,350 பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. உலகில் உள்ள பல வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவும், வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் தேக்கமும் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையிலும் கூட, கேட்டர்பில்லர் (Caterpillar) போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் தமது புதிய தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளதானது, உலக அளவில் தொழில் முதலீட்டிற்கு உகந்த இடமாகத் தமிழகம் திகழ்கிறது என்பதற்கு ஒரு சான்றாகும்.

22. இந்தத் தொழில் வளர்ச்சியால் மாநிலமெங்கும் வாழும் அனைத்து மக்களுக்கும் பயன் கிடைத்திட; தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள

பகுதிகள் மற்றும் தென் மாவட்டங்களில் முதலீடு செய்திட முன்வரும் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தும் வகையில் – கூடுதல் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்தகைய தொலைநோக்குப் பார்வை மற்றும் தொழில் வளத்தைப் பரவலாக்கும் முயற்சிகளின் பயனாக, நெல்லை மாவட்டம் கங்கைகொண்டானில் ஏ.டி.சி. டயர்ஸ் என்ற நிறுவனம் புதிய டயர் தொழிற்சாலையையும், பெரம்பலூர் மாவட்டத்தில் எம்.ஆர்.எஃப். நிறுவனம் புதிய டயர் தொழிற்சாலையையும், கோவை மாவட்டம் பல்லடத்தில் சுஸ்லான் நிறுவனம் புதிய காற்றாலைப் பாகங்கள் உற்பத்தித் தொழிற்சாலையையும், திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் குரோத்லிங் நிறுவனம் நவீனக் காலணித் தொழிற்சாலையையும் அமைத்து வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



23. மின் ஆளுமையில் (e-governance) தமிழகம் நமது நாட்டிலேயே முதலிடம் வகிப்பதாக, Dataquest இதழ் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, மென்பொருள் உற்பத்தியிலும் நமது மாநிலம் கடந்த மூன்றாண்டுகளில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வாறு தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சியில் நமது நாட்டின் முன்னணி மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழகம் திகழ்ந்து வரும் நிலையில், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நமது மாநிலத்தின் இரண்டாம் நிலை நகரங்களுக்கும் இத்தொழில் வளர்ச்சி சென்றடையத் தேவையான முயற்சிகளை முனைப்போடு மேற்கொண்டு வருகிறோம். இந்நகரங்களில் அமைக்கப்படவுள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களுக்குத் தேவையான நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதன்வாயிலாக, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளில் வாழ்வோரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களை அடைவதை உறுதி செய்துள்ளோம்.

24. தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் முதல் மூன்று கட்டங்களில், 62,80,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஒளிவுமறைவற்ற முறையில் கொள்முதல் செய்யப்பட்டு, இதுவரை 54,28,204 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் நான்காவது கட்டமாக 41,62,500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு நடப்பாண்டில் தொடர்ந்து வழங்கப்படும்.

25. தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகி வருவதால், மின்தேவை கடந்த இரண்டு ஆண்டுகளில் வேகமாக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு

மின்வாரியத்தின் மின் நிலையங்களின் உற்பத்தியைத் திறம்பட நிருவகித்தும், பிற மாநிலங்கள் மற்றும் தனியார் மின் உற்பத்தியாளர்களிடமிருந்து மின்சாரத்தைக் கொள்முதல் செய்தும் மின் விநியோகத்தைச் சீரமைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துள்ளது. இந்த முயற்சிகளின் பலனாக, கடந்த மாதம் முதல் மின் விநியோகம் கணிசமான அளவிற்குச் சீரடைந்துள்ளது.

26. மாநிலத்தின் மின் உற்பத்தித் திறனை மேலும் பெருக்கிட பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. வடசென்னையில் 1200 மெகாவாட் மற்றும் மேட்டூரில் 600 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட கூடுதல் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கான பணிகள் 2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பாரத மிகுமின் நிறுவனத்துடன் (BHEL) இணைந்து தூத்துக்குடி மாவட்டத்தில் உடன்குடியில் தலா 800 மெகாவாட் திறன்கொண்ட இரண்டு உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கான ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டுள்ளது. இவை தவிர, தற்போது முடிவடையும் நிலையில் உள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தின் உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்காக 925 மெகாவாட் மின்சாரமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் மூலமாகக் கூடுதலாக 325 மெகாவாட் மின்சாரமும் இந்த ஆண்டு கிடைக்கும். மேற்கூறிய திட்டங்களின் மூலமாக வரும் ஆண்டுகளில் தமிழகத்தின் மின் தேவை முழுவதுமாக நிறைவடையும்.

27. குடியிருக்க இடமற்ற ஏழை எளியோருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதை முனைப்போடு செயல்படுத்த; அரசு புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகளாக வீடுகள் கட்டிக் குடியிருப்போர் பட்டா பெறுவதற்கான குடியிருப்புக் கால அளவை 10 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாகக் குறைத்தும் வருமான வரம்பை நீக்கியும் இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்தகைய

**2007–2008 ஆம் ஆண்டில் பெய்த பெருமழையால் ஏற்பட்ட இழப்பிற்காக முன் எப்போதும் இல்லாத அளவில், 3 இலட்சம் விவசாயிகள் ரூபாய் 279 கோடி இழப்பீடாகப் பெற்றுள்ளனர். இத்திட்டம் வரும் நிதியாண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

நடவடிக்கைகளால் கடந்த இரண்டரை ஆண்டுகளில் 6,50,517 வீட்டுமனைப் பட்டாக்கள் ஏழை எளியோருக்கு வழங்கப்பட்டுள்ளன. தரிசு நிலங்களைப் பண்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக அளிக்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 1,74,924 பேருக்கு 2,10,104 ஏக்கர் நிலம் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர் நலவாரியம் மீண்டும் அமைக்கப்பட்டு, சுமார் ஒரு கோடியே 70 இலட்சம் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, இதுவரை அவர்களுக்கு ரூபாய் 209 கோடி அளவிற்கு, கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

28. நிலத்தடி நீரில் ஃப்ளோரைடு அதிகம் உள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு, இந்த அரசின் அயராத முயற்சியால் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவி பெறப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.2.2008 அன்று அடிக்கல்

நாட்டப்பட்டுள்ளது. ரூபாய் 1,330 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான ரூபாய் 616 கோடி மதிப்பீட்டிலான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் வேகமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு பெறும்.

29. சென்னை மாநகரின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒன்றை மாநில அரசு செயல்படுத்திட, மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் என 2004–2005 ஆம் ஆண்டு மைய அரசு அறிவித்திருந்தது. 2006 ஆம் ஆண்டில் இந்த அரசு பதவியேற்றவுடன், ஆய்வுப் பணிகளை உடனடியாக மேற்கொண்டு இதற்கான விரிவான திட்ட அறிக்கையை மத்திய அரசுக்கு அளித்தது. இதன் அடிப்படையில், தற்போது ரூபாய் 908 கோடி செலவில் சென்னை அருகேயுள்ள நெம்மேலியில், நாள்தோறும் 100 மில்லியன் லிட்டர் அளவிற்கு கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்திட அண்மையில் ஒப்புதல் அளித்துள்ள மத்திய அரசிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்திட்டப் பணிகள் விரைவாகச் செயல்படுத்தப்படும். மேலும், மீஞ்சூரில் செயல்படுத்தப்பட்டுவரும் கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றொரு திட்டத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவுற்று, இத்திட்டம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

30. தமிழ்நாட்டில் அனைத்து சிறார்களுக்கும் ஐந்து வருட ஆரம்பக் கல்வி கிடைக்கச் செய்யும் இலக்கை வெற்றிகரமாக இந்த அரசு எய்தியுள்ளது. நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் செயல்வழிக் கல்வி முறை நமது நாட்டிற்கே முன்னோடியாக விளங்குகிறது. அடுத்த கட்டமாக, அனைவருக்கும் பத்து வருட இடைநிலைக் கல்வி கிடைக்கச் செய்யும் புதிய குறிக்கோளோடு, 'தேசிய இடைநிலைக் கல்வி மேம்பாட்டுத் திட்டம்' என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், நமது மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்த இந்த அரசு ஆவன செய்யும்.

31. தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துவது குறித்து வல்லுநர் குழுக்கள் பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளன. இதைத் தொடர்ந்து, இந்தியாவின்






பிற மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் பாடத்திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழு, பல மாநிலங்களுக்குச் சென்று, அங்கு பின்பற்றப்படும் பாடத்திட்டங்கள், பாடத்திட்ட வாரியங்கள் (Boards of School Education) ஆகியன குறித்து ஆய்வு செய்துள்ளது. இந்த விவரங்களின் அடிப்படையில், நமது மாநிலப் பாடத்திட்டத்தின் தரத்தை உயர்த்தி, அனைத்து மாணவர்களும் தரமான சமச்சீர் கல்வியைப் பெற இந்த அரசு ஆவன செய்யும்.

32. இந்த அரசின் கோரிக்கைகளை ஏற்று; திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தையும், கோயம்புத்தூரில் உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தையும், திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகத்தையும் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், விழுப்புரம், திண்டிவனம், பண்ணுருட்டி, திருக்குவளை, இராமநாதபுரம் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் ஒரே ஆண்டில் ஆறு அரசுப் பொறியியல் கல்லூரிகளை அமைத்து ஏழை எளியோர் குறைந்த செலவில் உயர்கல்வி பெற்றிட இந்த அரசு வழி வகுத்துள்ளது.

33. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் நம் நாட்டிற்கே முன்னோடியாய் விளங்கும் 'வருமுன் காப்போம்' திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்ததை மீண்டும் செயல்படுத்தியும், மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் காலியாக இருந்த மருத்துவர் மற்றும் செவிலியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பியும், தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின்கீழ், அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்பை மேம்படுத்தியும், சாமானிய மக்களுக்கு உரிய சிகிச்சை தக்க தருணத்தில் கிடைத்திட இந்த அரசு பாடுபட்டு வருகிறது. மாநிலமெங்கும் இலவச அவசரகால மருத்துவ ஊர்தி சேவை முறைப்படி செயல்படுத்தப்படுகிறது. மருத்துவத்துறையில் இந்த அரசு மேற்கொண்டுள்ள இத்தகைய முனைப்பான நடவடிக்கைகளின் பயனாக அரசு மருத்துவமனைகளில் பயன்பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையும், நலமுற நடைபெறும் மகப்பேறுகளின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது. இந்தச் சாதனையை, நமது நாட்டிற்கே முன்னோடியென மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை பாராட்டியுள்ளது.

**இந்த அரசின் கோரிக்கைகளை ஏற்று; திருச்சியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தையும், கோயம்புத்தூரில் உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தையும், திருவாரூரில் மத்தியப் பல்கலைக்கழகத்தையும் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.**

**34. இவ்வாறு மேம்படுத்தப்பட்டுள்ள அரசு மருத்துவமனைகளில் பெரும்பாலான நோய்களுக்குச் சிகிச்சை பெற்று பொதுமக்கள் பயனடைந்து வருகின்றார்கள் எனினும்; புற்றுநோய், இதயநோய், சிறுநீரகக் கோளாறு, மூளை மற்றும் முதுகுத் தண்டு பாதிப்பு, உயிருக்கு ஆபத்தான விபத்துகள் போன்ற பல கடும் நோய்களுக்கு ஏழை எளியோர் இன்னும் தனியார் மருத்துவமனைகளில் உயர்சிகிச்சை பெற வேண்டிய நிலை உள்ளது என்பதை நாம் அறிவோம். இந்நோய்களிலிருந்து உயிர் பிழைக்க அவர்களால் செலவு செய்ய இயலாது என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, சிகிச்சைச் செலவுக்கு வழியின்றி வாடும் ஏழை எளிய சாமானிய மக்கள் அனைவரும், அரசு அல்லது தனியார் மருத்துவமனைகளில் இத்தகைய கடும்**



**நோய்களுக்கு இலவசமாக உயர்சிகிச்சை பெறும் வகையில், 'உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம்' (Chief Minister's Insurance Scheme for Life Saving Treatments) என்ற புதிய திட்டம் ஒன்று இந்த ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் ஒரு இலட்சம் வரை இலவசமாகச் சிகிச்சை பெற்றிட மருத்துவக் காப்பீடு செய்யப்படும். இதற்கான காப்பீட்டுத் தொகை (Premium) முழுவதையும் இந்த அரசே ஏற்கும். இந்தப் புரட்சிகரமான திட்டத்தால் தமிழகத்தில் உள்ள சுமார் ஒரு கோடி ஏழைக் குடும்பத்தினர் பயனடைவர்.**

35. தேசிய அளவில் பெரும் திட்டமான ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், நமது மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, இதுவரை பயனாளிகளுக்கு ரூபாய் 1,343 கோடி ஊதியமாக அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 82 சதவீதம் பெண்களும், 59 சதவீதம் ஆதிதிராவிடர்களும் பயனடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

36. தந்தை பெரியார் அவர்களின் சமத்துவக் கொள்கையை நிலைநாட்டும் வகையில், அவரது திருவுருவச் சிலையுடன் கூடிய 95 புதிய சமத்துவபுரங்கள் மூன்றாண்டு காலத்தில் அமைக்கப்படுமென அறிவித்ததற்கேற்ப, 29 புதிய சமத்துவபுரங்களுக்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், இதுவரை 7,585 கிராம ஊராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 1,524 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

37. சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து பணிகள் துவங்கியுள்ளன. மதுரவாயலிலிருந்து சென்னைத் துறைமுகத்திற்கு ரூபாய் 1,655 கோடி மதிப்பீட்டில் 'பறக்கும் சாலை' (Elevated Express Highway) அமைப்பதற்கான திட்டத்திற்கும் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 8.1.2009 அன்று நமது முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் இந்தியப் பிரதமர் மாண்புமிகு மன்மோகன்சிங் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தமைக்காக மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, இத்திட்டப்பணிகளை விரைந்து செயல்படுத்தி முடித்திட இந்த அரசு உறுதி மேற்கொள்கிறது.

**38. சென்னை மாநகர மக்களின் போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்திட, சாலைகளில்**

## அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், இதுவரை 7,585 கிராம ஊராட்சிகளில் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 1,524 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அதிகரித்துவரும் நெரிசலைக் குறைக்கக் கூடிய ரூபாய் 14,600 கோடி மதிப்பீட்டிலான 'மெட்ரோ இரயில்' திட்டம் பொதுத்துறை மூலமாகவே செயல்படுத்தப்படும். இந்த அரசு மேற்கொண்ட அயராத முயற்சியின் காரணமாக, இத்திட்டத்திற்குக் குறுகிய காலத்திலேயே ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவி பெறப்பட்டுள்ளதால், இதற்கான பணிகள் இந்த ஆண்டிலேயே தொடங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் திட்டத்தில் திருவொற்றியூரும் இணைக்கப்பட வேண்டும் என்ற அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில், இதற்கான விரிவான ஆய்வு உடனடியாக மேற்கொள்ளப்படும்.**

39. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், முதியோர், ஆதரவற்றோர், விதவைகள் மற்றும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 200–லிருந்து ரூபாய் 400–ஆகவும், கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 200–லிருந்து ரூபாய் 500–ஆகவும் உயர்த்தி வழங்கியது. இத்துடன், வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள அனைத்து முதியோருக்கும் ஒய்வூதியம் வழங்கும் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டமும் மத்திய அரசுடன் இணைந்து சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ளக் கூட இயலாத மனவளர்ச்சி குன்றியோருக்கு முன் எப்போதும் இல்லாத வகையில் வருமான வரம்பு மற்றும் எண்ணிக்கை வரையறையின்றி மாதாந்திர உதவித் தொகையாக ரூபாய் 500 தொடர்ந்து வழங்கப்படும்.

40. மகளிருக்குச் சமச்சொத்துரிமை வழங்கியும், வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீடு அளித்தும் சமுதாயத்தில் உரிய உரிமைகளை அவர்கள் பெற்றிட எப்போதும் உறுதுணையாக இருந்துள்ள இந்த அரசு, மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தைத் தொடங்கியதன் மூலம் அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வித்திட்டது. ஒட்டுமொத்த சமுதாயத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் இந்த இயக்கம் மேலும் வலுப்பெறத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துள்ளது. 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை 10.48 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட 61,687 புதிய சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக்கான உதவித் தொகை மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளதோடு, நமது மாநிலத்தில் முதல் முறையாக நகர்ப்புரங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 150 கோடி நிதி ஒதுக்கி, தகுதியுள்ள அனைத்துச் சுயஉதவிக் குழுக்களுக்கும் இந்த அரசு சுழல்நிதி வழங்கி வருகிறது.

41. வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு இதுவரை 3,32,091 இளைஞர்களுக்கு ரூபாய் 60 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறும் வகையில், ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாட்டுக் கழகம் ஆகியவை மூலம் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

42. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி நிலையை உயர்த்துவதைத் தலையாயக் குறிக்கோளாகக் கொண்டு, அவர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை வகுத்து இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இவர்களுள் மிகவும் பின்தங்கியுள்ள தூய்மைப் பணிபுரிவோருக்கும் பழங் குடியினருக்கும் தனி நலவாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. **அருந்ததியர் இன மக்களின் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அவசியம் என்ற கருத்தின் அடிப்படையில்; அருந்ததியர் உள்ளிட்ட ஆதிதிராவிடருக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் 18 சதவீத இட ஒதுக்கீட்டில், அருந்ததியர்களுக்குத் தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி ஆராய, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு M.S. ஜனார்த்தனம் அவர்களைக் கொண்ட ஒருநபர் குழுவை அமைத்து, அதன் அறிக்கையின்படி அருந்ததியர்க்கு 3 சதவீத உள் ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டம் இயற்ற இந்த அரசு முடிவெடுத்துள்ளது.** இந்த உள் ஒதுக்கீட்டை விரைவில் நடைமுறைப்படுத்தி, மனிதக்கழிவை தலையில் சுமந்த மனிதர்களது தலைவிதியை மாற்றியமைத்து, அவர்கள் சுயமரியாதையுடன் வாழவும், அவர்களின் சமூகப்பொருளாதார முன்னேற்றத்தில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கவும் இந்த அரசு ஆவன செய்யும்.

**நலவாரியங்களில் உறுப்பினர்களாக உள்ள 35 இலட்சம் தொழிலாளர்களுக்கு, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை ரூபாய் 91 கோடி அளவிற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.**

43. அமைப்புசாராத் தொழிலாளர்களின் நலன் காக்க, **1996–2001** ஆம் ஆண்டுக் காலத்தில் இந்த அரசால் அமைக்கப்பட்டு, இடைக்காலத்தில் கலைக்கப்பட்ட நல வாரியங்களை மீண்டும் அமைத்து இந்த அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. இந்த நல வாரியங்களில் உறுப்பினர்களாக உள்ள 35 இலட்சம் தொழிலாளர்களுக்கு, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை ரூபாய் 91 கோடி அளவிற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

44. மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி மைய அரசு வழங்கியுள்ள புதிய ஊதிய விகிதம், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை வழங்குவது குறித்து அதிகாரிகள் குழு ஆய்வு செய்து வருகிறது. இப்பணி நிறைவடைய மேலும் கால அவகாசம் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு, இவ்வனைவருக்கும் ரூபாய் 4,247 கோடி அளவிற்கு இடைக்கால நிலுவைத் தொகையை இந்த அரசு அளித்துள்ளது. குழுவின் இறுதி அறிக்கையைப் பெற்று திருத்திய ஊதிய விகிதங்கள் விரைவில் வழங்கப்படும். சத்துணவுப் பணியாளர்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று, அண்மையில் அவர்கள் அனைவருக்கும் சிறப்புக் காலமுறை ஊதிய விகிதமும், சிறப்பு ஓய்வூதியமும் இந்த அரசால் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு அலுவலர்களுக்கு ஊதிய விகிதங்கள் திருத்தி அறிவிக்கப்படும்போது, இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட சத்துணவுப் பணியாளர்களுக்கு ஏற்கெனவே உறுதியளித்தவாறு மீண்டும் ஒருமுறை ஊதிய விகிதங்கள் உயர்த்தி நிர்ணயிக்கப்படும்.



45. சமூக நீதிக்கு வித்திட்ட நீதிக்கட்சியின் வழித்தோன்றலான திராவிட முன்னேற்றக் கழக அரசு – சமூக நீதியையே தனது வழிகாட்டும் நெறியாகக்கொண்டு; அதனடிப்படையில் அனைத்து முனைகளிலும் செயல்பட்டு வருவதை அனைவரும் நன்கறிவர். நாம் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையினையொட்டி; மத்திய அரசின் உயர்கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கிட; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தியும், உரிய சட்டத்தை நிறைவேற்றியும், வழிவகை செய்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு – **தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பண்டித நேருவும், அண்ணல் அம்பேத்கரும் எடுத்துரைத்த கருத்துக்கு முரண்பாடு ஏற்பட்டுவிடாமல்; பொருளாதார நிலையை அளவுகோலாகக் (creamy layer) கருதாமல், சமூக நிலையை மட்டுமே கருதி, பிற்படுத்தப்பட்டோர் அனைவரும் இட ஒதுக்கீடு பெற வாய்ப்பாக அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, நிறைவேற்றித்தர வேண்டுமென்று தமிழக அரசு வலியுறுத்துகிறது. இந்து மற்றும் பௌத்த மதங்களைச் சார்ந்த ஆதிதிராவிடர்களுக்கு இணையாக; கிறித்தவ மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர்களையும் அட்டவணைப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக எழுப்பப்பட்டு வருகிறது. இந்த நியாயமான கோரிக்கையை நிறைவேற்றிட மத்திய அரசு முன்வர வேண்டுமென்று தமிழக அரசு கேட்டுக் கொள்கிறது. மேலும், பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் சமுதாயத்தினருக்கு தேசிய அளவிலும் தனி இடஒதுக்கீடு வழங்கலாம் என நீதியரசர் ரங்கநாத் மிஸ்ரா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தேசிய ஆணையம் செய்துள்ள பரிந்துரையினைப் பரிசீலனை செய்து, உரிய அறிவிப்பினை வெளியிட வேண்டுமென்றும் மத்திய அரசைத் தமிழக அரசு கேட்டுக்கொள்கிறது.**

46. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அயராத முயற்சியின் பயனாக, பரிதிமாற் கலைஞரின் கனவு நிறைவேறும் வண்ணம், மைய அரசு நம் தாய்மொழியாம் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்துப் பெருமைப் படுத்தியதோடு, மத்திய செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனத்தையும் சென்னையில் அமைத்துள்ளது. அனைவரும் தமிழ் பயிலும் வண்ணம், மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்குவதற்கான சட்டத்தையும் இந்த அரசு இயற்றியுள்ளது. மைய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழ் மொழியை

அறிவிக்கச் செய்யவும், சென்னை உயர்நீதிமன்றத்தில் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழையும் வழக்கியல் மொழியாக்கவும் இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும்.

47. திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாளே புத்தாண்டுத் தொடக்கம் என அனைத்துத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மையின் அடிப்படையில்; தைத் திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என அறிவித்து, சட்டம் இயற்றி இந்த அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. பொங்கல் திருநாளை தமிழர் திருநாள் எனக் கொண்டாடி வந்த தமிழ் மக்கள், இந்த நாளை தமிழ்ப் புத்தாண்டு நாளாகவும் கொண்டாடும் வகையில் நமது மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டுப் பரிசாக, அரிசி, வெல்லம், உள்ளிட்ட பொருள்களை இந்த அரசு வழங்கியுள்ளது. இத்திருநாளையொட்டி தமிழ்க் கலாச்சாரத்தின் சிறப்புகளைப் பறைசாற்றும் பாரம்பரிய நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளும் இசை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. இனி வரும் காலங்களிலும் இத்திருநாளைச் சமத்துவப் பொங்கலாகவும், தமிழ்ப் புத்தாண்டாகவும் தமிழக மக்கள் புத்தாடை புனைந்து அளவிலா அன்போடும் மகிழ்ச்சியோடும் கொண்டாட வேண்டுகிறோம்.

48. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, கடந்த இரண்டரை ஆண்டுகளாக தமிழ்நாட்டு மக்களின் நலனையே தலையாயக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்திவரும் திட்டங்களையும், எதிர்காலத்தில் மேற்கொள்ளக் கருதியுள்ள முன்னோடி முயற்சிகளையும் உங்கள் முன் எடுத்துரைத்துள்ளேன். விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், சிறுதொழில் முனைவோர், ஆலைத் தொழிலாளர்கள், உப்பளத் தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர், பனைமரம் ஏறுவோர், வணிகர்கள், சலவைத் தொழில்புரிவோர், தையற்கலைஞர், திரைப்படத் துறைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், கட்டடத் தொழிலாளர்கள், வீட்டுப் பணியாளர்கள், சுமைதூக்குவோர் போன்ற உடலுழைப்புத் தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் போன்ற பெரும் எண்ணிக்கையிலானோருக்கு மட்டுமன்றி; அருந்ததியர், அரவாணிகள், ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர் போன்ற சமுதாயத்தின் கடைக்கோடியில் எந்தவித அதிகாரமும், ஆதரவும் இல்லாதிருப்போருக்கும் தோள் கொடுக்கும் தோழனாக விளங்க வேண்டுமென்ற தத்துவத்தின் அடிப்படையில்; தமிழ்ச் சமூகத்தின் அங்கமாக உள்ள ஒவ்வொருவரின் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்துவரும் இந்த அரசின் முயற்சிகள் வெற்றியடைய, உங்களுடைய நல் ஆதரவு எப்போதும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

**வணக்கம்**

❖ ❖ ❖

## அண்ணாவின் பொன்மொழிகள்

### நமது கடமை

போர் வீரர்கள் செல்வதற்கு முன்,
பாதைபோடுவோர் கரடுமுரடான
பாதைகளைச் செப்பனிட்டுச் செல்வது
போல, நம்முடைய எதிர்கால
சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும்
புதரும் போல நம் சமுதாயத்தில்
அடைந்துள்ள ஆபாசங்களையும்
அறவே ஒழித்து நல்லதொரு
சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்து
விட்டுச் செல்வது நம்முடைய தலையாய
கடமைகளில் ஒன்றாகும்.

# தமிழர்களைக் காப்பாற்ற சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றியே ஆகவேண்டும்

**சென்னையில்**
**08-01-2009 அன்று நடைபெற்ற**
**துறைமுகம் - மதுரவாயல்**
**உயர்மட்ட மேம்பாலம்**
**அடிக்கல் நாட்டு விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை**

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சார்பில் இன்றைக்கு சென்னைத் துறைமுகத்தையும் - மதுரவாயல் சந்திப்பையும் இணைக்கின்ற உயர்மட்ட மேம்பாலத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சி, எழுச்சியோடும் சிறப்போடும் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

2006ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தலையொட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் சென்னை மாநகரில் போக்குவரத்து நெருக்கடிக்குப் பெரிதும் உள்ளாகியுள்ள பகுதிகளில் பறக்கும் சாலைத் திட்டத்தை (Elevated High way) செயல்படுத்துவதென தமிழக மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது. பொதுவாக தேர்தல் நேரத்து வாக்குறுதிகளெல்லாம் பறந்து போய்விடும். இது பறக்கும் சாலையாக இருந்தும் கூட, பறந்து போகாமல் இன்றையதினம் நீங்கள் எல்லாம் பரவசமடைகிற அளவுக்கு இன்றைக்கு உருவாக்குவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.



தேர்தல் வாக்குறுதியை நினைவூட்டி, நம்முடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கு 13–5–2006இல் கழக அரசு அமைந்த பிறகு, ஒரு மாதக்காலத்திற்குள்ளாக, அதாவது 5–6–2006 அன்று ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் இங்கே சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை அகற்றுவதற்காக சென்னைத் துறைமுகத்திற்கு உயர் மட்டப் பறக்கும் சாலை அமைக்கும் திட்டத்தை அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

**மத்திய–மாநில அரசுகளுக்கிடையே இணைப்புப் பாலம்**

தமிழக அரசின் சார்பில் கேட்டுக்கொள்கிற இது போன்ற விண்ணப்பங்களை – ஒன்றிரண்டு தவிர – மற்றவற்றையெல்லாம் ஏற்று ஒப்புதல் அளித்து – நிறைவேற்றி வைக்கின்ற மத்திய அரசின் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்றதின் விளைவாக இன்றைய தினம் இந்தியாவிலேயே மிக நீளமான உயர்மட்ட மேம்பாலச் சாலை 1,600 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம் சென்னை மாநகரின் நெரிசலைக் குறைப்பதற்காக மாத்திரமல்லாமல், சென்னைத் துறைமுகத்தையும், மதுரவாயல் சந்திப்பையும் இணைக்கப் பயன்படுகின்ற பாலமாகவும் இது அமையும் என்பதை மறந்துவிடக்கூடாது.

மத்திய மாநில அரசுகளுக்கிடையே இணைப்புப் பாலம் இருக்கின்ற காரணத்தால்தான், இங்கே ஒரு பறக்கும் பாலத்தை நம்மால் உருவாக்க முடிகின்றது என்பதை நான் உங்களுக்கெல்லாம் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தம்பி ஜி.கே. வாசன் அவர்கள் இங்கே பேசும் போது குறிப்பிட்டதைப்போல, பல திட்டங்கள் – தமிழகத்திற்கு பல்லாயிரக்கணக்கான கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கான திட்டங்கள் – மத்திய அரசால் வழங்கப்பட்டிருக்கின்றது. தமிழகத்திலே இவைகளை யெல்லாம் விட மிகப் பெரிய பாலம் – தென்னகத்தை வளப்படுத்தக்கூடிய பாலம் – வாணிபத்தை விரிவாக்கச் செய்யக்கூடிய பாலம் – எதிர்காலத் தமிழர்களுடைய வாழ்வுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கக் கூடிய பாலம் – பேறிஞர் அண்ணா அவர்களால் ''எழுச்சி நாள்'' கொண்டாடப்பட்டு, அதற்கு முன்பே பெருந்தலைவர் காமராசர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டு – தமிழகத்திலே உள்ள ஆன்றோர், சான்றோர், புலவர் பெருமக்கள், விஞ்ஞானிகள் என்று அத்தனை பேரும் ஆதரவு தந்து கட்டப்பட வேண்டுமென்று எண்ணிய பாலம்தான், சேது சமுத்திரப் பாலம். சேது சமுத்திரத் திட்டப் பாலம்.

அந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென்கின்ற எண்ணத்தோடுதான் கடந்த காலத்திலே – நம்முடைய மத்திய அரசிலே பெரு வெற்றி பெற்று, ஆட்சி அமைத்த நேரத்தில் – அவர்களுக்கு உதவிகரமாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும், அங்கே சென்று என்னாலான துணை – என்னாலான உதவிகளை செய்தபோது, நான் நம்முடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களிடத்திலும், அம்மையார் சோனியா காந்தி அவர்களிடத்திலும் எடுத்து வைத்த கோரிக்கை – சேது சமுத்திரத்திட்டம் – அதுவும் ஒரு பாலம் திட்டம்தான். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் ஒருவேளை இலங்கையிலே உள்ள அரசுக்கு அது சங்கடமாக இருக்கலாம், ஆனால் நமது எதிர்கால வாழ்வுக்கு ஒரு இன்பப் புதையலாக அந்தத் திட்டம் நிறைவேறக் கூடிய திட்டம்.

**சேது சமுத்திரத் திட்டம்**

அந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று இலங்கை அரசுக்கு சாதகமாக இருக்கின்ற சில கட்சிகள் கூட தமிழ்நாட்டிலே கொடி தூக்கி சேது சமுத்திரத் திட்டம் வேண்டாம் என்று முழங்குவதை காணுகின்றோம். கொடி தூக்கி வேண்டாமென்று சொல்வது மாத்திரமல்ல, உச்சநீதி மன்றத்திற்கே சென்று சேது சமுத்திரத் திட்டத்தை கைவிட வேண்டுமென்று வாதாடுகின்ற நல்லவர்கள் (?) எல்லாம் கூட இன்றைக்கு தமிழ்நாட்டிலே கட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அண்ணா அவர்களால், பெருந்தலைவர் காமராசர் அவர்களால் மற்ற பெரும் தலைவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட – நிறைவேற்றப்பட வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாகக் கூறப்பட்ட – ஒரு திட்டத்திற்கு இன்றைக்கு இவ்வளவு எதிர்ப்பு ஒரு சில கட்சிகளால் – இலங்கையிலே உள்ள அரசுக்கு ஆதரவாகச் செய்யப்படுகிறது, என்றாலுங்கூட நாம் இங்குள்ள தமிழர்களைக் காப்பாற்ற – இங்குள்ள வளத்தை மேலும் பெருக்க – நம்முடைய போக்குவரத்து – நம்முடைய உலகத் தொடர்பு இவைகளுக்கெல்லாம் உயர்வளிக்க – இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே ஆகவேண்டும்.

அந்தத் திட்டத்தை இன்றைக்கு எடுத்துப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தம்பி பாலு அவர்கள் இதிலே எவ்வளவு திடமான, உறுதியான, உத்வேகத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். தமிழ்நாட்டு மக்களுக்கு இந்தத் திட்டம் ஒரு அறைகூவல். அந்த அறைகூவலிலே தமிழ்நாட்டு மக்கள் வெற்றி பெறுவதற்கு நம்முடைய அன்புக்குரிய, மதிப்புக்குரிய, நம்முடைய உள்ளமெல்லாம் குடிகொண்டிருக்கின்ற பண்பாளர், மத்தியில் இன்றைக்கு ஒளி விளக்காக திகழ்ந்து கொண்டிருக்கின்ற ஆட்சியின் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் மனம் கனிந்து அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு உறுதியோடு நின்று ஒத்துழைத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் இன்று நிறைவேற்றப்படுகின்ற திட்டம் அதற்கு அச்சாரமாக இருக்கும். இன்றைக்கு அவர்கள் அடிக்கல் நாட்டியது அந்தத் திட்டத்திற்கும் சேர்த்துத்தான் என்கின்ற எண்ணத்தோடு நான் இந்த வேண்டுகோளை அவர்களுக்கு விடுத்து விடைபெறுகிறேன்.

★ ★ ★

# 60 ஆவது
# இந்தியக் குடியரசுத் திருநாள்



நமது நாட்டின் 60 ஆவது குடியரசு தினவிழா 26.1.2009 அன்று சென்னையிலும் மற்றும் மாவட்டத் தலைநகரங்களிலும் சிறப்பாக எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

சென்னை, காமராசர் சாலையில் காந்தி சிலை அருகில் குடியரசு தின விழாவையொட்டி, காலை 6 மணி முதலே வானொலி நிலையம் முதல் அண்ணா நினைவிடம் வரையில் மக்கள் வந்து குவிந்த வண்ணமிருந்தனர். நேரம் செல்லச் செல்ல காமராசர் சாலையின் இருபுறத்திலும் மக்கள் தலைகளாகவே காட்சியளித்தன.

குடியரசு தின விழாவிற்கு வருகை தந்த மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் சாலையின் இருபுறத்திலும் திரண்டிருந்த மக்களுக்கு குடியரசு தின வாழ்த்தினை கையசைத்து தெரிவித்தவாறே வருகைதந்தார்.

மேதகு ஆளுநர் அவர்களை மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வரவேற்று அவருக்கு, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம் மற்றும் கேரள மாநிலங்களின் தலைமைப் படைத் தலைவர் மேஜர் ஜெனரல் இ.ஜெ.கொச்செக்கன், கடற்படை பொறுப்பு அதிகாரி கமோடர் பி.ஈ.வான்ஹால்ட்ரன், வான்படை அதிகாரி – ஏர்கமோடர் அசோக் லால், கடலோரக் காவல்படை (கிழக்கு மண்டலம்) கமாண்டர் எஸ்.பி.எஸ்.பஸ்ரா, தமிழக காவல்துறை இயக்குநர் திரு. கே.பி.ஜெயின், இ.கா.ப., தமிழக காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் – ஒழுங்கு) திரு. டி.இராஜேந்திரன், இ.கா.ப., சென்னை மாநகர காவல்துறை ஆணையர் கே.இராதாகிருஷ்ணன், இ.கா.ப., ஆகியோரை அறிமுகப்படுத்தினார்.


### தேசியக் கொடியை ஆளுநர் ஏற்றிவைத்தார்

அதனை அடுத்து காந்தி சிலைக்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள கொடிக் கம்பத்தில் மூவர்ண தேசியக் கொடியை மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

அச்சமயத்தில் விண்ணிலிருந்து ஹெலி காப்டர் மூலம் ரோஜா இதழ்கள் தூவப்பட்டன.

### அணிவகுப்பு மரியாதை ஏற்றல்

இந்நிகழ்வினையடுத்து இராணுவப்படை, கடற்படை, வான்படை, கடலோரக் காவல்படை, முன்னாள் இராணுவத்தினர் படைப்பிரிவு,



சி.ஆர்.டி.எப். படைப்பிரிவு, சி.ஐ.எஸ்.எப். படைப்பிரிவு, சி.ஐ.எஸ்.எப். இரயில்வே பாதுகாப்புப் படை–காவலர் படை, சென்னை மாநகர காவலர், குதிரைப் படை, சிறப்புக் காவலர் படை, ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, தீயணைப்புத்துறை காவலர்கள், ஊர்க்காவல் படை, மாணவர் வான்படை, தேசிய மாணவர் படை, பெண்கள் பிரிவு, சாலை சுற்றுக் காவல் ஆண்கள், பெண்கள் பிரிவு, ஸ்கவுட் உள்ளிட்ட படைப் பிரிவினரின் மிடுக்கான அணிவகுப்பு மரியாதையை மேதகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

**அண்ணா பதக்கங்கள்**

இதனையடுத்து 2008ஆம் ஆண்டுக்கு வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள் வழங்கப்பட்டன. கும்பகோணம் மகாமக குளத்தில் மூழ்கி உயிருக்குப் போராடியவரை கண்டவுடன் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் அவரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு உயிர்நீத்த இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. தாபித் அலி என்பவருக்காக அண்ணா பதக்கம் – அவரது சார்பாக அவரது அன்னை திருமதி. சகிதா பானுவிடம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வழங்கினார்.

அதேபோல் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. சாலம்மாள், மலைப்பாம்பின் பிடியில் சிக்கி இருந்த சிறுமியை மீட்ட துணிச்சலைப் பாராட்டி இந்த ஆண்டு திருமதி. சாலம்மாள் அவர்களுக்கு அண்ணா பதக்கத்தினை மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் அணிவித்தார்.

**மத்திய அரசின் ஜீவன்ரக்ஷா பதக்கம்**

அதேபோல் நாகப்பட்டினம் மயிலாடுதுறையில் மதுவிலக்குப் பிரிவு – ஆய்வாளராக பணியாற்றும்போது திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் காவிரி ஆற்றில் தத்தளித்த மூன்று வயது குழந்தையை காப்பாற்றிய சேவையைப் பாராட்டி அவருக்கு இந்த ஆண்டுக்கான மத்திய அரசின் ஜீவன் ரக்ஷா பதக்கத்தை மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் அணிவித்தார்.

**கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம்**

மேலும் ஆண்டுதோறும் வழங்கப்படும் “கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம்” இந்த ஆண்டு மதநல்லிணக்கத்தில் சிறப்பாகப் பணியாற்றி வரும் தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த திரு. எம்.எம்.எஸ். அப்துல் வஹாப் அவர்களுக்கு கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் வழங்கி வாழ்த்தி பாராட்டினார்.

**காந்தியடிகள் காவலர் பதக்கம்**

- அதேபோல் கள்ளச் சாராயம் தடுப்பதில் சிறப்பாகப் பணியாற்றிய கடலூர் மாவட்டம் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. செ.பெ.முருகேசன்,
- திருவண்ணாமலை மாவட்டம் துணைக் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. தேவராஜ் மகேந்திரவர்மன்,
- விழுப்புரம் மாவட்டம் காவல்துறை உதவி ஆய்வாளர் திரு. ப. குமார் மற்றும்

காஞ்சிபுரம் மாவட்டம் காவல்துறை உதவி ஆய்வாளர் திரு. ரா.ரவி ஆகியோருக்கு காந்தியடிகள் காவலர் பதக்கத்தை மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் வழங்கினார்.

**மாணவ–மாணவியரின் கலை நிகழ்ச்சிகள்**

குடியரசு தினவிழா மகிழ்ச்சியினைப் பரிமாறிக் கொள்ளும் வகையில் காமராசர் சாலையில் மாணவ மாணவிகளின் ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இக்கலை நிகழ்ச்சியை மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், மாண்பமை நீதியரசர்கள், அரசு உயரதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் கண்டுகளித்தனர்.

இந்தக் கலை நிகழ்ச்சியில் முதலில் மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியின் பரதநாட்டியம், சாந்தோம் செயின்ட் ரபேல்ஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் கோலாட்டம்,

- அடையார் செயின்ட் பேட்ரிக்ஸ் மேல்நிலைப் பள்ளியின் நாட்டுப்புற நடனம்,
- எழும்பூரில் உள்ள மாகாண மகளிர் மேல்நிலைப்பள்ளியின் ஒயிலாட்டம்,
- சென்னை பாரதி மகளிர் கல்லூரியின் கலவை நடனம்,
- ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் நாட்டுப்புற நடனம்,

டாக்டர். எம்.ஜி.ஆர்.–ஜானகி கலை அறிவியல் கல்லூரியின் நாட்டுப்புற நடனம் காண்போரை கவரும் வகையில் இருந்தன.

**பிற மாநிலங்களின் நடன நிகழ்ச்சிகள்**

பின்னர், மிசோரம் மாநிலத்தின் செரா நடனம், அரியானா மாநிலத்தின் பாக் நடனம், குஜராத்தின் டாங்கி நடனங்களுக்குப் போட்டியாக மயிலாட்டம், ஒயிலாட்டம், புரவி ஆட்டம் போன்ற தமிழகத்தின் நாட்டுப்புற கலைகள் கொண்ட நடனமும் காண்போரை கவர்ந்தன.

**சாதனைகளை விளக்கிய அலங்கார ஊர்திகள்**

அதனைத் தொடர்ந்து தமிழக அரசின் சாதனைகளை பிரதிபலிக்கக்கூடிய அலங்கார ஊர்திகள் அணிவகுத்து வந்தன.

**செய்தித்துறையின் ஊர்தி**

செய்தித்துறை சார்பில் இரு அலங்கார ஊர்திகள் அணிவகுத்தன. சென்னையில் தமிழ்க் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வள்ளுவர் கோட்டம்–அதில் தமிழரின் இன்னிசை–நாதஸ்வர இசை முழக்கத்துடன் முதல் அலங்கார ஊர்தி அணிவகுத்து வந்தது.

**பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா ஊர்தி**

அதனைத் தொடர்ந்து செய்தித்துறை சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி; அண்ணா வாழ்க்கை வரலாற்றினைப் பிரதிபலிக்கக்கூடிய அலங்கார ஊர்தியில் ஒருவர் அண்ணா வேடமணிந்து ஒலிபெருக்கியில் பேசிட அந்தக் காலத்து கிராமபோன்–ஒலியில் அண்ணாவின் குரல் ஒலித்துக்கொண்டே வந்தது காண்போர் கண்களைக் குளமாக்கியது.

இவ்விரு ஊர்திகளுக்கு அடுத்து வனத்துறையின் ஊர்தியும், அதனை அடுத்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் ஊர்தியும் அணிவகுத்தன.

இந்த ஊர்தியில் ஏழைப் பெண்ணின் திருமணநிதி உதவியாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூபாய் 20,000/– வழங்கப்படும் திட்டத்தினையும், சிறார்களுக்கு சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டத்தையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் அமைந்திருந்தன.

கடலலையில் அல்லலுறும் மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட கலைஞர் அரசின் திட்டங்கள்–நிதி உதவிகளை விளக்கும் வகையில் ஊர்தி–அதில் மீனவர்கள் பெரிய , பெரிய மீன்களை கையில் ஏந்தி வாகனத்தில் அணிவகுத்து வந்தது கடலலையில் உழைக்கும் மீனவர்களை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியது!

மீன் வளத்துறையைத் தொடர்ந்து கூட்டுறவுத் துறை; 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற சொல்லுக்கு இலக்கணமாக கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகளை விளக்கி அணிவகுத்தன.


**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

கூட்டுறவுத் துறையைத் தொடர்ந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் வாகன ஊர்தி வந்தது.

இதில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், 5 ஆண்டில் முழுமையாக செயல்படும்பொழுது கிராமங்கள்–நகரங்களுக்கு இணையாக இருக்கும் என்பதற்குத் திண்ணம். அதனை நினைவுபடுத்தும் வகையிலும், தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை பிரதிபலிக்கும் வகையிலும் இந்த ஊர்தி அமைந்திருந்தது. அதனைத் தொடர்ந்து தறிநெசவு செய்யும் வகையில் கோ–ஆப்டெக்ஸ் அலங்கார ஊர்தி, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட கால்நடை பாதுகாப்புத் திட்டத்தை பிரதிபலிக்கும் கால்நடை பராமரிப்புத் துறையின் அலங்கார ஊர்தியும்,

நவீன முறையில் தானியங்கிகளின் உற்பத்தி பெருக்கத்தை பிரதிபலிக்கக்கூடிய வகையில் வேளாண்மைத் துறையின் ஊர்தியும் வந்தன.





**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் மருத்துவக் காப்பீட்டுத் திட்ட ஊர்தி**

கலைஞர் அரசின் புரட்சித் திட்டங்களுள் ஒன்றான ஏழை எளியோர் ஒரு கோடிப் பேர் பயனளிக்கும் வகையில் அறிவித்த மருத்துவ காப்பீட்டுத் திட்டம், சிறார்களுக்கு இதய அறுவைச் சிகிச்சைத் திட்டம் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் மனித நேயத்தை பிரதிபலிக்கக்கூடிய வகையில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அலங்கார ஊர்தி அணிவகுத்து வந்தது.

**கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்**

தமிழ்நாடு அரசின்–மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முயற்சியால் விரைவில் நிறைவேற இருக்கும் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், மேலும் மிகப்பெரிய செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நினைவுபடுத்தும் வகையில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் அலங்கார ஊர்தி அமைந்திருந்தது.

அடுத்து தொழில்துறை, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் இன்று இந்தியாவிலேயே முதன்மைத் துறையாக விளங்கும். தொழில்துறையின் முன்னேற்றத்தை விளக்கிய அலங்கார ஊர்தி இடம் பெற்றது.

அதற்கடுத்து ஆதிதிராவிடர் நலத்துறை ஊர்தியும், மின்சார வாரியத்தின் நீர், அனல், காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தியை விளக்கிடும் வகையில் மின்சாரத் துறையின் ஊர்தியும் வந்தன.

சுற்றுலாத்துறை சார்பில் காளை மாட்டு வண்டியில் கிராமிய நடனம், குடிசை தமிழ்க் கலாச்சாரத்தை பிரதிபலிக்கக்கூடிய வகையில் அமைந்த ஊர்தி தமிழக சுற்றுலாத் தலத்தை நினைவு படுத்திடும் வகையில் அமைந்திருந்தது.

அதனை அடுத்து, ''மிரட்டல்களுக்கு அஞ்சாமல், பயமுறுத்தல்களுக்குப் பதறாமல் வீரத்தையும் உள்ள உறுதியையும் எந்த நேரத்திலும் மெய்பித்துக் காட்டக்கூடியவர்கள் தமிழக காவல் துறையினர்''

– என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பாராட்டு வாசகத்தை முகப்பில் தாங்கி காவலர்களின் 'அன்றைய நிலை' 'இன்றைய நிலை' வரையில் கலைஞர் ஆட்சியில் காவலர்களின் உயர்வை விளக்கி காவல் துறையின் ஊர்தி அணிவகுத்தது.

அதேபோல் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையில் இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் கலைஞரின் திட்டத்தையும், தகவல் தொழில்நுட்பத்துறை சார்பில் டைடல் பூங்கா மாதிரியும் அணிவகுத்து வந்தன.

நிறைவாக திடீர் என்று ஏற்படும் தீ விபத்துக்களைத் தடுக்கும் தீயணைப்பு வண்டிகளின் அணிவகுப்புடன் கலைஞர் அரசின் திட்டங்களை விளக்கும் ஊர்திகள் வந்தது. அனைவரையும் மகிழ்வித்து.

மேதகு விழா நிறைவாக தலைமைச் செயலாளர் திரு. ஸ்ரீபதி, இ.ஆ.ப., மேதகு ஆளுநர் அவர்களுக்கு அணிவகுப்பு 'தளவாயை' அறிமுகப்படுத்திட காவல்துறையினரின் நாட்டுப் பண் இசையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன், உள்ளாட்சித்துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின், உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மாண்பமை முகபாத்தியாயா உள்பட மத்திய – மாநில முன்னாள் அமைச்சர்கள், நீதியரசர்கள், அரசு உயரதிகாரிகள், சட்டமன்ற நாடாளுமன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

★

# இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் கடல்சார் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் உரை




சென்னை அருகே உள்ள உத்தண்டியில் 31.12.2008 அன்று இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைத்து நிருவாக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:–

கடல்சார் பல்கலைக் கழகத்தின் தொடக்க விழா இன்றைக்கு சீரோடும் சிறப்போடும் மிகுந்த மகிழ்ச்சியோடும் எதிர்பார்ப்போடும் நல்ல நம்பிக்கையோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தப் பல்கலைக் கழகத்தினை இங்கே அமைப்பதற்குப் பாடுபட்டு அதிலே வெற்றி பெற்ற தம்பி டி.ஆர். பாலு அவர்கள் ஏதோ கடாரத்தை வெற்றி பெற்றபோது, இராஜேந்திரச் சோழன் மேஜையை அடித்திருந்தால் எப்படி அடித்திருப்பாரோ, அதைப் போல இங்கே மேஜையைத் தட்டி அடித்த அடி என்னையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. என்ன இப்படி திடீரென்று ஒரு ஒலி என்று! அந்த அளவிற்கு அவருக்கு ஒரு மகிழ்ச்சி. அப்படிப்பட்ட வெற்றியை தம்பி பாலு பெற்றிருக்கிறார் என்றால் அந்த வெற்றியிலே எங்களுக் கெல்லாம் பங்கு உண்டு என்ற மகிழ்ச்சி எனக்கும், நம்முடைய தம்பி ஜி.கே. வாசன் அவர்களுக்கும் மற்றும் இங்கேயுள்ள அமைச்சர் பெருமக்களுக்கும், விழா மேடையிலே அமர்ந்திருப்பவர்களுக்கும்!

எனக்கு ஒரு நினைவு. 1956ஆம் ஆண்டு, ஏறத்தாழ ஐம்பது அல்லது ஐம்பத்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு நடைபெற்றது.

**கடல்சார் பெருமை**

அந்த மாநாட்டிலே பேசுகின்ற அனைவரும் அவரவர்கள் தேர்ந்தெடுத்த ஒரு பொருளில் ஏதாவது ஒரு கருத்தை அரசியல் ரீதியாக, சமுதாய ரீதியாக, பொருளாதார ரீதியாகப் பேசலாம் என்று அதுவரையிலே கழக மேடைகளில் கடைப்பிடிக்கப்பட்ட முறையை மாற்றி அண்ணா அவர்கள் கழகத்தின் தலைவர்கள், பேச்சாளர்கள் அனைவருக்கும் ஒரு தலைப்பைத் தந்து, இந்தத் தலைப்பிலே நீங்கள் பேச வேண்டுமென்று ஆணையிடுவார்கள். நாஞ்சில் மனோகரனுக்கு "ஜனநாயகம்" என்ற தலைப்பு – பேராசிரியருக்கு "தமிழ் வளர்ச்சி" என்ற தலைப்பு – எனக்கு அப்போது அண்ணா அவர்கள் வழங்கிய தலைப்பு "திராவிடத்தின் உலகத் தொடர்புகள்" என்பதாகும். ஒருவேளை 52 ஆண்டுகளுக்குப் பிறகு திராவிடத்தின் உலகத் தொடர்புகளுக்கு கடல்சார் பல்கலைக்கழகம் மிகவும் முக்கியமானது என்று கருதியோ என்னவோ அதைப் பேசுவதற்கு தகுதியானவர் கருணாநிதிதான் என்று எண்ணி இன்றைக்கு நான் பேசுகின்ற வாய்ப்பை வழங்குவதைப்போல அன்றைக்கு எனக்கு வழங்கினார்கள். பேசுவதற்கு தகுதியானவன் என்றால், பேச்சுத் திறமையிலே அல்ல – அறிவுக் கூர்மையிலே அல்ல–ஆராய்ச்சியின் ஆழத்தை அறிந்தவன் என்பதால் அல்ல. நானும் கடல் சார்ந்த பகுதியிலே பிறந்தவன், வாழ்ந்தவன்– அதைப்போலத்தான் நம்முடைய மத்திய அமைச்சரும் கடல்சார் மனிதர் – அதைப்போலத்தான் நம்முடைய தம்பி ஜி.கே. வாசன் அவர்களும் கடல் சார்ந்த பகுதியிலே வாழ்பவர், அதைச் சார்ந்தவர். எனவே இதைத் தொடங்கிய பாலுவிற்கும், அதிலே கலந்து கொள்கின்ற எங்களுக்கும் கடல்சார் பெருமை நிறைய உண்டு.

**அண்ணாவின் பொன்மொழி**

## அறப்போர்

தேவையற்றவை,
தீது தருபவை,
பொருளற்றவை,
பொருத்தமற்றவை,
இவையெல்லாம்
பழமையின் பெயர்
கொண்டோ,
நமது உடமை
என்ற பாசம் காட்டியோ
நெளிந்திடக் கண்டபின்,
விட்டுவைத்திடாமல்
அவற்றினை நீக்கிடும்
அறப்போரினைத்
தொடுத்திடல்
வேண்டும்.

**பட்டினப்பாலை தரும் செய்தி**

கடலைப் பற்றி பொழுதெல்லாம் பேசிக் கொண்டிருக்கலாம். கடல் எத்தனையோ உதாரணங்களுக்கு பயன்படுகின்ற ஒன்று. எப்படி வானத்தைப் பயன்படுத்துகின்றோமோ அதைப் போலத் தான் கடலையும் பயன்படுத்தலாம். ஒரு கூட்டத்தைப் பார்த்து கடல்போல் மக்கள் கூடியிருக்கிறார்கள் என்று சொல்லுகின்றோம். கடல்போல பெருகிய ஒன்றை கடலுக்கு உவமையாக ஆக்குவதற்குக் காரணம், உலகத்திலே மிகப் பெரிய அளவிலே காணப்படுகின்ற ஒன்று; கடல்! அந்தக் கடல் என்னென்ன பொருள்களை நம்முடைய தமிழகத்திலே – திராவிடத்திலே மற்ற நாடுகளுக்கு அனுப்புகின்ற




வகையிலும், மற்ற நாடுகளிலேயிருந்து பெறுகின்ற வகையிலும் துறைமுகங்களைப் பெற்றிருந்தது என்பதை தம்பி நாகநாதன் இங்கே எடுத்துச் சொன்னார். ஒரு வேளை அவர் பேராசிரியராக இருக்கின்ற காரணத்தால்– மாணவர் நிலையிலேயிருந்து உயர்ந்துவிட்டக் காரணத்தால் அன்றைக்குப் பட்டினப்பாலையிலே உள்ள பாட்டை மறந்திருக்கக் கூடும்.

காவிரிப்பூம்பட்டினத்து துறைமுகத்திலேயிருந்து என்னென்ன பொருள்கள் ஏற்றுமதியாகின, என்னென்ன பொருள்கள் வெளிநாடுகளிலேயிருந்து வந்து குவிந்தன என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார். பட்டினப்பாலையில் –

**"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் காழகத் தாக்கமும்**
**அரியவும் பெரியவும் நெரிய வீண்டி**
**வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"**

என்றெல்லாம் வருகின்ற வரிகள் நம்முடைய தமிழகத்தில்–துறைமுகப்பட்டினங்களில் வந்து இறங்கிய பொருள்களையும், அதைப்போல இங்கிருந்து வாணிபத்திற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட பொருள்களையும் சுமந்து அந்தக் கடல் அலைகள் தத்தளித்தன என்பதைப் பட்டினப்பாலை விளக்குகிறது.

### இராஜேந்திர சோழனின் வெற்றி

இப்படி கடலின் சிறப்பை நாம் இன்றைக்குத்தான் உணருகிறோம் என்று இல்லை. அன்றைக்கே உணர்ந்த காரணத்தால்தான் கடல் அலைகளைத் தோள்களாக ஆக்கிக் கொண்டு – அந்தத் தோள்களிலே ஏறி நம்முடைய தமிழ்நாட்டு மன்னர்கள், வீரர்கள் வெளிநாடுகள் வரையிலே சென்று வெறும் வியாபாரத்தை மாத்திரம் செய்யவில்லை, வெற்றிகளையும் பெற்று வந்தார்கள்.

இராஜேந்திரச் சோழன் – தஞ்சையை ஆண்ட இராஜராஜ சோழனின் மகன் – கடாரம் வரையிலே சென்று அந்நாட்டு மன்னரை வென்று – கடாரத்தை தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டான்–தன் நாட்டுக் கொடியை அங்கே பறக்கவிட்டான் என்பது வரலாறு. இன்றைக்கும் தம்பி வாசனுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன்,

> “கடல் அலைகள்
> எந்த அளவிற்கு உயர்ந்தாலும் –
> எந்த அளவிற்கு பரந்து விரிந்தாலும்
> அந்தக் கடலையும் அடக்கக் கூடிய
> சக்தி மனிதனுக்கு உண்டு.
> மனிதன் கண்ட
> விஞ்ஞானத்திற்கு உண்டு.
> மனிதன் கண்ட பொறிகளுக்கு
> உண்டு. மனிதனுடைய
> ஆற்றலுக்கு உண்டு.”

தெரியுமென்று நம்புகிறேன். திருவாரூருக்கு அருகிலே "கடாரம் கொண்டான்" என்கின்ற ஒரு ஊரே இருக்கின்றது. ஏன் "கடாரம் கொண்டான் ?" – ஏதோ கடாரங்காய் என்று சொல்கிறார்களே, அந்த நார்த்தங்காயை வாங்கி "கடாரம் கொண்டானா ?" என்றால் இல்லை. கடாரம் என்ற பெயரிலே உள்ள இன்னொரு நாட்டை கடல் வழியிலே போர்க் கப்பல்களை நடத்திச் சென்று அந்த நாட்டை வென்று, அந்த நாட்டை வென்றதற்கு அடையாளமாக – கடாரம் என்ற பகுதியை வென்றவன் என்று அவனுடைய பெயரை சோழ வள நாட்டிலே ஒரு பகுதியாக இருந்த திருவாரூருக்கு அருகில் "கடாரம் கொண்டான்" என்ற ஒரு ஊரை அமைத்து அங்கே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தக். கடாரம் கொண்டானில் ஒரு கல்லூரியும் அமைத்தோம். அப்படி அமைக்கப்பட்ட கல்லூரிக்கு அந்தப் பகுதியிலே உள்ள பெரியவர்கள் – பொதுநல வாதிகள் – சான்றோர்கள் எல்லோரும் சேர்ந்து கட்சிச் சார்பற்றவர்கள், பொதுவாழ்வில் தொடர்புள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்த அந்தக் கல்லூரிக்கு என் பெயரை வைத்தார்கள். நான் என் பெயரை வைக்க வேண்டாமென்று சொன்னேன். நான் சொன்னபடியே ஆயிற்று. அடுத்து இன்னொரு ஆட்சி வந்தது. அந்தப் பெயர் மாற்றப்பட்டது. அதைத்தான் நான் சொன்னேன் அவர்களுக்கு. நீங்கள் கடாரம் கொண்டதற்குப் பெயர் வைத்தாலும், கங்கை கொண்டானுக்கு பெயர் வைத்தாலும் ஏற்பார்கள், என் பெயரை வைத்தால் அது நிலைக்காது, கல்லூரி நிலைக்கும், ஆனால் பெயர் நிலைக்காது என்று நான் சொன்னேன்.

**மனிதனுடைய ஆற்றல்**

இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம் நினைவலைகள் எங்கெங்கோ செல்லும். ஏனென்றால் கடலைப் பற்றிப் பேசுகின்ற காரணத்தால், கடலின் அலைகளும் எங்கெங்கோ செல்லுகின்றது. அது கன்னியாகுமரியிலே இருக்கின்ற "திருவள்ளுவர்" சிலையின் தலை வரையிலே சென்று தொட்டுப் பார்த்து, அவரை வீழ்த்த முடியாத காரணத்தால் இறங்கி வந்தது என்பதை நாம் "சுனாமி" வந்த நேரத்திலே பார்த்திருக்கிறோம். எனவேதான் கடல் அலைகள் எந்த அளவிற்கு உயர்ந்தாலும் – எந்த அளவிற்கு பரந்து விரிந்தாலும் அந்தக் கடலையும் அடக்கக் கூடிய சக்தி மனிதனுக்கு உண்டு. மனிதன் கண்ட விஞ்ஞானத்திற்கு உண்டு. மனிதன் கண்ட பொறிகளுக்கு உண்டு. மனிதனுடைய ஆற்றலுக்கு உண்டு. எனவேதான் இன்றைக்கும் கடலைக் கட்டியாள நம்மால் முடிகின்றது. சில நேரங்களிலே இயற்கை நம்மை வென்று விட்டாலுங்கூட, அந்த இயற்கையையும் தடுத்து நிறுத்தி எழில்மிகு வாழ்வை வாழ்கின்ற மக்களுக்கு வழங்குகின்ற அந்த நிலையை நம்மால் உருவாக்க முடியும், முடிய வேண்டும், அதைச் செய்தாக வேண்டும். இந்த நேரத்தில் இந்தக் கடல்சார் பல்கலைக் கழகத்தின் தொடக்க விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**சேது சமுத்திரத் திட்டம்**

இந்தியாவிலேயே கடல்சார் பல்கலைக்கழகம் எங்கும் இல்லை என்று தம்பி பாலு இங்கே சொன்னார். இந்தியாவிலே இந்த அளவிற்கு தென் பகுதியிலே இருக்கின்ற அளவிற்கு வட பகுதியிலே கடல் இல்லை. இருந்தாலும் அங்கேயும் பல கடல்சார் பல்கலைக் கழகங்கள் வந்திருக்கும். பாலுவிற்கு அவைகள் எல்லாம் சவால் விட்டிருக்கும். ஏன் இல்லை, இதோ பார், கடல்சார் பல்கலைக் கழகம் என்று அங்கெல்லாம் இருந்து சவால் வந்திருக்கும்.

இன்றைக்கு இந்தப் பல்கலைக்கழகம் இங்கே தோன்றுவதற்கு, விளங்குவதற்கு, தொடங்கப்படுவதற்குக் காரணம் யாரும் அதற்காக உரிமை கொண்டாட முடியாது – சேது சமுத்திரத் திட்டத்திற்கு நாம் உரிமை கொண்டாடுகிறோம் – அதைப் போல இந்தத் திட்டத்திற்கு நாம் உரிமை கொண்டாடுவது என்றாலும், அந்த நாம் என்பதில் இணைந்து, தம்பி பாலுவினுடைய முயற்சிகளும் இருக்கின்றன என்பதை மறந்து விட முடியாது.

பாலு கப்பல் போக்குவரத்துத் துறையைத் தான் பெற வேண்டுமென்று அவர் விரும்பிய போதும் – பாலு அந்தத் துறையை வகிக்க வேண்டுமென்று நான் மத்தியிலே உள்ளவர்களிடம் வலியுறுத்தியபோதும் ஏதோ ஒரு துறையைப் போராடிப் பெற்று விட்டார் கருணாநிதி என்று இங்கே உள்ளவர்கள் பேசினார்கள் – இப்போது தெரிகிறதா ? நாங்கள் இந்தத் துறையைப் போராடி பெற்ற காரணத்தால்தான் இங்கே கடல்சார் பல்கலைக் கழகம், இந்தியாவிலே முதல் முறையாக தமிழ்நாட்டிலே இன்றைக்கு உருவாகிறது என்பது இப்போதாவது புரிகிறதா ?

அதைப் போல பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவு, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய திட்டம் – அவர்களைப் போல பல பெரியவர்கள் – பல அறிஞர்கள் – விஞ்ஞானிகள் – தமிழ்நாட்டிலே சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் – இலங்கைக்குச் செல்கின்ற பயண தூரம் குறையும், நம்முடைய பொருளாதாரம் மேலும் மேலும் வளமாகும், நாடு செழிக்கும், வியாபாரம் பெருகும், வாணிபம் பெருகுகின்ற காரணத்தால் வளம் மேலும் மேலும் வளரும், ஆகவே நமக்கு அந்தத் திட்டம் தேவை என்று நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தமிழர்கள் பாடுபட்டு, கனவு கண்டு, அதற்காக வாதாடிப் போராடி, சர் ஏ. ராமசாமி முதலியார் போன்ற பேரறிஞர்கள் எல்லாம் வாதிட்டு, நடைபெறாமல் போன பிறகு, அதை நிறைவேற்றியே தீர வேண்டுமென்ற முறையிலே நாம் எழுப்பிய குரலுக்கு மதிப்பளித்த ஒரேயொரு தலைவி – இந்திய நாட்டின் தலைவி – சோனியா காந்தி அவர்கள்தான் என்பதை யாரும்

"பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவு, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய திட்டம் – அவர்களைப் போல பல பெரியவர்கள் – பல அறிஞர்கள் – விஞ்ஞானிகள் – தமிழ்நாட்டிலே சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் – இலங்கைக்குச் செல்கின்ற பயண தூரம் குறையும், நம்முடைய பொருளாதாரம் மேலும் மேலும் வளமாகும், நாடு செழிக்கும், வியாபாரம் பெருகும், வாணிபம் பெருகுகின்ற காரணத்தால் வளம் மேலும் மேலும் வளரும், ஆகவே நமக்கு அந்தத் திட்டம் தேவை"

மறந்துவிட முடியாது. நம்முடைய கோரிக்கைக்கு மதிப்பளித்த பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள்தான் என்பதையும் மறந்து விடக்கூடாது. அதற்கு இன்றைக்கு இடையிலே ஏற்பட்டிருக்கின்ற தொல்லைகள் என்னென்ன என்பதையும் மறந்து விடக்கூடாது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று இன்றைக்கு உச்சநீதி மன்றம் வரை சென்று வாதாடுகிறார்கள். யார் ? பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை தங்கள் கட்சிக்கு வைத்துக் கொண்டிருப்பவர்கள். அண்ணா யார் ? அவர் தான் சேது சமுத்திரத் திட்டத்திற்காக – நெய்வேலி நிலக்கரிக்காக – சேலம் இரும்பாலைத் திட்டத்திற்காக "எழுச்சி நாள்" கொண்டாடியவர். அந்த எழுச்சி நாளிலே அண்ணா பேசினார், சேது சமுத்திரத் திட்டம் தமிழகத்தை செழிப்பாக்கக் கூடிய திட்டம், அந்தத் திட்டம் என்னுடைய

கனவு, அந்தக் கனவை தமிழகத்திலே உருவாகும் ஆட்சியாளர்கள் நனவாக்க வேண்டும், நனவாக்குவார்கள் என்று நம்புகிறேன் என்று குறிப்பிட் டார். ஆட்சியாளர்கள், அண்ணா பெயரை வைத்துக் கொண்டார்கள், வைத்துக் கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றி விட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன் என்று சொன்னார்கள், ஆனால் இப்போது அவர்களே, அந்தத் திட்டம் கூடாது, அது ராமருக்கு விரோதம், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினால் அந்தப் பாலத்தை நம்முடைய தம்பி பாலுவின் முயற்சியால் கட்டி முடித்தால், அது ராமருக்கு விரோதமாம்? பாலுவிற்கும் ராமருக்கும் இடையே அவ்வளவு பெரிய சண்டையா? அதைக் கட்டுவதால் ராமருக்கு விரோதம் என்று சொல்கிறார்களே? அந்தப் பாலத்தை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு – யுகங்களுக்கு முன்பு – ராமர் அணில்களின் உதவியோடு கட்டினார் என்கிறார்கள். அணில்கள் எவ்வளவு திறமைசாலிகள்? எவ்வளவு பலசாலிகள்? ராமேஸ்வரத்திலேயிருந்து இலங்கை வரையிலே ஒரு பாலம் கட்டக்கூடிய அளவிற்கு அக்ரோணி கணக்கிலே அணில்கள் குவிந்து, அவை தங்களின் பலத்தையெல்லாம் காட்டி, உருவாக்கிய பாலமாம் அந்தப் பாலம். அதை இடித்து விட்டு நாம் புதுப் பாலம் கட்டுகிறோம் என்று சொல்லுகிறார்கள். அல்ல, அல்ல. நாம் கட்டுகின்ற பாலம் அது அல்ல. இலங்கையைச் சுற்றிக் கொண்டு – நடத்துகின்ற பயணத்தை சுருக்குகின்ற குறுகிய அளவிலே நம்முடைய பயணம் அமைவதற்காக நடத்தப்படுகின்ற திட்டம் சேது சமுத்திரத் திட்டம். அந்தத் திட்டமும் நிறைவேற வேண்டும். அதற்காக நாம் இன்றைக்கு நீதிமன்றத்திலே வாதாடிக் கொண்டிருக்கின்றோம். நீதி மன்றத்தினுடைய முடிவிற்குப் பிறகு மக்கள் மன்றத்திலே வாதாடக் கூடிய நிலைமை வருமேயானால், அதற்காகவும் நாம் நம்மை ஒப்படைத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**அண்ணாவின் பொன்மொழி**

**குறிக்கோளின்றேல்...**

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின் நாடு குலையும்; எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே மனக் குழப்பம். கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிவு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலகம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக் காரணமாகிறது என்று கருதுகிறேன்.

கடல்சார் பல்கலைக்கழகம் என்பதால், கடலைப் பற்றியும், கடலிலே கட்டப்பட வேண்டிய பாலத்தைப் பற்றியும், அந்தப் பாலம் – சேது சமுத்திரத் திட்டப் பாலமாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் பேச நேரிட்டதே தவிர – வேறல்ல என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தம்பி வாசன் அவர்கள் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசிலேயிருந்து என்னென்ன நன்மைகள் கிடைத்திருக்கின்றன என்பதை அவர் புள்ளி விவரத் துறைக்கு அமைச்சர் என்ற காரணத்தால், புள்ளி விவரத்தோடு இங்கே எடுத்துக் காட்டினார்.

சென்னைக்கு அருகில் ஒரகடத்தில் 470 கோடி ரூபாய் முதலீட்டில் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் 4.11.2006 அன்று அடிக்கல் நாட்டி. தொடங்கி வைக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

2 ஆயிரத்து 427 கோடி ரூபாய் மதிப்பீடுதான் சேது சமுத்திரத் திட்டத்திற்கு. 2.7.2005 அன்று மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டு, நிறைவேறும் கட்டத்தை எட்டிக் கொண்டிருக்கின்றது.

தமிழை செம்மொழியாக ஆக்கவேண்டும் என்ற குரலுக்கு யாருமே செவி சாய்க்கவில்லை. செவி சாய்த்தது ஒரே ஒருவர்தான். மத்தியிலே பலர் இருந்தாலுங்கூட, தமிழைச் செம்மொழி என்று உணர்ந்தவர்கள் இருந் தாலுங்கூட, நாம் சொல்ல, அதைக் கேட்டு, அப்படியா? உங்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகிறேன் என்று நம்முடைய ஆசையை நிறைவேற்றுவதாகச் சொல்லி, செம்மொழி தமிழ் என்ற தகுதியைப் பெற போராடிய பெயர்களிலே கருணாநிதியின் பெயருக்கு முக்கியத்துவம் உண்டு என்று ஒரு கடிதமே எழுதிக் காட்டியவர்கள் நம்முடைய சோனியா காந்தி என்பதை நான் இங்கே பெருமையோடும், பெருமிதத்தோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**செம்மொழி மையம்**

அதுமாத்திரம் அல்ல. செம்மொழி மையம் அமைக்கப்பட்டு, தொல்காப்பியருடைய பெயரில் தேசிய அளவில் சிறந்து விளங்கும் தமிழ் அறிஞருக்கு ஆண்டு தோறும் குடியரசுத் தலைவர் விருது வழங்கும் ஒரு திட்டத்தையும் மத்திய அரசு ஒப்புக்கொண்டு அறிவித்திருக்கின்றது.

தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம் ஒன்று தாம்பரத்தில் மத்திய அரசின் உதவியோடு நிறுவப்பட்டுள்ளது. சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய இரயில்வே மண்டலம் அமைக்கப் பட்டுள்ளது.

சேலத்திலே உருட்டாலையைச் சர்வதேச அளவுக்கு உயர்த்தி, புதிய குளிர் உருட்டாலை (Cold Rolling Mill) 1,553 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.

120 கோடி ரூபாய் செலவில் சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி 'சூப்பர் ஸ்பெஷா லிட்டி' மருத்துவக் கல்லூரியாக மேம்படுத்தப்படுகிறது.

13 ஆயிரத்து 842 கோடி ரூபாய் செலவில் தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் பிரம்மாண்டமான அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



**அண்ணாவின் பொன்மொழி**

## மரம் போல வாழ்வோம்!

"மரத்தை
வெட்டுகின்றவன் கூட
களைத்துப் போனால்
ஓய்வெடுப்பதற்கு
இன்னொரு மரத்தின்
நிழலில்தான் அமருகிறான்.
நம்மையும் இவன்
வெட்டுவானே என்று
நினையாமல் அந்த மரம்
அவனுக்கு நிழல் தருகிறது".
"அதுபோல அரசியலில்
நம்மைத் தாக்குவோரிடத்திலும்
நிழல் தரும்
மரம் போல அன்பு
காட்டவேண்டும்".

650 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகளாக கடந்த நான்கு ஆண்டுகளில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

1,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை துறைமுகம்–மதுரவாயல் இடையே பறக்கும் சாலை அமைத்திட அனுமதிக்கப்பட்டு, 8.1.2009 அன்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைக்க இருக்கிறார்.

ஏற்கெனவே நெசவாளர் சமுதாய மக்கள் பெரும்பயன் எய்திடும்வகையில் சென்வாட் வரி நீக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மை பிரிவு மக்கள் பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாகப் பின்தங்கியோர் நலன் காக்க தேசிய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகர குடிநீர்ப் பிரச்சினை தீர 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை நிறைவேற்றிட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒப்புதல் அளித்து இரண்டு ஆண்டுகளாகிறது. நான் தம்பி வாசன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். தயவுசெய்து இதுபற்றி மத்தியிலே உள்ளவர்களுக்கு நினைவூட்டுங்கள். அந்த ஆயிரம் கோடி முழுவதுமாக இன்னும் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்தால், மாமல்லபுரம் சாலையிலே அந்தத் திட்டம் இரண்டாவது திட்டமாக தொடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள மீட்டர்கேஜ் இரயில் பாதைகள் அனைத்தும் அகல இரயில் பாதைகளாக மாற்றிட அனுமதிக்கப்பட்டு, அவைகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தமிழக மக்கள் பயன்பெறும் வகையில் 10 புதிய இரயில்கள் இயக்கப்பட்டுள்ளதுடன், 7 இரயில்களின் பயண தூரங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளன. 1,859 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 90 இரயில்வே மேம்பாலங்களைக் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதித்து, இதுவரை 12 இரயில்வே மேம்பாலங்கள் 137 கோடியே 31 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**சென்னையில் மெட்ரோ இரயில் திட்டம்**

ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதி யுதவியுடன், இந்திய அரசின் துணையோடு 9 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம் தொடங்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகிய 1,330 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அனுமதிக்கப்பட்டு, அதனுடைய பணிகள் தொடங்கப்பட்டு விட்டன. யார் யாரோ அதைப் பற்றி ஆட்சேபணைகளை எழுப்பினாலுங்கூட ஏற்கெனவே முடிவாகி, நம்முடைய தமிழகத்திற்குள்ளே நடக்க வேண்டிய ஒரு திட்டம், எனவே அந்தத் திட்டம் நடந்தே தீரும், ஒகேனக்கல் திட்டத்தால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைத்தே தீரும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி தம்பி வாசன் அவர்கள் சொன்ன அந்தப் பட்டியலோடு இந்தப் பட்டியலையும் நான் இணைத்து உங்களுக்குச் சொல்கிறேன். இப்படி பல நல்ல திட்டங்களை தமிழகத்திற்குத் தந்து உதவிய அரசுதான் இன்றைய மத்திய அரசு. இன்னும் அது உதவிட – பரவாயில்லை தமிழக மக்கள் நன்றி உள்ளவர்களாக இருக்கிறார்கள் – நன்றி உள்ளவர்களுக்குத்தான் அவ்வப்போது நாம் நன்றி உடையவர்களாக இருந்து ஆவன செய்ய வேண்டும் என்ற நம்பிக்கையை அவர்கள் பெறுவார்கள். அப்படிப் பெறுகின்ற வகையிலே நீங்கள் நன்றி காட்ட வேண்டும், அவர்களும் நம்பிக்கை பெற வேண்டும், அந்த நம்பிக்கையின் ஒரு துளியாக இன்றைக்கு இந்தக் கடல்சார் பல்கலைக்கழகம் தொடங்கி வைக்கப்படுகிறது. இந்தக் கடல்சார் பல்கலைக் கழகம் தொடங்குவதற்குக் காரண கர்த்தாக்களாக இருந்தவர்கள் அனைவருக்கும், முக்கியமாக அதற்காக பாடுபட்டு நம்முடைய தம்பி பாலுவிற்கும் என்னுடைய நன்றியை, வாழ்த்துக்களைத் தெரிவித்து உங்கள் சார்பாக அவர்களை வாழ்த்தி இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ★

---

## அண்ணாவின் பொன்மொழி

### நமது கடமை

போர் வீரர்கள் செல்வதற்கு முன், பாதைபோடுவோர் கரடுமுரடான பாதைகளைச் செப்பனிட்டுச் செல்வது போல, நம்முடைய எதிர்கால சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஆபாசங்களையும் அறவே ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்து விட்டுச் செல்வது நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

# எந்தத் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்பதைச் சிந்தித்துச் செயல்படுங்கள் – என்று கேட்டுக்கொள்ள எனக்குக் கடமை இருக்கிறது

**சர்க்கரைப் பொங்கலுக்கான பொருள்களை இலவசமாக வழங்கிடும் திட்டத்தை தொடங்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை!**



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சர்க்கரைப் பொங்கலுக்கான பொருள்களை இலவசமாக வழங்கிடும் அரசின் முதன்மையான திட்டத்தை, சென்னை–வேளச்சேரியில் 1.1.2009 அன்று நடைபெற்ற எழில்மிகு விழாவில் தொடங்கி வைத்து, ஆற்றிய உரை வருமாறு,

இன்றையதினம் வாழ்விலோர் திருவிழா என்பார்களே, அதைப் போல, தமிழகத்தின் ஏழையெளிய மக்களுக்கு – தமிழர்களாகப் பிறந்த மக்களுக்கு – திராவிடச் சமுதாயத்தை தனது இனமென தலை நிமிர்ந்து கூறுகின்ற மக்களுக்கு ஒரு இனிய விழா – இதய விழா – எழுச்சி விழா என்ற அளவில் இந்நாள் அமைந்திருக்கின்றது. இந்நாளில் தமிழக அரசின் சார்பில் ஏற்கெனவே அறிவித்தவாறு, சர்க்கரைப் பொங்கல் – அதனை ஆக்கிடத் தக்க அளவிற்குத் தேவையான சமையல் பொருள்களை இலவசமாக வழங்குகின்ற நிகழ்ச்சியும் இணைக்கப்பட்டு – அத்துடன் ஆடவருக்கு வேட்டியும், தாய்மார்களுக்கு சேலைகளும் இலவசமாக வழங்குகிற நிகழ்ச்சியும் இணைக்கப்பட்டு, தமிழகம் முழுதும் இந்தக் கொடை வழங்கும் நிலை உருவாக்கப் பட்டிருக்கின்றது.

### தமிழறிஞர்களுக்கு நன்றி!

ஏறத்தாழ 260 கோடி ரூபாய் செலவில் இலவச வேட்டிகளும், சேலைகளும் வழங்குகின்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, அதனை

வழங்குகின்ற காரணத்தால் நெசவாளர்கள் பயனடையக் கூடிய வகையிலும், ஏழையெளிய மக்கள் மகிழ்ச்சியடையக்கூடிய வகையிலும் இந்த ஏற்பாட்டைத் தொடர்ந்து நடத்திட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே திட்டம் தீட்டி, அதன் தொடர்ச்சியாக இன்றைக்கும் இந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியிலே கலந்து கொள்கிற வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம்.

தமிழ்ப் புத்தாண்டு என்று கூறி பொங்கல் நாள்தான் தமிழர்களுக்குப் புத்தாண்டு என்பதை நினைவுறுத்தி அதனைச் சட்டமாகவும் ஆக்குவதற்கு காரண கர்த்தாக்களாக இருந்த தமிழ்ப் பேரறிஞர்கள் அனைவருக்கும் இந்த விழாவிலே நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**தை பிறந்தால் வழி பிறக்கும்**

இங்கே தொகுப்புரை வழங்கிய அம்மையார் சுதா சேஷய்யன் அவர்கள், இந்தப் புத்தாண்டு பொங்கல் நாள் என்று அழைக்கப்பட்டாலும், இதுவே தமிழர்க்குத் திருநாள் என்றும், தமிழனுடைய ஆண்டு தொடக்கத்தின் முதல் நாள் என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். அதிலே யாருக்கும் அய்யப்பாடில்லை. அந்த அய்யப்பாட்டை நீக்குகின்ற வகையிலே தான் 1921, 1931 ஆம் ஆண்டுகளில் தமிழகத்திலே உள்ள பெரும் புலவர்கள் எல்லாம் ஒரு இடத்திலே கூடி, மறைமலை அடிகளாரின் தலைமையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். பல புலவர்களுடைய ஆய்வுக்குப் பிறகு – அந்தப் பேரறிஞர்களின் கண்டுபிடிப்பாக – நமக்கு தை முதல் நாள்தான் தமிழர்களுக்குத் ஆண்டுப் பிறப்பு நாள் – வேறு நாட்கள் எல்லாம் வரலாம், போகலாம் – ஆனால் தை முதல் நாள்தான், தை பிறந்தால் வழி பிறக்கும் என்று ஏழை உழவர்களும், பாடுபடுகின்ற மக்களும் அந்தப் பாடுபட்ட உழைப்புக்குக் கிடைத்த பயனும் இத்தனையும் ஒரு சேரக் கிடைப்பது தை முதல் நாள்தான், அதனால்தான் தை பிறந்தால் வழி பிறக்கும் – திருமணமாகாமல் இருக்கின்ற பெண்ணைப் பார்த்துக் கூட, அடுத்த வீட்டுக்காரம்மாள் அல்லது எதிர்த்த வீட்டுக்காரம்மாள் சொல்வது "பேசாமல் இருங்கள், வருத்தப்படாமல் இருங்கள், தை பிறந்தால் உனக்கும் வழி பிறக்கும்'' என்று சொல்வதற்குக் காரணமே, தை பிறந்தால்தான் வீட்டிலே ஒரு நல்ல நிகழ்ச்சியை நடத்துவதற்கேற்ற செலவுக்குத் தேவையான பணம் கூடக் கிடைக்கும். ஆகவே தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்கின்ற இந்தப் பழமொழி நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே உருவாகி இடையிலே மறந்து போய் – இடையிலே அதன் பொருள் விளங்காமல் – தை பிறப்பது என்பது, பொங்கல்





நாள் பிறப்பது என்பதல்ல, சங்கராந்தியின் விஜயம் என்று பஞ்சாங்கத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தால், அதனுடைய முதல் பக்கத்திலோ அல்லது மூன்றாம் பக்கத்திலோ அல்லது இறுதிப் பக்கத்திலோ ஒரு பயங்கரமான பெண் உருவத்தைப் போட்டு – அந்தப் பெண் உருவமும் ஒரு கை, இரண்டு கையோடு இருக்காது, பத்து கைகளோடு விளங்கி – அந்தப் பெண் உருவத்தின் பல்லும் சாதாரணமாக முல்லைப் பல்லாகவோ, மல்லிகைப் பல்லாகவோ இல்லாமல் – அந்தப் பல்லும் கோரப் பற்களாக இருந்து இந்த மகர சங்கராந்தி – இன்ன தேதியில், இன்ன லக்கனத்தில் வருகிறாள், எதிலே ஏறிக் கொண்டு வருகிறாள் என்றால், கழுதையிலே ஏறிக்கொண்டு வருகிறாள், அல்லது கோவேறு கழுதையிலே ஏறிக்கொண்டு வருகிறாள், அல்லது புலியின் மீது ஏறிக் கொண்டு வருகிறாள், அல்லது யானை மீது ஏறிக்கொண்டு வருகிறாள்– அந்த மகரசங்கராந்தியின் பலன் எப்படி இருக்கும் என்றால்,

நாட்டில் மழை பொழியும் அல்லது பொழியாது, நாட்டில் பஞ்சம் வரும் அல்லது வராது என்ற இரண்டு மாறுபாடான சோதிடங்களை உள்ளடக்கியதாக மகர சங்கராந்தி வருவாள். இந்த மகர சங்கராந்தி என்பது தமிழர் ஏற்றுக் கொண்டதல்ல. நான் தமிழர் என்று சொல்வதற்குக் காரணம் – நான் இன்றைய தமிழர்களைச் சொல்லவில்லை – அன்றைய தமிழர்கள் யாரும் மகர சங்கராந்தியை ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல. ஆனால் இடையிலே வந்த தமிழர்கள் அதை ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிற்கு, இடையிலே வந்தவர்கள் அதற்கான புராணங்களைச் சோடித்து, அதற்கான கதைகளை அளந்து, அதை நம்பச் செய்து, அதற்கு கடவுள் என்ற கற்பனையைத் தந்து அதனை ஏற்றுக்கொள்ள வைத்தார்கள். அதற்கு மறைமலை அடிகளார் போன்ற தமிழ்ப் பெரியோர்கள், தந்தை பெரியாரைப் போன்ற சீர்திருத்தச் செம்மல்கள், அறிஞர் அண்ணாவைப் போன்ற அறிவியக்கவாதிகள் எல்லாம் தலையெடுத்து இன்றைக்கு மகர சங்கராந்தி மறைந்து பொங்கல் பூரிப்போடு எழுந்திருக்கின்றது.

## கடமையும் உரிமையும்

நான்; பொங்கலைத்தான் கொண்டாட வேண்டும், நீங்கள் ஏற்கெனவே கொண்டாடிக் கொண்டிருந்த மகர சங்கராந்தியைக் கொண்டாட வேண்டாமென்று சொல்லவில்லை. அந்த நம்பிக்கை உள்ளவர்கள் கொண்டாடுங்கள். இதிலே நம்பிக்கை இல்லை எங்களுக்கு என்று எண்ணுகிறவர்கள், எங்களுக்கு தமிழின்பால்தான்

அன்பு, தமிழின் மீது தான் பற்று பாசம், நாங்கள் தமிழர்கள், ஆகவே தமிழர்களுடைய திருநாளை, தமிழர்களுடைய பண்டிகையை தமிழர்கள் முறைப்படி கொண்டாட வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் பொங்கல் நாளைக் கொண்டாடுங்கள் என்றுதான் நான் கூற விரும்புகிறேன். அதைக் கொண்டாடியவர்கள் கொண்டாடிக் கொண்டிருக்கட்டும். அதைக் கொண்டாடுகின்ற காரணத்தால் நீங்கள் இதைக் கொண்டாட வேண்டாமென்று சொல்ல மாட்டேன். இதைக் கொண்டாடுகின்ற காரணத்தால் அதைக் கொண்டாட வேண்டாமென்றும் நான் தடுத்திட மாட்டேன். அதே நேரத்திலே தமிழன் எதைக் கொண்டாட வேண்டும், எந்தத் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்பதைச் சிந்தித்துச் செயல்படுங்கள் என்று கேட்டுக்கொள்ள எனக்குக் கடமை இருக்கிறது. அதைச் சிந்தித்து ஏற்றுக்கொள்கின்ற உரிமை உங்களுக்கு இருக்கிறது ஆகவே கடமைக்கும் உரிமைக்கும் உள்ள அந்தப் பொருள்தனை உணர்ந்து தமிழர்கள் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### அன்னதானமும் அட்சயபாத்திரமும்

இன்று இந்த விழாவில் பொங்கலை முன்னிட்டு சில சமையல் பொருட்கள், அரிசி உட்பட, சர்க்கரை உட்பட இலவசமாக வழங்கப்படுகிறது. இப்படி இலவசமாக நாம் வழங்குவதையே சிலர் கேலி செய்கின்ற நிலை நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றது. வழங்காவிட்டால் "நீங்கள் மாத்திரம் உண்ணுகிறீர்கள், உற்சாகமாக இருக்கிறீர்கள், ஏழை எதுவும் இல்லாமல் பசியால், பட்டினியால் அல்லல் படுகிறானே, உங்களுக்கு கண் தெரியவில்லையே!" என்று கேட்கின்றவர்களும் நாட்டிலே உண்டு. இலவசமாகக் கொடுத்தால் "இப்படி எதையும் இலவசமாகக் கொடுத்தால் நாடு உருப்படுமா?" என்று கேட்கின்றவர்களும் இருக்கின்றார்கள். அந்தப் பொருளாதார மேதைகளுக்குச் சொல்லிக் கொள்கிறேன்; எல்லோரும் பொருளாதாரத்தின் அடித்தளத்தை உணர்ந்து, பொருளாதாரத்தை எப்படி வளர்ப்பது என்ற ஆய்விலே வெற்றி பெற்று, ஒரு சேர பொருளாதாரத்தை வளர்க்கத் தொடங்கினால் அப்போது வேண்டுமானால் இலவசத்தை வேண்டாம் என்று ஒவ்வொன்றுக்கும் விலை வைத்து, அதை விற்று, அதன் மூலம் வருகின்ற வரவு, அதனால் ஏற்படுகின்ற செலவு, ஆகியவற்றை கணக்கிடலாம். அதற்கிடையே வேண்டுமென்றே நாம் செய்கிறோம் என்பதற்காக இலவசம் என்றாலே கிண்டல், இலவசம் என்று சொன்னாலே கேலி, இலவசம் என்று சொன்னாலே அதற்கு ஒரு கேலிச்சித்திரம், இலவசம் என்று சொன்னாலே, அதற்கு ஒரு ஏகடியத் தலையங்கம் எழுதுகின்ற பத்திரிகைகள் நாட்டிலே இருப்பதை நான் காணுகின்றேன்.

இலவசம் என்றால் அதிலே என்ன கெடுதி? அன்னதானம் செய்கிறார்களே, அது இலவசம் இல்லையா? மணிமேகலை அட்சய பாத்திரத்தை வைத்துக்கொண்டு, அதிலே அவ்வப்போது விளைகின்ற அன்னத்தை அகதிகளுக்கு, அனாதைகளுக்கு அளித்ததாகக் கவிதை யாத்து, அதை காப்பியங்களிலே ஒன்றாகச் சேர்த்திருக்கிறோமே, அது இலவசம் அல்லவா? அவ்வளவு ஏன்? நாம் தருகின்ற இலவசங்களை கேலி செய்கின்ற பத்திரிகைகள், அவர்களே வாரம் ஒரு நாள் – ஒரு பத்து பக்கங்களைக் கொண்ட அந்தப் பத்திரிகை – வேறு நான்கு பக்கங்களை இணைத்து – இது இலவசம் என்று சொல்கிறீர்களே, அது இலவசம் இல்லையா? இலவசத்தை இன்று கேலி செய்கிறவர்கள் எல்லாம் "இலை வசம் ஆனவர்கள்" அதனால் அதைக் கேலி செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் நம்மை அவர்கள் கேலி செய்ய, நம்மைக் கிண்டல் செய்ய, நம்மைப் பற்றி அவதூறு கூற "இலவசம் என்றால் – அது தி.மு.க." என்று இலவசத்திற்கே ஒரு இலக்கணம் சொல்லத் தயாராக இருக்கிறார்கள் என்றால், நாம் அதற்காகக் கவலைப்படவில்லை. இலவசத்தைப் பெறுவதற்கு இந்த நாட்டிலே இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். ஏழைகள் மாத்திரமா? இல்லை. சென்னை மாநகரத்திலே யார் யார் எல்லாம் அந்த இலவசங்களைப் பெற முன்வந்தார்கள் என்பதை நான் அறிவேன். மழை பெய்து வெள்ளம்



வந்தால், நம்முடைய மேயர் மாநகராட்சி மன்றத்திலே பட்ட பாட்டை இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திரிகைகளிலே பார்த்தேன். மேயர் தம்பி சுப்பிரமணியம் சொல்லியிருக்கிறார் – "எங்கள் வீடு இடிந்து விட்டது என்று நாங்கள் தந்த 2,000 ரூபாய் அல்லது 1,000 ரூபாயைப் பெற வருகின்றவர்கள் யார் தெரியுமா? காரிலே ஏறிக் கொண்டு வந்தார்கள், சொந்தக் காரிலே வந்து பணம் கேட்டார்கள்" என்றெல்லாம் கூடச் சொன்னார். அது அவர்களைப் பொறுத்தவரை ஒரு உரிமை; இலவசமாகக் கொடுக்கும் போது ஏழைகளுக்கு மட்டும் கொடுப்பதா? நாங்கள் ஒரு காலத்திலே ஏழைகளாக ஆக மாட்டோம் என்பது என்ன நிச்சயம்? ஆகவே எங்களுக்கும் கொடுங்கள் என்று உரிமையோடு கேட்கிறார்கள். எனவே இலவசம் என்பது கேலிக்குரியதல்ல. கிண்டலுக்கு உரியதல்ல. அதிலும் இன்றைக்குத் தருகின்ற – பொங்கலுக்காகத் தருகின்ற இந்த இலவச வேட்டியானாலும், சேலை ஆனாலும் – அல்லது பொங்கல் சமைப்பதற்காகத் தருகின்ற சர்க்கரை ஆனாலும், அரிசி ஆனாலும், துணைப் பொருட்களானாலும் – இவைகள் எல்லாம் நாம் ஒவ்வொரு வீட்டிலும் நான் வந்து பொங்கல் அளித்து – நானும் உங்களோடு அமர்ந்து சாப்பிடக் கூடிய வசதியும் வாய்ப்பும் இல்லாத காரணத்தால் – உங்கள் வீடுகளிலும் அதற்கான வசதி வாய்ப்புக்கள் இன்னும் ஏற்படாத காரணத்தால் – நானே வந்து உங்கள் வீட்டில் உங்களோடு அமர்ந்து – உங்களுக்கும் தந்து எனக்கும் அதிலே பங்கு எடுத்துக் கொள்வதைப் போலத்தான் இந்தப் பொங்கல் விழாவிலே இந்த அரிசியும் பருப்பும் சர்க்கரையும் இலவச வேட்டியும் சேலையும் வழங்கப்படுகின்றன என்பதை நீங்கள் எண்ணிக் கொள்ள வேண்டும்.

**உரிமையோடு தருகிறேன்**

ஒரு சகோதரன் தந்தது என்று சகோதரிகளும் – நம்முடைய பிள்ளை கொடுத்து – நம்முடைய மகன் வாங்கி அளித்தது – என்று தாய்மார்களும், எண்ணிக் கொண்டு இதைப் பெற்றுக் கொள்கிறார்களே அல்லாமல், இலவசம் – நாங்கள் எல்லாம் இரவலர்களாக ஆகிவிட்டோம், ஆகவே இந்த அரசாங்கத்திலே இவைகளையெல்லாம் இலவசமாகப் பெறுகிறோம் என்ற எண்ணத்தோடு அல்ல; அவர்கள் பெறுவது!– உரிமையோடு தருகிறேன் – உறவு மனப்பான்மையோடு தருகிறேன் – என் அக்காள், தங்கைகளுக்கு தருகிறேன் – சேலைகளை; அண்ணன், தம்பிகளுக்குத் தருகிறேன் வேட்டிகளை என்ற அந்த உணர்வோடுதான் நான் தருகிறேன். அந்த

உணர்வோடுதான் அவர்களும் அதை வாங்கிப் பயன்படுத்துகிறார்கள். அந்த உறவைப் பரிமாறிக் கொள்கிற நாளாகத்தான் இந்தப் பொங்கல் நாள் இருக்கிறது. பொங்கல் நாள் என்று மாத்திரமல்ல – தமிழர் ஆண்டின் முதல் நாள், தைத்திருநாள்– தை முதல் நாள்–நம்முடைய தமிழ் ஆண்டு பிறப்பு நாள் – என்ற முறையிலே இது அமைகிறது. அந்த வகையில் இன்னும் பத்து நாட்கள் கழித்துத்தான் பொங்கல் கொண்டாடவிருக்கிறோம் என்றாலும், முன்கூட்டியே நான் கொடுப்பதற்குக் காரணம் – அந்த நேரத்தில் அனைவருக்கும் ஒட்டு மொத்தமாகத் தர இயலாது. அந்த நேரத்தில் ஏறத்தாழ இரண்டு கோடி மக்களுக்கு வேட்டி சேலை தருவதென்றால் எவ்வளவு நெருக்கடி ஏற்படும், நெரிசல் ஏற்படும் என்பதையும் அதைக் கட்டுப்படுத்த முடியாமல், ஒரு காலத்தில் சென்னை எம்.ஜி.ஆர். நகரிலே நடைபெற்றதே, அதைப் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிடக் கூடும், அப்படி நடைபெறாமல் தடுக்கத்தான் நிதானமாக, அமைதியாக அவரவர்களும் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப இவைகளைப் பெறுவதற்கான வழிவகுத்து – கட்டுப்பாட்டோடு, கடமை உணர்வோடு இந்தக் காரியத்தைச் செய்ய நம்முடைய அரசு அதிகாரிகள் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக நம்முடைய உணவு அமைச்சர் தம்பி எ.வ. வேலு அவர்கள் – அவருடைய பெயரைப் பார்த்தாலே ''ஏவா'' வேலு – ஏவ வேண்டியது அவசியமே இல்லை–ஏவாமலே வேலை செய்கின்றவர் வேலு – அந்த வேலு அவர்கள் நான் இந்தத் திட்டத்தைச் சொன்னவுடன்–அவரே ஏவா வேலுவாக இருந்து, இந்தத் திட்டத்தை இவ்வளவு அருமையாகத் தயாரித்து அவருடைய செயலாளர்கள் மூலமாகவும் – அவர்களுடைய ஒத்துழைப்போடும் இதை வெற்றிகரமாக இன்றைக்கு நிறைவேற்றி வருகிறார்.

இது இன்று முதலே தொடங்குகிறது. நான் தொடங்கி வைக்கின்றேன். பொங்கல் நாள் வரையிலும் இது தொடரும். இடையிலே மதுரை மாநகருக்குப் பக்கத்திலே – திருமங்கலத்திலே நடைபெறும் தேர்தலையொட்டி–அங்கே இதனை வழங்கக்கூடாது, இடையிலே தேர்தல் நடக்கவிருக்கிறது அது முரணாக ஆகிவிடும் – விதிக்கு மாறாக ஆகிவிடும் என்று தேர்தல் அதிகாரிகள் சொன்ன காரணத்தால் இரண்டு மூன்று நாட்கள் தாமதமாக – 9ஆம் தேதி மதுரையிலே தேர்தல் என்றால் – வாக்குகள் எண்ணி முடியும் வரை காத்திருந்து–எண்ணி முடித்த பிறகு அவைகளையெல்லாம் மதுரை மாவட்டத்திற்கும், திருமங்கலம் தொகுதிக்கும் வழங்குவோம் என்பதையும் எடுத்துக் கூறி மாநிலம் முழுவதும் மகிழ்ச்சியோடு இதைப் பெற்றுக் கொள்கிற தமிழ்ப் பெரு மக்களுக்கும் – அதை வாங்கி வழங்குகின்ற நேரத்திலே நான் அடைகின்ற மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற நல்லோர்களுக்கும், எல்லோருக்கும் என்னுடைய நன்றியை வணக்கத்தை வாழ்த்துக்களை பாராட்டுக்களைத் தெரிவித்து இந்த அளவில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டமைக்கு மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். ★

**அண்ணாவின் பொன்மொழி**

**ஒளிமயமான எதிர்காலம்**

எல்லா இடங்களிலும் தமிழ் ஏற்றம் பெறுகிறது என்பது, நமக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதையே காட்டுகிறது. தமிழ் மக்களுடைய எதிர்காலம் ஒளிமயமானது. ஒளிதரத்தக்க வாழ்க்கையைத்தான் நாம் அமைப்போம்! மக்கள் அகத்திலும் புறத்திலும் ஒளிமயமான வாழ்வு உருவாகும்! நம்முடைய ஊனோடும் உயிரோடும் இரண்டறக்கலந்துவிட்ட தமிழ் மொழிக்கு உரிய ஏற்றத்தைத் தருவோம்.

# உலகப் பொருளாதார மீட்சியில் தமிழகம் முன்னணி வகிக்கும்

வெளிநாட்டுவாழ் இந்தியர்கள் மாநாட்டில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் பெருமிதம்




சென்னையில், வெளிநாட்டுவாழ் இந்தியர்கள் மாநாட்டை 8.1.2009 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் துவக்கி வைத்தார்.

அந்த மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:—

தமிழக மக்களின் சார்பில் உங்கள் அனைவருக்கும் இனிய, வளமான புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அனைவரையும் உளமார வரவேற்கிறேன்.

இந்த நிகழ்ச்சியினை நடத்துவது சென்னை மாநகருக்குக் கிடைத்துள்ள சிறந்த கவுரவம் ஆகும். இந்த மாபெரும் தேசிய நிகழ்ச்சியை நடத்துவதற்கு எங்களது மாநகரைத் தேர்ந்தெடுத்ததற்காக பிரதமர் அவர்களுக்கும், வெளிநாடுவாழ் இந்தியர்கள் விவகாரத்துறை அமைச்சர் வயலார் ரவி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**பன்முகத்தில் ஒற்றுமை**

இன்று உலகம் பல சவால்களைச் சந்தித்து வருகிறது. பயங்கரவாதத்தால் தூண்டி விடப்பட்ட வன்முறை மிகப்பெரிய

சவாலாகும். அதுபோலவே, உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றொரு பிரச்சினை ஆகும். இப்படிப்பட்ட உலக நிலைமையில் இந்தியா ஒரு சிறப்புப் பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**தமிழ்நாட்டில் ஏராளமான தொழில்நுட்ப மனித ஆற்றல் உள்ளது. அதற்கு வளர்ச்சியடைந்த தொழில் அடிப்படையும் உள்ளது. கண்டுபிடிப்பு, புதுமை மற்றும் அறிவுசார் பொருளாதாரத்தின் முனைப்பிடமாக தமிழ்நாடு உருவாகி வருகிறது. பெரிய பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து முதலீடுகளை ஈர்ப்பதற்காக எமது அரசு செயல்துடிப்புமிக்க அணுகுமுறையைக் கொண்டுள்ளது.**

நவீன இந்தியாவின் சிற்பியான பண்டித நேரு 'பன்முகத்தில் ஒற்றுமை' ஏற்படுத்தக் கடுமையாகப் பாடுபட்டார். பல்வேறு இனங்களைச் சார்ந்த, மொழிகள், நம்பிக்கைகள், சமூகப் பழக்க வழக்கங்கள் கொண்ட மக்கள் இந்தியாவில் ஒரே சமுதாயமாக வாழ்ந்து வருகின்றனர்.

நமது நாட்டின் இந்த அசாதாரண வலிமைதான் இந்தியாவைச் சேர்ந்த பலர் உலகின் மூலை முடுக்கெல்லாம் சென்று அங்குள்ள சமுதாயங்களுடன் எளிதாகக் கலந்துவிட சாத்தியமாகி உள்ளது.

**யாதும் ஊரே; யாவரும் கேளிர்**

பண்டைக்கால தமிழ்ப் புலவர் கணியன் பூங்குன்றனார் அவருடைய புகழ்பெற்ற கவிதையில், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று கூறியுள்ளார். இந்த மாபெரும் பழமொழிக்கு நீங்கள் அனைவரும் வாழ்ந்து எடுத்துக் காட்டுகளாகத் திகழ்கின்றீர்கள்.

இந்தியா மனித வளமும் திறமைகளும் செழித்த நாடு. உலகில் இந்தியா மிகவும் மரியாதையுடன் பார்க்கப்படுகிறது என்று நினைக்கும்போது உண்மையிலேயே நான் பெருமிதம் அடைகிறேன். அதற்கு காரணம் மிக அதிகமாகப் பயிற்சி பெற்ற இந்தியர்கள் தங்களது வாழ்க்கைக்காக வெளிநாடுகளுக்குச் சென்று அவர்களது தாயகத்திற்கும் தங்களுக்கும் நற்பெயரை ஈட்டியுள்ளனர். எந்தவிதமான சூழ்நிலையிலும் நல்லிணக்கத்துடன் வாழ அவர்களது பிறவித் திறமையால் இது சாத்தியமாகி உள்ளது என்று நான் கருதுகிறேன்.

தங்களுடைய கடின உழைப்பிலும், கடமையில் ஈடுபாட்டிலும் உறுதியான நம்பிக்கையுடன் தொலை தூர நாடுகளுக்கு குடிபெயர்ந்த வெளிநாடு வாழ் இந்தியர்களை நான் வணங்கிப் போற்றுகிறேன். உலகின் பல்வேறு நாடுகளில் தங்களுக்கென்று ஒரு இடத்தை அவர்களால் உருவாக்கிக் கொள்ள முடிந்துள்ளது பாராட்டத் தக்கதாகும். அவர்கள் இதிலுள்ள சகிப்புத் தன்மை, அகிம்சை ஆகிய செய்திகளைப் பரப்பி வருகின்றனர்.

**புத்தரின் தத்துவம்**

சொல்லப் போனால், 2000 ஆண்டுகளுக்கு முன்பே கௌதம

புத்தரின் தத்துவத்தில் இந்தியாவி லிருந்து அகிம்சை செய்தி உருவானது. அப்போது இந்தியர்களால் அச்செய்தி உலகின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இதே செய்தியை நமது தேசப்பிதா காந்தியடிகள் உலகிற்கு மீண்டும் அளித்தார். தென் ஆப்பிரிக் காவில் அவர் தங்கியிருந்தபோது அவரது அகிம்சை தத்துவத்தின் சில கோட்பாடுகளுக்கு உருவம் கொடுக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டின் பாடங்களை உலகம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நமது மதிப்பீட்டு முறை 'பாரம்பரியம்' ஆகியவற்றின் இணைப்பு நம்மிடையே ஒற்றுமை உணர்வை உருவாக்குகிறது. வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கு ஏதாவது அநீதி என்று கேள்விப்படுவது எவ்வளவு மனவேதனையைக் கொடுக்கும் என்று எனக்குத் தெரியும்.

உலகில் இன்றுள்ள மற்றொரு பெரும் சவால் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சரிவு ஆகும். உலகப் பொருளாதாரத்தின் விரைவான மீட்சிக்கு இந்தியா, சீனா போன்ற நாடுகள் முக்கியமான காரணங்களாக விளங்கும் என்று பரவலாக நம்பப்படுகிறது.

உலகப் பொருளாதார மீட்சிக்கு இந்தியாவுக்குள் ஒரு மாநிலமாக தமிழ்நாடு முன்னணி வகிக்கும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஏராளமான தொழில் நுட்ப மனித ஆற்றல் உள்ளது. அதற்கு வளர்ச்சியடைந்த தொழில் அடிப்படையும் உள்ளது. கண்டுபிடிப்பு, புதுமை மற்றும் அறிவுசார் பொருளாதாரத்தின் முனைப் பிடமாக தமிழ்நாடு உருவாகி வருகிறது. பெரிய பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து முதலீடுகளை ஈர்ப்பதற்காக எமது அரசு செயல்துடிப்புமிக்க அணுகுமுறையைக் கொண்டுள்ளது.

சமீப காலங்களில் தங்களது தொழிற்சாலைகளை அமைக்கவும், விரிவுபடுத்தவும் முன்வந்துள்ள நிறுவனங்களில், டய்ம்லெர், ரெனால்ட், நிஸ்ஸான், யுண்டாய், போர்ட், நோக்கியா, டெல், மோடோரோலா, சாம்சங் போன்ற உலகப் புகழ்பெற்ற பெயர்களும் அடங்கும்.

எனது அரசு 32 ஆயிரத்து நூறு கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைபெழுத்திட்டுள்ளது. இவை ஒரு லட்சத்து 9 ஆயிரம் பேருக்கு மேல் வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

உங்களில் பலர் உங்களுடைய நிறுவனங்களில் முக்கியமான பதவிகளை வகிப்பீர்கள் என்று நினைக்கிறேன். இந்த மாநிலத்தின் வெற்றி வரலாற்றை உங்களது நிருவாகங்களுடன் நீங்கள் பகிர்ந்து கொண்டால் அவர்கள் இந்தியாவை அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டை ஒரு முதலீட்டு இடமாகப் பரிசீலிப்பார்கள்.


என்னுடைய உரையை முடிக்குமுன் இதுபோன்ற நிகழ்ச்சிகள் எங்களுக்கு மிகவும் முக்கியமானது என்று வலியுறுத்த விரும்புகிறேன். அவை நமது உறவையும், நமது பாரம்பரியத்தையும், கலாச் சாரத்தையும் உயிர்ப்பிக்கின்றன.

இன்று இந்தியா உலகில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கவிருக்கிறது. அது சகவாழ்வு, சகிப்புத்தன்மை ஆகிய உணர்வுகளை வளர்த்தெடுக்கிறது. இந்தியா உலகப் பொருளாதாரத்திற்கு வளர்ச்சி உந்து சக்திகளில் ஒன்றாகவும் உள்ளது. இந்த மாபெரும் கடமையில் நீங்கள் ஒவ்வொருவரும் நமது தூதுவர்களாக விளங்குவீர்கள்.

நன்றி, வணக்கம்.

* * *

# பயங்கரவாதத்தை ஒழிக்க ஒவ்வொரு குடிமகனும் உறுதி பூணவேண்டும்



புதுடெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் உரை

புதுடெல்லியில் 6.1.2009 அன்று நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான முதலமைச்சர்கள் மாநாட்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உரையை மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் படித்தார்.

அந்த உரை விவரம் வருமாறு:–

பயங்கரவாதிகளால் ஏற்படும் அச்சுறுத்தல்கள், பயங்கரவாதத் தாக்குதல் எதையும் தடுக்க தேசத்தின் தயார் நிலைமை ஆகியவை தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மாநில அரசுகளை ஈடுபடுத்தும் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பை முதலில் நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

> **தமிழக அரசு எடுத்து வரும் உறுதியான, செயல் துடிப்பு மிக்க நடவடிக்கைகளால் மாநிலம் தொடர்ந்து அமைதியாக இருந்து வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.**

**மத்திய – மாநில அரசுகளிடையே ஒருங்கிணைப்பு**

சமீபத்தில் மும்பை நகரில் ஏற்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் நாட்டின் முன்னுள்ள தீவிரமான சவால்களின் அளவை வெளிப்படுத்தின. நாட்டுக்குள் உள்ள பிரிவினைவாத சக்திகள் மற்றும் எல்லைக்கு அப்பாலுள்ள அமைப்புகள் ஆகியவற்றின் இந்த சவால்களைச் சந்திக்க மத்திய, மாநில அரசுகளிடையே தீர்மானகரமான ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.

தமிழ்நாடு எந்தவிதமான பெரும் நெருக்கடிகளும் இன்றி தொடர்ந்து இருந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். இந்த நிலைமையைத் தக்கவைத்துக் கொள்ள மாநில அரசு சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. பிரிவினை சக்திகளை தீர்மானகரமாக எதிர்த்துப் போரிட மாநில அரசுக்கு மத்திய அரசு நிதி ரீதியிலும், தொழில் நுட்ப ரீதியிலும் தொடர்ந்து உதவி அளிக்கும் என்று நம்புகிறோம்.

மத்திய உள்துறை அமைச்சர் அவர்களால் குறிப்பாக எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக தற்போதுள்ள நிலைமையைப் பற்றிப் பின்வருவனவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இடதுசாரி தீவிரவாத சக்திகளையும், இலங்கைத் தமிழ்ப் போராளிகளையும் சமாளிக்க மாநிலத்தின் உளவுப் பிரிவில் க்யூ பிராஞ்ச் சி.ஐ.டி. அமைப்பு தனியாக உள்ளது; இதற்கு 'சிறப்புக் காவல்படை' மற்றும் ஒரு 'தனிப் பிரிவு' ஆகியவை உள்ளன.

தேசியப் பாதுகாப்புப் படையால் (என்.எஸ்.ஜி.) பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படை, நவீனக் கருவிகளுடன் கூடிய குண்டுகளைக் கண்டுபிடித்து அழிக்கும் படைகள் ஆகியவை தொடர்ந்து பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடி வருகின்றன. இந்தப் படைகளை இராணுவப் படைகளிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் நிர்வகித்து வருகின்றனர்.

**தீவிரவாத தடுப்பு சிறப்புப் பயிற்சிகள்!**

நுணுக்கமான ஆயுதங்களைக் கையாளுதல், குண்டுகளைக் கண்டுபிடித்து அழித்தல், அதிரடியாகச் செயல்பட்டு விடுவிக்கும் செயல்பாடுகள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு அதிரடிப்படை பள்ளி பயிற்சி அளிக்கிறது. திட்டமிடப்பட்ட குற்றங்கள் உளவுப் பிரிவு ஒன்றை அமைக்கவும் மாநில அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

ஒவ்வொரு நாளும், சட்டம் ஒழுங்கு நிலைமை மற்றும் மாநிலத்தில் இதர வளர்ச்சிப் போக்குகள் குறித்தும் மாநில உளவுப் பிரிவின் தலைவர் என்னிடம் தெரிவிக்கிறார். அவசரமான நிலைமை ஏற்படும்போது, தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், மாநில காவல்துறைத் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நிலைமையை ஆய்வு செய்ய ஆலோசனைக்கு அழைக்கப்படுகின்றனர். எங்களது மாநிலத்தில் மாநில ஆட்சியர்கள் மற்றும் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்களின் கூட்டம் காலம் தவறாமல் முறையாக நடத்தப்படுகிறது. மேலும் ஏதாவது தீவிரமான பிரச்சினைகள் எழுந்தால் உடனே நான் தொலைபேசியில் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு ஆலோசனை செய்கிறேன். 32 மாவட்டங்களைக் கொண்ட தமிழ்நாடு போன்ற ஒரு மாநிலத்தில் ஓரிரு மாதங்களில் ஒவ்வொரு மாவட்டத்

தலைநகரங்களிலும், மாவட்டங்களில் பாதுகாப்பு நிலைமையை ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியர், காவல்துறை ஐ.ஜி. போன்றோருடன் முதலமைச்சர் அல்லது உள்துறை அமைச்சர் கூட்டங்கள் நடத்துவது என்பது சாத்தியமான திட்டமாக இருக்காது.

மாபியா கும்பல்கள், நிலங்களைப் பறிப்பவர்கள், தேச விரோத சக்திகள் போன்றவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், தமிழக அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இத்தகைய நபர்களைச் சமாளிக்க சாராயம் காய்ச்சுவோர், போதைப்பொருள் குற்றவாளிகள், காடுகள் தொடர்பான குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சார குற்றவாளிகள், குடிசைகளைக் கைப்பற்றுவோர், வீடியோ திருட்டு குற்றவாளிகள் ஆகியோரின் ஆபத்தான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை உருவாக்கி, அமலாக்கி வருகிறது.

**பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படை குழுக்கள்**

பெரும் நிறுவனங்கள், அமைப்புகள் முக்கியமான கட்டடங்கள், கட்டமைப்புகள் போன்றவற்றைத் தெரிவு செய்து அவற்றின் பாதுகாப்பை ஆய்வு செய்துள்ளது. இந்த முக்கியமான நிறுவனங்கள், கட்டமைப்புகள் ஒவ்வொன்றிலும் சிறிய அதிரடிப்படை குழுக்களை நிறுத்துவதற்குப் பதிலாக திருநெல்வேலி, மதுரை, கோவை, திருச்சி, சேலம், சென்னை ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்க பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படைக் குழுக்களை அமைக்க மாநில அரசு திட்டமிட்டு வருகிறது.

**தமிழக அரசு எடுத்து வரும் உறுதியான, செயல் துடிப்பு மிக்க நடவடிக்கைகளால் மாநிலம் தொடர்ந்து அமைதியாக இருந்து வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.**

மாநில காவல்துறை எந்தச் சவாலையும் சந்தித்து எந்த நெருக்கடிகளையும் உடனடியாக எதிர்கொள்ளும் வகையில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். காவல்படையை மேலும் பொறுப்புள்ளதாகவும், நவீனமானதாகவும் ஆக்க

> **தேசவிரோத சக்திகள் ஊடுருவலைத் தடுக்க தீவிரமான கண்காணிப்பையும், நாட்டில் நுழையும் சக்திகளை முழுமையாக சோதிப்பதையும் உறுதி செய்ய மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.**

தமிழக அரசு மூன்று காவல்துறை கமிஷன்களை அமைத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசு கணிசமான நிதி ஒதுக்குகிறது; 2008–09 ஆம் ஆண்டில் மாநில காவல்துறைக்கு 2,427 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழக அரசின் சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள்!**

சமுதாயத்தின் ஒத்துழைப்பு அடிப்படையில் அமையாவிட்டால் எந்தவிதமான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையும் வெற்றி பெறாது என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். இதை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, மக்களின் அனைத்துப் பிரிவினரது சமமான வளர்ச்சியை உறுதி செய்யவும், பொருளாதாரப் பாகுபாடுகளைக் குறைக்கவும், ஏழை, எளிய பிரிவினர் மற்றும் சிறுபான்மையினர் பலனடைவதற்காக பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

இடதுசாரித் தீவிரவாதிகள் இருப்பதைக் கண்ட மாவட்டங்களில் சட்டத்தை அமலாக்கும் முயற்சிகளை ஊக்குவிப்பதுடன் எங்களது அரசு சிறப்பு சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது.

சட்டம் ஒழுங்கு நிலைமையைப் பராமரிக்கும் பொறுப்பை முழுமையாக நிறைவேற்றி வரும் மாநில அரசு, தானாகவே பல்வேறு நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளது. இருப்பினும், தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றை எதிர்த்துப் போராட மாநில அரசின் கைகளை வலுப்படுத்துவதற்காக மத்திய அரசு குறித்த காலத்தில் கணிசமான மத்திய உதவியின் முக்கியத்துவத்தை உணர வேண்டிய அவசியம் உள்ளது.

இவ்வளவு முயற்சிகள் இருப்பினும், நாட்டின் இதர பகுதிகளில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள போக்குகளால், தமிழக அரசு உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த அதன் உக்தியை மாற்றி அமைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. நீண்ட நெடிய சர்வதேச கடல் எல்லை மற்றும் இலங்கையில் நடைபெற்று வரும் உணர்ச்சிபூர்வமான போக்குகள் ஆகிய்வற்றால் இது மேலும் முக்கியமாகிறது.

தேசவிரோத சக்திகள் ஊடுருவலைத் தடுக்க தீவிரமான கண்காணிப்பையும், நாட்டில் நுழையும் சக்திகளை முழுமையாக சோதிப்பதையும் உறுதி செய்ய மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

கடல் எல்லையில் கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகளுக்கு உதவ மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று தேவையான கப்பல்கள், படகுகளுடன் கடற்படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகியவற்றை நிலைநிறுத்த உத்தரவிட்டமைக்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரையை ஒட்டி நீளமான, இடைவெளிகள் மிகுந்த கடல் எல்லையை நாட்டின் வடக்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளிலுள்ள சர்வதேச எல்லைகளுக்கு நிகராகப் பாவித்து, மத்தியப் படைகள், கடலோரக் காவல்படை மற்றும் கடற்படை ஆகியவற்றின் இருப்பை அதிகரிக்குமாறு பிரதமரைக் கேட்டுக் கொள்கிறேன்.

உளவுத் தகவல்கள் சேகரிப்பதன் தரத்தை மேம்படுத்த, அடிக்கடி தொடர்ந்து உளவுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள மத்திய மற்றும் மாநில உளவு அமைப்புகளிடையே நீடித்த ஒருங்கிணைப்பு அமைப்பை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. மாநில காவல்படைகளில் பயங்கரவாத, எதிர்பயங்கரவாத வல்லுநர்களைச் சேர்த்தல், பயங்கரவாதம் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான இதர விஷயங்கள் பற்றிய பொதுவான விவரங்களின் தொகுப்பை மத்தியில் உருவாக்கி அவற்றை மாநில அமைப்புகளும் அடையக் கூடிய வசதியை உருவாக்குதல், வெளிநாட்டு நிறுவனங்களில் பயிற்சி பெற மாநிலங்களிலிருந்து காவல்துறை அதிகாரிகளை அனுப்புதல் போன்றவை உளவுத் தகவல்கள் சேகரிப்பு மற்றும் பரிமாற்றத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்ப உதவும் சில நடவடிக்கைகளாகும்.

**மத்திய அரசின் பயிற்சி**

மத்திய–மாநில ஒருங்கிணைப்பு தேவைப்படுகிற மற்றொரு பகுதி, பணப்பட்டுவாடா மற்றும் போதைப் பொருள் கடத்தல் தொடர்பு அமைப்புகளை உடைப்பதும், அயல்நாட்டு நிதிகள் வருவதைக் கட்டுப்படுத்துவதும் ஆகும். இதுதொடர்பாக மேலும் அதிகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய தகவல்களை வருவாய் உளவு இயக்குநரகமும், அமலாக்கப் பிரிவும் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டும். அத்துடன் வெளிநாட்டினர் வந்தவுடன் புகைப்படம் எடுத்தல், அவர்களது கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்தல், ஆவணங்களை கவனமாகப் பரிசீலித்தல் போன்ற கடுமையான குடியேற்றக் கட்டுப்பாடுகளை உறுதி செய்வதும் அவசியமாகும். இணையதள அடிப்படையிலான

பாஸ்போர்ட் தகவல் முறையை மாநில உளவுப் பிரிவுகளுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

மேற்கூறிய நடவடிக்கைகள் தவிர, மாநில காவல் படைகளுக்குப் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், வளர்ச்சியடைந்த நாடுகள், மத்திய காவல் மற்றும் பாதுகாப்புப் படைகளின் நிறுவனங்களில் கடைப்பிடிக்கப்படும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும் மத்திய அரசு முன் வரவேண்டும்.

காவல்படைகளுக்கு நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்படும் நிதி போதுமானதாக இல்லாததால் மத்திய மாநில காவல்படைகளை நவீன மயமாக்கி மத்திய பட்ஜெட் கணிசமான நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டும். காவல்படைகள் நவீன மயமாக்கலின் ஒருங்கிணைந்த பகுதியாக, நவீன தாக்குதல் ஆயுதங்கள், பாதுகாப்புக் கவசங்கள், கண்காணிப்புச் சாதனங்கள், தகவல் தொடர்பு கருவிகள் ஆகியவற்றின் இருப்புக் கணக்கை எடுத்து மாநில அரசிடம் உள்ள முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட சிறப்பு பயங்கரவாத எதிர்ப்பு படைப்பிரிவினருக்கு வழங்கலாம்.

காவல்படைகள் நவீனமயமாக்கல் திட்டத்தில் பெருநகரப் பகுதியை நிறைவேற்ற மத்திய அரசு மிகவும் சிந்தித்து திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாகத் தேவையான அத்தியாவசியமான குறைந்தபட்ச தேவைகளைப் பற்றி விரிவான, விளக்கமான விவாதங்களுக்குப்பிறகு மத்திய அரசிடம் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைத் திட்டத்தில் சென்னை காவல்துறை 10 ஆண்டு காலத்திற்கான 7,377 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டம் ஒன்றை உத்தேசித்துள்ளது. இருப்பினும் இதில், மத்திய அரசு கேட்டுக்கொண்டபடி 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ந் தேதிக்கு முன்பாக நிறைவேற்றப்படுவதற்கான ரூ.149.6 கோடிக்கு ஆலோசனைத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க அனுமதி விரைவில் வழங்கப்படும் என்று நம்புகிறேன்.

ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டத்தின் 25 சத விகிதத்தை, குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்பு சக்திகள், எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றில் 25 சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய தேவைகளைக் கைவிடலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன். இது மாநில அரசுகள் பெருமளவிற்கு மிகச் சிறந்த வகையில் தயார் நிலையை உறுதி செய்ய உதவும்.

பெருநகரங்கள் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இலக்காக மாறி வருவதால் பயங்கரவாத எதிர்ப்புக்காக பாதுகாப்பு தொடர்பான செலவினங்களை உறுதி கூறப்பட்டுள்ள 10 ஆண்டுகளுக்கு மேலும் மத்திய அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். தேசிய அளவில் எதிர்க்கப்பட வேண்டியதான பயங்கரவாத அச்சுறுத்தலால் விடப்பட்டுள்ள சவால்களைக் கருத்தில் கொண்டு, இதர மாநில அரசுகளாலும் எனது கருத்து ஆதரிக்கப்படும் என்று நம்புகிறேன். தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிற்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டம் தொடர்பாக இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் உணர்வூட்டப்பட வேண்டிய அவசியத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாட்டிற்குள்ளிருந்தும், வெளியிலிருந்தும் தேச விரோத மற்றும் பிரிவினைவாத சக்திகள் உருவாக்கும் தடைகளைக் கடக்க வெற்றிகரமான போரைத் தொடுப்பதற்கும் இத்தகைய எந்த சவாலையும், தாக்குதலையும் ஒன்றுபட்டு எழுந்து நிற்கும் வலிமையான சக்தியாக இந்தியாவை உருவாக்குவதற்கும் என்னுடைய அரசின், தமிழ்நாட்டு மக்களின் முழுமையான ஆதரவை உறுதி கூறி பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

* * *

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தி

**தை**த்திங்கள் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளாக இந்த ஆண்டு முதல் கொண்டாடிடும் இனிய தமிழ்ச் சமுதாய மக்களுக்கு என் இதயம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

சாதி, மத, இன வேறுபாடு எதுவுமின்றி, உழைப்பைத் தந்து உதவியவர்களையும் எண்ணி உழவர் பெருங்குடி மக்கள் நன்றி தெரிவித்து வணங்கி மகிழும் இனிய திருவிழாவாக – மனித நேயம் வளர்க்கும் தமிழ்ச் சமுதாயத்தின் தலைசிறந்த பண்பாட்டினை உலகுக்கு உணர்த்திடும் மகத்தான திருவிழாவாக தைப்பொங்கல் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

இத்திருவிழாவுடன், 1921ஆம் ஆண்டில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில், தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் தலைமையில் கூடிய ஐநூறுக்கும் மேற்பட்ட தமிழறிஞர் பெருமக்கள் கூடி முடிவு செய்து அறிவித்தபடி, ''தைத்திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தொடங்கும் நாள்'' எனச் சட்டமியற்றப்பட்டு, இந்த ஆண்டின் பொங்கல் திருநாள் முதன்முதலாகத் தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளாக மிகுந்த எழுச்சியோடு கொண்டாடப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமையும் போதெல்லாம் தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்படுகின்றன; குறிப்பாக, உணவுப் பொருள்களை விளைவித்து உலகத்தார்க்கு அச்சாணியாகத் திகழும் உழவர் பெருமக்கள் உயர்ந்திடக் கூட்டுறவு விவசாயக் கடன் தள்ளுபடி; புதிய பயிர்க் கடன்களுக்கு வட்டி விகிதம் 9 விழுக்காடு என்பது 4 விழுக்காடாகக் குறைப்பு; கரும்புக்கும் நெல்லுக்கும் கூடுதல் விலைகள்; பயிர்க் காப்பீடுத் திட்டம்; நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம்; விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் எனப் பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இவையல்லாமல்,

*''தமிழனென்று சொல்லடா!*
*தலை நிமிர்ந்து நில்லடா!''*

-எனப்பாடி, இன உணர்ச்சியூட்டிய நாமக்கல் கவிஞரின் வழியில் – தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர் ஆகியோர் அறிவுறுத்திய நெறியில் தமிழ்மொழி, இன, மான, பண்பாட்டு உணர்வுகளைப் போற்றி வளர்த்திடும் விழைவோடு பூம்புகாரில் சிலப்பதிகாரச் சிற்பக் கலைக்கூடம், சென்னையில் வள்ளுவர் கோட்டம், கொல்லிமலையில் வல்வில் ஓரி சிலை, குமரிமுனையில் 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலை என்றெல்லாம் அமைத்துள்ளோம்! வரலாறு படைத்துள்ள தமிழறிஞர்களுக்கும், தமிழ் மன்னர்களுக்கும், மாவீரர்களுக்கும் தமிழகம் முழுவதும் திருவுருவச் சிலைகளும், மணி மண்டபங்களும் அமைத்துச் சிறப்புகள் செய்துள்ளோம்!

அந்த வரிசையில் தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளைத் தமிழகத்தில் வாழும் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் உவகை பொங்கிடக் கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்பதற்காக, அந்த மகிழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளும் நோக்கில் தமிழக அரசின் சார்பில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சர்க்கரைப் பொங்கல் தயாரிப்பதற்குத் தேவைப்படும் பொருள்களான அரை கிலோ பச்சரிசி, அரை கிலோ வெல்லம், பாசிபருப்பு 100 கிராம், முந்திரி, திராட்சை, ஏலக்காய் ஆகியவை 20 கிராம் அடங்கிய பை வழங்கப்பட்டுள்ளது.

''பத்தன்று; நூறன்று; பன்னூறன்று,
பல்லாயி ரத்தாண்டாய்த் தமிழர் வாழ்வில்
புத்தாண்டு, தைம்முதல்நாள், பொங்கல்
நன்னாள்!''

- எனப் புரட்சிக் கவிஞர் பாடியதற்கேற்ப மங்கிக் கிடந்திடும் பழந்தமிழ் மரபுகள் பொங்கிப் பெருகி எங்கும் தழைத்திடல் வேண்டும் என்னும் உணர்வோடு இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தைத்திங்கள் முதல்நாளைத் தமிழ்ப் புத்தாண்டு– பொங்கல் திருநாளாகக் கொண்டாடும் என் அருமைத் தமிழ் மக்கள் அனைவருக்கும், இதயங்கனிந்த நல்வாழ்த்துகளை மீண்டும் உரித்தாக்குகிறேன். ❖



# தமிழகத்திற்கு உடனடியாக ரூ.2,500 கோடி வழங்கிட ஆவனசெய்திடுக!

## வெள்ள நிவாரணம் முதலிய பணிகளுக்கு விரைந்து உதவிகள் வழங்கிட மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை

சென்னை துறைமுகத்திலிருந்து மதுரவாயல் சந்திப்பு வரை 1,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ள உயர்மட்ட மேம்பாலச் சாலை அடிக்கல் நாட்டுதல் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் தினம் முதலிய நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதற்காக 7.1.2009 அன்று இரவு சென்னை வந்திருந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்களை ஆளுநர் மாளிகையில் சந்தித்து பின்வரும் திட்டங்களுக்கு உடனடியாக நிதியுதவி வழங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

கடந்த நவம்பர் மாதத்தில் சென்னை உட்பட தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் வரலாறு காணாத அளவில் பெய்த பெருமழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்குவதற்காகத் தமிழக அரசு இதுவரை 950 கோடி ரூபாய் வெள்ள நிவாரணமாக வழங்கியுள்ளது. மத்திய அரசு ஏற்கெனவே 200 கோடி ரூபாய் முன்பணமாக வழங்குமென அறிவித்து; வெள்ளச் சேதத்தை பார்வையிடும் மத்தியக் குழுவின் அறிக்கை கிடைத்தபின் தேசிய பேரிடர் மற்றும் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து நிவாரண நிதி வழங்குவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டு நிதியுதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மத்தியக் குழு பார்வையிட்டு அறிக்கை அளித்த பிறகும், இதுவரை மத்திய நிதியுதவி கிடைக்காததால் மாநில அரசுக்கு ஏற்பட்டுவரும் சிரமத்தைக் கருதி தேசிய இயற்கைப் பேரிடர் மற்றும் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து ஆயிரம் கோடி ரூபாய் உடனடியாக விடுவிக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மதிப்புக் கூட்டு வரி தமிழகத்தில் 1.1.2007 முதல் நடைமுறைப்படுத்தியதால், தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுகட்டும் வகையில் மத்திய அரசு மாநில அரசுக்கு இழப்பீடு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

மத்திய விற்பனை வரியிலிருந்து மேலும் 1,000 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே, தமிழகத்திற்கு உடனடியாக 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் விடுவிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும்;

2006இல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு விவசாயிகளுக்கு ஏறத்தாழ ஏழாயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை இரத்து செய்தது. அதன் காரணமாக மாநில அரசுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் வகையில் 3 ஆயிரத்து 27 கோடியே 80 இலட்சம் ரூபாயும், மத்திய அரசின் விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடித் திட்டத்தின் கீழ் மேலும் 159 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 3 ஆயிரத்து 187 கோடியே 40 இலட்சம் ரூபாய் தமிழக அரசுக்கு அனுமதிக்குமாறும்:

தமிழகத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் ஒரு பிரிவினராக உள்ள அருந்ததியர் சமுதாயத்திற்கு தனி இட ஒதுக்கீடு வழங்கிட இந்திய அரசியலமைப்பின்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கான தேசிய ஆணையத்திடம் ஒப்புதல் கோரி அதன் தலைவர் டாக்டர். பூட்டாசிங் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்தக் கோரிக்கைக்கு ஒப்புதல் வழங்க ஆவன செய்யுமாறும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

சென்னை, மெட்ரோ இரயில் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதலை விரைவில் வழங்கிடுமாறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

# வள்ளூர் அனல் மின் திட்டம்

## (என். டி. பி. சி – தமிழ்நாடு மின்சார வாரிய கூட்டுத் திட்டம்)

மத்திய அரசு நிறுவனமான தேசிய அனல் மின் நிறுவனமும் தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து, திருவள்ளூர் மாவட்டம், வள்ளூர் கிராமத்தில் 2x500 மெகா வாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் அமைக்க, புரிந்துணர்வு ஒப்பந்தம் 12.07.2002 அன்று கையெழுத்திட்டிருந்தது.

இதற்காக என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் என்ற பெயரில் கூட்டு நிறுவனம் (என்.டி.இ.சி.எல்) 23.05.2003இல் பதிவு செய்யப்பட்டது.

இத்திட்டத்தில் மேலும் ஒரு 500 மெகாவாட் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டது. முதல் கட்டமாக, 2x500 மெகா வாட் திறனுள்ள நிலையமும் இரண்டாவது கட்டமாக 1x500 மெகா வாட் திறனுள்ள நிலையமும் அமைக்கபட உள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு சுமார் ரூ. 8,000 கோடி ஆகும்.

இத்திட்டத்திற்காக வள்ளூர் கிராமத்தில் மத்திய அரசின் உப்புத் துறைக்குச் சொந்தமான சுமார் 1,000 ஏக்கர் உப்பள நிலம் கண்டறியப்பட்டு மேற்படி நிலம் மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் இத்திட்டத்திற்கு வழங்க அனுமதி அளித்துள்ளது. மேலும் முதல் கட்டத்திற்கான திட்டத்திற்கு மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சக அனுமதி உள்பட எல்லா அனுமதிகளும் பெறப்பட்டு உள்ளது.

இரண்டாவது கட்ட திட்டத்திற்கு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் 05.03.2008இல் பொதுமக்கள் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தியுள்ளது. மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சக அனுமதி விரைவில் பெறப்பட உள்ளது.

**வடசென்னை அனல் மின் திட்டம்–இரண்டாம் கட்டம்–முதல் அலகு (1x600 மெகாவாட்) – கொதிகலன் தூண்கள் நிறுவும் பணி துவக்க விழா.**

தமிழ்நாட்டின் தற்போதைய மின்சார தேவை 9,500 மெகாவாட் ஆகவும், மின் உற்பத்தி 8,012 மெகாவாட் ஆகவும் உள்ளது. அதிவேக தொழில் வளர்ச்சி காரணமாக மேற்கண்ட மின்தேவை அதிகரித்து 2011–12ஆம் ஆண்டில் 13,250 மெகாவாட் என இருக்கும்.

தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு மின்சார வாரியமும் இணைந்து மேற்கண்ட மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்து தமிழகத்தை மின் பற்றாக்குறை இல்லாமல் கூடுதல் மின் உற்பத்தி கொண்ட மாநிலமாக 2011–12ஆம் ஆண்டு கீழ்க்கண்ட அனல்மின் திட்டங்களை உருவாக்கி வருகிறது.

| | | |
|---|---|---|
| வடசென்னை அனல் மின் திட்டம் | 2 x 600 மெகாவாட் | ரூ.5,813 கோடி |
| மேட்டூர் அனல் மின் திட்டம் | 1x600 மெகாவாட் | ரூ.3,550 கோடி |
| வள்ளூர் வடசென்னை அனல் மின் திட்டம் (தேசிய அனல் மின் கழகத்துடன் இணைந்தது) | 3x500 மெகாவாட் | ரூ.8,000 கோடி |
| தூத்துக்குடி அனல் மின் திட்டம் (நெய்வேலி பழுப்பு நிலக்கரியுடன் இணைந்தது) | 2x500 மெகாவாட் | ரூ.4,909 கோடி |

**வடசென்னை அனல் மின் திட்டம்**

வடசென்னை அனல் மின் திட்டமானது ரூ.5,813 கோடி செலவில் 600 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுடைய இரண்டு அலகுகள் கொண்டதாக அமையவுள்ளது. இதில் முதலாவது அனல் மின் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 02.07.2007 அன்று அடிக்கல் நாட்டினார்.

# இளையோன் எதற்கும் இளையான்

- கலைஞர்

கலகலவெனக் காலில் ஒலித்த
சதங்கையைக் கழற்றி; வீரக்
கழலினை அணிந்த இளங்கன்று அவன்!
பின்னிச் சடையிட்ட நீள்குடுமி களைந்து
மின்னிடும் வாளேந்தி நிற்கின்ற சிறுவன் அவன்!
மெல்லிய கரங்களில் எழில் வளையல் நீக்கி
வில்லினைத் தோளில் தாங்கிய இளைஞன் அவன்!
ஐம்படைத் தாலியினை இன்னும் மார்பில் பூண்ட
அறியாப் பருவத்தினன் அவன்!

பாண்டிய மரபில் வந்த அந்தப் பாலகனோ
பலமுண்டு பகையழிக்கத் தன் தோளுக்கென்று
படை நடத்தத் தலைமை ஏற்றான்;
பார் அதிர முரசொலித்தான்!
கடும் எதிர்ப்பின் தலை மிதிக்கப் புறப்பட்டுக்
களம் சென்று வெல்வேன் என்று சூளுரைத்தான்!
நெடுஞ்செழியன் என்கின்ற பெயருடையான்;
நிமிர்ந்த தலை வளையாத புகழுடையான்!
உடைவாள் ஓங்கி உறுமுகின்ற அச்சிங்கக் குட்டிதனை
இடைக்குன்றூர் கிழார் எனும் புலவர், இவ்வாறு
பலபடப் பாராட்டி வாழ்த்துப் பாடி
பால்மணமும் மாறாத பச்சிளம்பசலை என்றார்.
அந்தப் பாண்டிய இளவலைப் பாடி மகிழ்ந்த
செந்தமிழ்ப் பாவலர் பல்லோர் ஆவர்!

குன்றூர் கிழார் மற்றும் குறுங்கோழியூர்க் கிழார்,
குடபுலவியனார், கல்லாடனார்–மதுரைக்
கணக்காயனார் மகன் நக்கீரனார்–அவன்
கொலுமண்டபத்துப் புலவர் ஏறு
மதுரைக் காஞ்சி பாடிய
மருதனார் என்னும் மாங்குடிக் கிழார்;
இத்தனைச் சான்றோர் தமிழ்க்கவி கேட்டு
பத்தரை மாற்றுப் பசும்பொன் பாண்டியன்
சித்திரத் தமிழால் கவிதை யாத்திடும்
சிறப்பினைப் பெற்று செருக்களம் புகுந்தவன்!

வயதில் இளையோன் பாண்டியன் என்று,
வலியோர் ஐந்து வேளிர் துணையுடன்;
சேர சோழ முடிமன்னர் இருவர்,
போரில் குதித்து ஓலை அனுப்பினர்!
வேளிர் வேந்தர் ஐவர் படையும்
வில், புலி பொறித்த கொடியுடை மன்னர்

இருவர் படையும் இணைந்து மோதிட;
எழுவரை எதிர்க்க இயலுமோ என்று
இளைஞன் பாண்டியன் கலங்கவே இல்லை!



"ஒடுங்கி அடங்கிடுக! அல்லால்; உயிர்
ஒழிந்து போக நேரிடும்!" என்ற
ஓலை கண்டு உரக்கச் சிரித்தான்!
ஒளிந்திடும் மரபல்ல போருக்கென்றான்!

"இளவயது எனக்கென்று ஏளனம் புரிகின்றார்
எதிர்ப்போர் வயதும் படையும் என் முன்னே
எப்பாடு படப் போகின்றதென்று
இக்கணமே தெரிவிக்கின்றேன்!
ஓலை கொண்டு வந்தவனே! உடன்
ஓடு நீ; உன் ஏழு மன்னரிடம்! வீர
வேலை, கரம் ஏந்திவிட்டான்; இந்த
விடலையாம் செழியன் என்று நான்
விடை தந்ததாக அறிவித்திடுக!" என்றான்!
"தலையாலங்கானத்துப் போர்க்களம் புகத்
தயாராகட்டும் தென்பாண்டியப் படை" என்றான்!

## அப்போது,

மாங்குடி மருதனார் இடைமறித்து, "பாண்டி
மன்னர் குலக் கொழுந்தே! இந்தப் பாவலன்,
மறுப்பதாக எண்ண வேண்டாம்...
மாற்றார் வலிமையினைக் காணும்போது
தோற்றோம் இறுதியில் நாம் என்றே முடிவு வரும்!
எச்சரித்தல் என் கடமையென்ற காரணத்தால்,
இனியும் சிந்தித்துப் போர்தவிர்த்தல் நலமாகும்" என்றார்!

மீன்கொடிப் பாண்டியனோ; மாங்குடி
மருதனார் மொழி கேட்டு, அவர் முன் சென்று;
மான்குட்டி போல் இருக்கின்றேன், அதனாலே
மாற்றார் எனும் புலிப்போத்தின் வாய்க்குள்ளே
இரையாக மாறிப்போவேன் என்று
இரங்கலுரை இப்போதே ஆற்றுகின்றீர்
அச்சம் தவிர்த்திடுக அய்யனே! இறந்த பின்னர்
எச்சமெனத் தமிழன் விட்டுச் செல்வது மானமொன்றே!
அந்த மானத்தைப் பகைவர் காலடியில் பூவாக்கிப்
போட்டுவிட்டு,

சொந்த வாழ்க்கைதனை சுகமாக ஆக்கிக் கொள்வோன்
சோற்றாலடித்த பிண்டமாவான்–நூல் அறுந்த
காற்றடிப் பட்டமாவான்!

தமிழுக்குத் தலைவணங்கும் நெடுஞ்செழியன் நான்;
தகவிலார்க்குத் தலைவணங்க ஒப்பமாட்டேன்!
எழுவரென்ன எழுபது கோடிப் பேர்
எட்டுத் திசையும் முரசு கொட்டி,
எதிர்க்க வரினும் என்னை–இந்த
இளையோன் எதற்கும் இளையான் என்ற
இலக்கியத்தைப் படைக்கின்றேன் போர்க்களத்தில்!

பாண்டியத்துப் பெருமண்ணில், வெறும்
ஆண்டிகளோ வாழ்கின்றார் ? இல்லை! இல்லை!
குலமாதா பாண்டித்தாய்; கோழைகளைக்
குழந்தைகளாய்ப் பெற்றெடுக்கவில்லை! இந்த
நிலமகளின் பெருமைக்கு மேலும் பெருமை,
நெடுங்செழிய இளைஞனவன் சேர்ப்பான் என்று
நம்பிடுவீர்; நாட்டோரே! நல்லோரே!" என முழக்கி;
'நகுதக் கனரே நாடு மீக்கூறுநர்' எனும்
நரம்பெலாம் வீரம் மீட்டும் புறப்பாட்டை
நாடாளும் இளமன்னன் இயற்றலானான்!



**அப்பாட்டில்,**


"அணிதேர்ப் புரவியும் ஆனைகளுடனே
ஆட்பெரும்படையும் மிகக் கொண்டதால், நம்மை;
இழித்தும் பழித்தும் ஏளனம் செய்தும்
இளையோன் என்றும் சிறுமொழி கூறிய
எதிரிகள் எழுவரின் இடுப்பை ஒடித்து
தலையாலங்கானப் போரில் வென்று–அவர் தம்
அலைகடற் படையை அறவே அழித்து
நிலைகுலைந்த பகைவரை முரசொடு பிடித்து
மலையென நிமிர்ந்து நிற்பேன் கண்டீர்!
எழுவரிடம் எதிர் நிற்க முடியாமல் நான்
விழுவதானநிலையொன்று தோன்றுமாயின்
குடிமக்கள் நலம் பேணாக்
கொடுங்கோல் மன்னன் எனக்
குவலயம் எனைத் தூற்றட்டும்!

தோல்வி என்னைத் தழுவுமாயின்
தொழுதேத்தி எனை நாடி
இல்லையென்று இரப்போர்க்கு
எதுவும் வழங்காத பாவியென
வையகம் இகழுமளவுக்கு
வறுமை வந்தென்னை வருத்தட்டும்!

வெற்றி மாலை என் தோளை வெறுத்து விட்டால்
உற்றார் அனைய எளியோரின் துயர்போக்க
உதவிட முடியா நிலை எனை வந்தடையட்டும்!
மாற்றார் கை ஓங்கி நிற்க—நம்
மறவர் படை தாழ்ந்து விட்டால்,
மாங்குடி மருதனார் தலைமை தாங்க
மாங்குயிலோசைத் தமிழ் மொழியில்
பாப்புனையும் பாவாணர் அனைவருமே
பாண்டியத்தை இனிப்பாடுவது சிறப்பல்ல என்று
இந்த
நெடுஞ்செழியப் பாண்டியனை நீங்கி
நெடுந்தொலைவு சென்றிடட்டும்!"

இவ்வண்ணம் சூளுரைத்த பாண்டி மன்னன்
செவ்வண்ணம் கண்ணில் தேக்கி—படைக்குத்
தலைமையேற்றுச் சென்றிட்டான்;
தலையாலங்கானப் போர்முனை நோக்கி!

❖ ❖ ❖



சூளுரைக் கவிதையைப் பாண்டியன்
சுளைத் தமிழில் வடித்தபோதும்;
சுற்றத்தார் அனைய எளியோர் காத்தல்,
கொற்றவர்க்குரிய கொடையளித்தல்,
பற்றுக் கொளல் குடிமக்கள்பால்,
கற்றறிந்த புலவர் கூட்டம், நாடு போற்றிக்
கவிபுனைதல் – இந்நான்கும்,
உயிரே போல் கருதி வாழ்ந்த
உயர்தனிப் பண்பாட்டையன்றோ
உறுதியாக உரைக்கின்றான்!
இதையெண்ணி மகிழும் காலை—நம்
இதயம்; தமிழ் உணர்வால் மலரும் சோலை!

❖ ❖ ❖

"நகுதக் கனரே, நாடுமீக் கூறுநர்;
இளையவன் இவன் என உளையக் கூறிப்,
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும், தேரும், மாவும்,
படைஅமை மறவரும், உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது, உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்குஅகப் படேஎன் ஆயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன்எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்,
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக,
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக, என் நிலவரை;
புரப்போர் புன்கண் கூர,
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே"

**(புறநானூறு : பாடல் : 72**
**பாடியவர் : தலையாலங்கானத்துச் செருவென்ற**
**பாண்டியன் நெடுஞ்செழியன்)**

பொருள் விளக்கம் :


நகுதக்கனர் = சிரிக்கத் தக்கவர்.
மீக்கூறுதல் = அதிகமாகப் புகழ்தல்.
உளையக் கூறி = வெறுத்து வருந்துமாறு சொல்லி.
பாவடிப் பணைத்தாள் நெடுநல் யானை = பரந்த அடியும் பெரிய காலுங் கொண்ட உயர்ந்த யானை.
உறுதுப்பு அஞ்சாது = என் மிகுந்த வலிமைக்கு அஞ்சிடாமல்.
வரைக என் நிலவரை = என் நாட்டை விட்டு நீங்குக.
புரப்போர் புன்கண் கூர = சுற்றத்தார் போல் பாதுகாக்கப்பட வேண்டியவர்களின் துயரம் மிகுந்திட.

**(கலைஞரின் 'சங்கத் தமிழ்' நூலிலிருந்து....)**

❖ ❖ ❖

# ஆளுநர் உரை கலைஞர் அரசின் திசை காட்டும் கருவி!

தமிழக சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள்
ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
30.1.2009 அன்று ஆற்றிய உரை.



ஜனவரி 21 ஆம் தேதி, ஆளுநர் அவர்கள் 2009 ஆம் ஆண்டிற்கான உரையினை ஆற்றியிருக்கிறார்கள். சமூக நீதிக் காவலரும் இந்தியத் திருநாட்டினுடைய முன்னாள் பிரதமருமான வி.பி.சிங் அவர்களுடைய மறைவிற்கு இரங்கல் தீர்மானத்தை 22 ஆம் தேதி நாம் நிறைவேற்றியிருக்கிறோம். அதைத் தொடர்ந்து, 28 ஆம் தேதி இந்தியாவினுடைய முன்னாள் குடியரசுத் தலைவரும், தமிழக முன்னாள் அமைச்சருமான, ஆர். வெங்கட்ராமன் அவர்களுடைய மறைவிற்கு இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். 23, 27, 28, 29 ஆகிய நாட்களில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்றிருக்கிறது. தொடர்ந்து இன்றும் நடைபெற்றிருக்கிறது. இந்த விவாதத்திலே நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்தவர்கள், நன்றி தெரிவிக்க மறுத்தவர்கள், தீர்மானத்தை எதிர்த்துப் பேசியவர்கள் எனப் பல்வேறு கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய உறுப்பினர்கள், பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி அவைகள் ஓரளவுக்கு பதிலளிக்க வேண்டிய கட்டத்தை இப்போது நாம் எட்டியிருக்கிறோம்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம், மாண்புமிகு உறுப்பினர் கு. பிச்சாண்டி முன்மொழிய, மாண்புமிகு உறுப்பினர் கே. சுந்தரால் வழி மொழியப்பட்டிருக்கிறது. ஆளுங்கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கு. பிச்சாண்டி, திரு. இரா. இராஜேந்திரன், திரு. அ. சௌந்திரபாண்டியன், திருமதி. லதா அதியமான், திரு. டி. செங்குட்டுவன் ஆகியோர் ஏறக்குறைய ஒரு மணிநேரம் 22 நிமிடம் பேசியிருக்கிறார்கள்.

அதேபோல எதிர்க்கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய அ.தி.மு.க.–வினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. ஜெயக்குமார், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திருமதி பதர் சயீது, திரு. வி.பி. கலைராஜன், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. மா. சந்திரகாசி, திரு. இரா. விஸ்வநாதன் ஆகியோர் 3 மணி 18 நிமிடங்கள் இங்கே பேசியிருக்கிறார்கள்.



பேசியிருக்கிறார். ஆக மொத்தம் இந்த விவாதத்திலே 37 பேர் 11 மணி 40 நிமிடங்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே அவரவர்கள் அவர்களுக்குரிய பாணியிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

வழக்கமாக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தினந்தோறும் தவறாமல் இந்த அவைக்கு வருகை தந்து, ஒவ்வொரு உறுப்பினரும் என்ன பேசுகிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கேட்டு, அவைகளையெல்லாம் குறிப்பெடுத்துக்கொண்டு, அதைத் தொடர்ந்து அதிகாரிகளோடு விவாதித்து, பதிலுரையைப் பாங்கோடு தயாரித்துப் பேசுவது அவருடைய வழக்கம்.

அதேபோல காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பெ.சு. விஜயகுமார், திரு. விடியல் எஸ். சேகர், திரு. பா.வேல்துரை, திரு. மா. ராஜசேகரன், திரு. எச். வசந்தகுமார், திருமதி. டி. யசோதா ஆகியோர் 2 மணி 14 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

அதேபோல பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோ. எதிரொலி மணியன், திரு. பா. செந்தமிழ்ச் செல்வன், திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன், திரு. கோ.க. மணி 1 மணி 42 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.கே. மகேந்திரன், திரு.வே. மாரிமுத்து, திருமதி. ரா. லீமாரோஸ், செல்வி கே. பாலபாரதி ஆகியோர் 1 மணி 02 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சு. குணசேகரன், திரு.தி. இராமசாமி, திருமதி பி. பத்மாவதி, திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர் 1 மணி 04 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

ம.தி.மு.க.–வைச் சார்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.ஆர். ஞானதாஸ், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ரா. வரதராஜன், திரு. இராமகிருஷ்ணன் ஆகியோர் 43 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் 15 நிமிடங்கள்

முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தசைப் பிடிப்பு காரணமாக, அதனால் ஏற்பட்ட வலியின் காரணமாக மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுத் தொடர்ந்து சிகிச்சையை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அதனால் இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கிறார்கள். 'பொன் இருக்க வேண்டிய இடத்திலே ஒரு பூவை வையுங்கள்' என்று சொல்வார்களே, அதைப்போல

காவியத்திற்குப் பதில் கவிதை,
கடலுக்குப் பதில் நதி,
கல் தேருக்குப் பதில் மரத் தேர்,
கருவூலத்திற்குப் பதில் சிறு நிதியம்,
இதிகாசத்திற்குப் பதில் சிறுகதை,
இமயத்திற்குப் பதில் குன்றம்,
விருட்சத்திற்குப் பதில் விதை,
விருந்திற்குப் பதில் செவ்விளநீர்

– என்பதைப்போல தலைவருக்குப் பதில் இந்தத் தொண்டன் இன்றைக்கு உரையாற்றக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

**முதல்வர் கலைஞரின் பண்பும் – எளிமையும்**

இந்த நேரத்திலே இப்போது எனக்கு இரண்டு செய்திகள் நினைவுக்கு வருகின்றன. ஒன்று கவியரசர் கம்பருடைய அவை அடக்கப் பாடல்.

"ஓசை பெற்றொரு பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும்

நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் மற்று இக்
காசில் கொற்றத்து இராமன்
கதை அரோ''

அதாவது ஒரு பூனை தனது நாவினால் நக்கி பாற்கடல் முழுவதையும் குடிக்க ஆசைப்பட்டதைப்போல இராமாயணத்தை எழுத ஆரம்பிக்கிறேன் என்று கம்பர் கூறுகிறார். இரண்டு, நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் திருக்குறளுக்கு உரை எழுதுகிறபோது, முகவுரையிலே குறிப்பிட்டிருக்கிறார். இமயமலைக்குப் பொன்னாடை போர்த்துகிற முயற்சியிலே ஈடுபடுவதும், திருக்குறளுக்கு உரை எழுதுவதும் ஒன்றுதான் என்பதை நான் அறியாதவன் அல்ல என்று தன்னுடைய அடக்கத்தை வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார். அந்தப் பண்பும், எளிமையும்தான் இப்பொழுது இந்த நேரத்தில் எனக்கு நினைவுக்கு வந்துகொண்டிருக்கிறது.

பதிலுரைக்கு வருவதற்கு முன்பு ஒரு செய்தி. தமிழ், இந்தி போன்ற பல்வேறு இந்தியப் படங்களுக்கு மிகச் சிறப்பாக இசை அமைத்து பல்வேறு விருதுகளைப் பெற்ற இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் அவர்கள் Slum Dog millionaire என்ற ஆங்கிலப் படத்திற்கு இசை அமைத்ததற்காக உலகப் புகழ் பெற்ற Golden club விருது கிடைத்ததற்காகவும், இந்திய திரைப்பட இசையின் புதிய அனுபவம் என்கிற மதிப்பீட்டின் அடிப்படையில், ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருப்பதற்காகவும், தமிழகத்தின் பெருமையையும், புகழையும் உலகத்தின் உச்சிக்கு எடுத்துச் செல்லும் ஏ.ஆர். ரஹ்மான் அவர்களுக்கு இந்த அவையின் ஏகோபித்த பாராட்டு தலையும், வாழ்த்துகளையும் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இலக்கியத் துறையிலே சிறுகதை இலக்கிய ஏந்தல் டி.ஜெயகாந்தன், கலைத் துறையிலே வி. கணபதி ஸ்தபதி, வி.பி. தனஞ்செயன், திருமதி சாந்தா தனஞ்செயன், அறிவியல் மற்றும் பொறியியல் துறையிலே காஞ்சிபுரம் ஸ்ரீரங்காச்சாரி சேஷாத்திரி, சமூக சேவைத் துறையிலே டாக்டர். திருமதி சரோஜினி வரதப்பன் ஆகிய 6 சான்றோர்கள் தமிழகத்தின் சார்பில் இந்தியக் குடியரசுத் தலைவரின் இந்த ஆண்டுக்கான பத்ம பூஷன் விருதுக்கும், கலைத் துறையிலே ஐராவதம் மகாதேவன், நடிகர் விவேக், திருமதி. அருணாசாய்ராம், டாக்டர். சுப்பிரமணிய கிருஷ்ணசாமி, மருத்துவத் துறையிலே பேராசிரியர்

**3 இலட்சத்து 32 ஆயிரத்து 91 இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படுவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? அருந்ததியருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு சொல்லியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? அமைப்புச் சாரா தொழிலாளர்களைப் பற்றி கூறியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லை?**

தணிகாசலம் சடகோபன், பி.ஆர். கிருஷ்ணகுமார், டாக்டர். ஆர். சிவராமன், டாக்டர். ஷேக் காதர்நூருதின், வணிகம் மற்றும் தொழில் துறையிலே ஆறுமுகம் சக்திவேல் ஆகிய 9 சான்றோர்கள் தமிழகத்தின் சார்பில் இந்தியக் குடியரசுத் தலைவரின் இந்த ஆண்டுக்கான பத்மஸ்ரீ விருதுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது தமிழகத்திற்கு பெருமையும், மகிழ்ச்சியும் தரத்தக்கதாகும். குடியரசுத் தலைவரின் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய அவர்கள் அனைவருக்கும் இந்த அவையின் ஏகோபித்த பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மக்கள் நலத்திட்டங்கள்**

பல்வேறு பத்திரிகைகள், இந்த ஆளுநர் உரையைப் பற்றி, அதேபோல் பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக் கூடிய தலைவர்கள், இந்த அவையிலே இருக்கக்

கூடியவர்களும், அதேபோல வெளியிலே இருக்கக்கூடியவர்களும், பல்வேறு கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே முக்கியமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வமான ஏடு தீக்கதிர். அந்த தீக்கதிர் பத்திரிகையில் வந்திருக்கக்கூடிய ஒரு தலையங்கம். அந்த தலையங்கத்திற்குத் தலைப்பு பிரச்சினைகளை மூடும் உரை, தமிழக ஆளுநர் உரை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த தலையங்கத்திலே குறிப்பிடுகிறார்கள்.

அறிவிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக மக்களுக்காக நலத்திட்டங்கள் எதுவும் இல்லையென்று சொல்லி குறிப்பிடுகிறார், என்ன காரணம்? இப்போது அவர்கள் அ.தி.மு.க. கூட்டணி.

கடந்த ஆண்டு இதே தீக்கதிர் பத்திரிகையிலே கடந்த ஆண்டு இந்த அவையிலே தாக்கல் செய்யப்பட்ட ஆளுநர் உரையைப் பற்றி என்ன எழுதி இருக்கிறது தெரியுமா? திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் நேரத்திலே வழங்கியிருக்கக்கூடிய வாக்குறுதிகளை பெருமளவில் நிறைவேற்றி வருகிறது. ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு



உயிர் காக்கும் உயர் சிகிச்சைக் காப்பீட்டுத் திட்டத்தைப் பற்றி குறிப்பிடும்போது திட்டம் எத்தனை பேருக்குச் சென்று அடையும் என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். இந்தக் கேள்விக்குத் தலையங்கம் வந்திருக்கக்கூடிய அந்தப் பத்திரிகையிலே, அதே பக்கத்திலேயே அந்தக் கட்சியினுடைய மாநிலச் செயலாளராக இருக்கக்கூடிய மதிப்பிற்குரிய வரதராஜன் அவர்கள் அவரே ஒரு செய்தியிலே சொல்கிறபோது, பதில் சொல்கிறார். இந்தக் காப்பீட்டுத் திட்டத்தால் 1 கோடி குடும்பத்தினர் பயன் அடைகின்றனர் என்று அவரே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் கூறுகையில் உயர் சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டம் மட்டும்

வழங்குவது வரவேற்கத்தக்கது. 20 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள். 15,083 கோடி ரூபாய்க்கு அந்நிய முதலீடுகள் பெறப்பட்டுள்ளது. 1,39,140 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று ஆளுநர் உரை தெரிவிக்கிறது என்று சொல்லிவிட்டு ஒரு கட்டத்திலே இன்னொன்றையும் குறிப்பிடுகிறார். ஏற்கெனவே இருந்த அ.தி.மு.க. ஆட்சி எதையும் செய்யாத நிலையில் இது மிக மிகப் பாராட்டுக்குரிய ஒன்று என்று அன்றைக்குச் சொன்னார். அப்போது நம்முடைய கூட்டணி.

மார்க்சிய கட்சியினுடைய மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்கள் இப்பொழுது என்ன சொல்கிறார்

தெரியுமா? ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் திட்டத்தைத் தவிர மக்கள் பிரச்சினைகளைப் பற்றி ஆளுநர் உரையில் எதுவும் இல்லை என்று குறிப்பிடுகிறார். அதுமட்டு மல்ல, இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய அதிகாரபூர்வமான ஏடாக இருக்கக்கூடிய ஜனசக்திப் பத்திரிகை, அதிலே தலையங்கம், அந்த தலையங்கத்திற்குத் தலைப்பு, சம்பிரதாயச் சடங்கு என்று தலைப்பிட்டு அதிலே கட்டுரை வருகிறது. நான் கேட்பது 3 இலட்சம் விவசாயிகளுக்கு 279 கோடி ரூபாய் ஏற்கெனவே பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின்படி வழங்கியிருக்கிறோம், அது வரும் நிதியாண்டிலும் தொடரும் என்று சொல்லியிருக்கிறோம். இது மக்கள் பிரச்சினை இல்லையா? நெல், கரும்புக்கு கொள்முதல் விலை உயர்த்தப்பட்டிருக்கிறதே இது என்ன சம்பிரதாயச் சடங்கா? நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு 369 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது மட்டுமல்ல நெல்லையிலே அடிக்கல் நாட்டப் போகிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா?

**சமூக வளர்ச்சிப் பணிகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகம் பாரம்பரிய சிறப்புடையதாகும். அது இந்த தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலமாக பரிணாமத்தைக் கொண்டிருக்கிறது என்று Frontline ஏடு பாராட்டுகிறது. அதுமட்டுமல்ல திட்டக்குழு, இந்த திட்டத்தைப் பற்றி என்ன சொல்கிறது என்று சொன்னால் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை பொறுத்தவரைக்கும் மாநில அளவிலேயே இராஜஸ்தான், திரிபுரா, தமிழ்நாடு இந்த மூன்று மாநிலங்கள்தான் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று பாராட்டுச் சான்றிதழை வழங்கியிருக்கிறது.**

காவிரி ஆற்றினுடைய குறுக்கே கட்டளையில் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கதவணை அணைக்கும் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கப்படவிருப்பதாக வெளியிடப்பட்டிருக்கிறதே இது என்ன சம்பிரதாயச் சடங்கா? இது மக்கள் பிரச்சினை இல்லையா? படிப்படியாக முழு மதுவிலக்கிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுமென அறிவித்திருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? 2 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளதே இது என்ன சம்பிரதாயச் சடங்கா? இலங்கைத் தமிழர் பற்றி மத்திய அரசைக் காலந்தாழ்த்தாது அந்தப் பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோமே இவைகள் எல்லாம் மக்கள் பிரச்சினைகள் இல்லையா? சேதுசமுத்திர திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தர மத்திய அரசிற்கு கோரிக்கை வைக்கிறோமே இது என்ன மக்கள் பிரச்சினை இல்லையா? வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து 4 பத்திகள் இந்த புத்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறதே இவைகள் எல்லாம் மக்கள் பிரச்சினைகள் இல்லையா? பெருமழை பெய்யும்போது நிரந்தரப் பாதுகாப்புத் திட்டங்களை ரூபாய் 211 கோடிக்கு ஒரு திட்டத்தையும் 1,560 கோடி ரூபாயிலே மற்றொரு திட்டத்தையும் பத்தி 13–லே குறிப்பிட்டிருக்கிறோமே இது என்ன மக்கள் பிரச்சினை இல்லையா? 1 கோடிக்கு மேற்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகளை இலவசமாக வழங்கியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? கூட்டுக் குடிநீர் திட்டத்தைப் பற்றியும், கடல் நீரைக் குடிநீராக்கக் கூடிய திட்டத்தைப் பற்றியும் குறிப் பிட்டிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா?

தந்தை பெரியார் சமத்துவபுரம், மெட்ரோ இரயில் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இவைகள் எல்லாம்

சம்பிரதாயச் சடங்குகளா? இவை எல்லாம் மக்கள் பிரச்சினைகள் இல்லையா? **3இலட்சத்து 32 ஆயிரத்து 91 இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படுவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? அருந்ததியருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு சொல்லியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? அமைப்புச் சாரா தொழிலாளர்களைப் பற்றி கூறியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லை?**

3இலட்சத்து 32 ஆயிரத்து 91 இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படுவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? அருந்ததியருக்கு 3 சதவிகித உள் ஒதுக்கீடு



சொல்லியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லையா? அமைப்புச் சாரா தொழிலாளர்களைப் பற்றி கூறியிருக்கிறோமே இது மக்கள் பிரச்சினை இல்லை?

அரசு அலுவலர்கள் கடந்த கால ஆட்சியிலே எஸ்மாவைத்தானே சந்தித்தார்கள். ஆனால் தற்போது 4,247 கோடி ரூபாய் அளவுக்கு நிலுவைத் தொகையை கொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறோமே அது மக்கள் பிரச்சினை இல்லையா? அரசு அலுவலர்கள் என்ன மக்கள் கணக்கிலே சேர மாட்டார்களா?

செம்மொழியைப்பற்றியும், தமிழ்ப்புத்தாண்டைப் பற்றியும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டைப்பற்றியும் சிறுபான்மையோர் நலன் பற்றியும் பத்திபத்தியாய் ஆளுநர் உரையிலே சொல்லப் பட்டிருக்கிறதே இவைகள் எல்லாம் மக்கள் பிரச்சினைகள் இல்லையா? ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கிய போது அப்பொழுது வாழ்த்தினீர்கள். பாராட்டினீர்கள். இப்பொழுது ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்குகிறபோது ஊரே வாழ்த்துகிறது. ஊரே பாராட்டுகிறது. ஆனால் நீங்கள் மட்டும் இப்பொழுது விமர்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதற்கு என்ன காரணம் வேறு ஒன்றும் காரணம் இல்லை. சிம்பிள் காரணம். இப்போது நீங்கள் அ.தி.மு.க. கூட்டணி. அவ்வளவுதான்.

**இலவச நிலம் – இலவச வீட்டு மனைப்பட்டா**

அடுத்து, பட்டா பிரச்சினை. இந்தப் பட்டா பிரச்சினையை இன்றைக்கு ஒரு அரசியல் நோக்கத்தோடு ஆங்காங்கே போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடத்தக்கூடிய அந்த நிலையை நாம் பார்க்கிறோம். அதற்கு ஒரு விளக்கத்தைத் தர நான் விரும்புகிறேன். 1996–2001, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அப்பொழுது இலவசமாக வீட்டுமனைப்பட்டாக்கள் 9 இலட்சத்து 50 ஆயிரத்து 449 பேருக்கு வழங்கப்பட்டது. அதற்கடுத்து

**1,050 ரூபாய் என்று சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய அரசு உயர்த்தியதும் உங்களுக்கும் தெரியும். மீண்டும் உயர்த்த வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை வந்துகொண்டிருக்கிற காரணத்தால், அதையும் ஏற்றுக் கொண்டு 1,100 ரூபாய் நிர்ணயம் செய்தது மட்டுமல்ல, போக்குவரத்துக் கட்டணம் என்று அந்தத் தலைப்பிலே 90 ரூபாயும், சர்க்கரைக் கட்டுமான ஊக்கத் தொகை என்ற தலைப்பிலே சராசரியாக 30 ரூபாயும் ஆக விவசாயிகளுக்கு மொத்தமாக டன் ஒன்றுக்கு 1,220 ரூபாய் நிர்ணயம் செய்து, அதை இன்றைக்கு நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது.**

2001–2006–இல் அ.தி.மு.க. வின் ஆட்சி, அப்பொழுது நீங்கள் கூட்டணி. அப்பொழுது 3 இலட்சத்து 60 ஆயிரத்து 625 பேருக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. மீண்டும் இப்பொழுது 2006–லே நாம் ஆட்சிக்கு வந்து இதுவரையிலே, இந்த இரண்டரை ஆண்டுக் காலத்திலே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் 6 இலட்சத்து 50 ஆயிரத்து 517 பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

வீட்டுமனைப்பட்டா குறித்து கோரிக்கை வைத்துப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆண்டுகொண்டிருக்கக்கூடிய மாநிலங்கள், குறிப்பாக, மேற்கு வங்க மாநிலத்தில், 2006 ஜனவரி முதல் டிசம்பர் வரை வழங்கப்பட்டிருக்கக்கூடிய வீட்டு மனைப்பட்டாக்கள் வெறும் 1,577. 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருக்கக்கூடிய வீட்டுமனைப் பட்டாக்கள் 1,839. கேரள மாநிலத்தில் 2006–2007–இல் 3,773. 2007–2008–இல் 1,772. திரிபுரா மாநிலத்திலே 2006 ஆம் ஆண்டில் 291. 2007 ஆம் ஆண்டில் 431.

அதேபோல், அரசுக்குச் சொந்தமான நிலங்களில் வீடு கட்டிக் குடியிருப்பவர்களுக்கு 2000 ஆம் ஆண்டிலே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கக்கூடிய திட்டத்தை கழக ஆட்சியிலேதான் முதன் முதலில் அறிமுகப்படுத்தினோம். அப்படி அறிமுகப்படுத்தியபோது 10 ஆண்டுக் காலம் குடியிருந்தவர்களுக்கு மட்டும்தான் பட்டா வழங்கப் பட்டது. அதையும்கூட தளர்த்தி 10 ஆண்டுகள் அல்ல 5 ஆண்டுகள் இருந்தாலே போதும் என்று சொல்லி அதையும் தளர்த்தினோம். அதுமட்டுமல்ல, வீட்டுமனைப் பட்டா பெற வேண்டுமென்று சொன்னால், இலவச வீட்டுமனை பெறவேண்டுமென்று சொன்னால், வருமான வரம்பு அப்போது நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது நாம் இந்த ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு வருமான வரம்பே கிடையாது என்றொரு நிலையை உருவாக்கியிருக்கிறோம்.

**வெள்ள நிவாரணம்**

தரிசு நிலங்களைப் பண்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை தேர்தல் வாக்குறுதியிலேயே நாம் எடுத்துச் சொல்லியிருந்தோம். நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 1,74,924 நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய மொத்த இலவச நிலம் 2,10,104 ஏக்கர் என்பதையும் நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதற்கடுத்து, வெள்ள நிவாரணம். அதுபற்றி பலர் இந்த அவையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலும் குறிப்பாக வரதராஜன் அவர்கள், மார்க்சிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிக்கூட குறை சொல்லிப் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். 3,789 கோடி ரூபாய் அளவிற்கு மழை வெள்ளத்தால் இழப்புகள் ஏற்பட்டுள்ளதற்குக் மாறாக, 1,029 கோடி ரூபாய் மட்டுமே மாநில அரசு வழங்கியிருப்பதாகக் குறை கூறியிருக்கிறார். அது அவர் மட்டுமல்ல, இங்கே



பேசியவர்கள்கூட பலர் இந்தப் பிரச்சினையைச் சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள்.

நான் குறிப்பிட விரும்புவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியுதவிகள் மற்றும் தற்காலிகச் சீரமைப்புப் பணிகளுக்காக 2,106 கோடி ரூபாய் என்றும், நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்காக 1,683 கோடி ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. பொதுவாக, மத்திய அரசைப் பொறுத்தவரைக்கும் இயற்கைச் சீற்ற நிவாரணத்திலிருந்து உடனடி நிவாரணம் மற்றும் தற்காலிகச் சீரமைப்புப் பணிகளுக்காக மட்டுமே நிதியைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையிலே அந்தத் தலைப்பின்கீழ் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் 200 கோடி ரூபாயை மட்டுமே இதுவரை வழங்கி யிருக்கிறது. மேலும் நிதியை வழங்கிட வேண்டுமென்று தொடர்ந்து நாம் மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்கூட இன்றைக்கு மத்திய உள்துறை அமைச்சராக இருக்கக்கூடிய ப. சிதம்பரம் அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். டில்லிக்குச் சென்றிருந்த போதுகூட நம்முடைய முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களிடத்திலே பேசியிருக்கிறார்கள். அதேபோல, அண்மையில் அவர்கள் தமிழகத்திற்கு வந்த நேரத்திலே கூட அதை வலியுறுத்திக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நிரந்தரச் சீரமைப்புப் பணிகள் மாநில அரசினுடைய நிதியிலிருந்து ஆண்டுத் திட்டப் பணிகளின்கீழ்தான் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறது. 3,789 கோடி ரூபாய் இழப்பு என்பதற்கு தமிழக அரசு 1,033 கோடி ரூபாய்தானே ஒதுக்கியிருக்கிறது என்ற குறை சொல்லப்படுகிறது.

நான் கேட்பதெல்லாம், 2005 ஆம் ஆண்டு அப்போது அ.தி.மு.க. ஆட்சி. இதைவிடப் பெரிய இழப்பு ஏற்பட்டது உண்மை. அதிலும் குறிப்பாக, 22 மாவட்டங்களில் அந்தப் பாதிப்பு ஏற்பட்டது. அப்போது மத்திய அரசிடம் கேட்கப்பட்ட தொகை எவ்வளவு தெரியுமா, 13,684 கோடி ரூபாய். அப்போது மத்திய அரசு வழங்கிய தொகை ஆயிரம் கோடி ரூபாய். அப்போது தமிழக அரசு செலவு செய்தது 1,079 கோடி ரூபாய். ஆக, மத்திய அரசு தந்தது 1,000 கோடி ரூபாய். தமிழக அரசு அதற்காக ஒதுக்கீடு செய்தது 79 கோடி ரூபாய்தான் என்பதையும் நான் தெரிவிக்கிற அதே நேரத்தில், ஆனால், தற்போது, 3,750 கோடி ரூபாய் 12 மாவட்டங்களுக்கு வெள்ளச் சேதம் மதிப்பீடு செய்து செலவு செய்த தொகை 1,033 கோடி ரூபாய். மத்திய அரசு வழங்கியிருக்கக்கூடிய தொகை 200 கோடி ரூபாய், மீதம் தமிழக அரசு செலவு செய்திருக்கின்றது என்று சொன்னால், 833 கோடி ரூபாய் செலவு செய்திருக்கின்றது.

அதுமட்டுமல்ல விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும் இழப்புக்கு ஆளான நெல் பயிருக்கு மத்திய அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய நிவாரணத் தொகை ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.3,000. ஆனால், தமிழக அரசு வழங்கிக்

**Michigan பல்கலைக்கழக வணிகவியல்துறைப் பேராசிரியரும், 'மேலாண்மையியல் குரு.' என அழைக்கப்படுபவருமான சி.கே. பிரகலாத் என்பவர், சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற Pravasi Bharatiya Divas நிகழ்ச்சியிலே உரையாற்றும்போது, 'இலவச வண்ணத்தொலைக்காட்சி வழங்கும் திட்டமானது, அடித்தளத்துமக்களை உலகத்தினோடும் இணைக்கும் திட்டமாகும். மக்களிடையே தகவல் அளிக்கும் சிறந்த திட்டமாக உள்ளது' என்று முதல்வர் கலைஞர் அவர்களை வெகுவாக அவர்கள் அந்தக்கட்டுரையிலே பாராட்டியிருக்கிறார்கள்.**

---

கொண்டிருப்பது ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,500. ரூ.7,500 என்ற அளவிலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.388 கோடி இதுவரையில் வழங்கியிருக்கிறது. தொடர்ந்து சீரமைப்புப் பணிகள் நடந்துகொண்டிருக்கிறது. போர்க்கால அடிப்படையிலே பாராட்டப்படக் கூடிய வகையில், அந்த வெள்ள நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால், எதிர்க்கட்சியினுடைய தலைவராக இருக்கக்கூடிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இந்த வெள்ள நிவாரணப் பணியைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்கிறபோது, நான் ஆட்சியில் இருந்தபோது ரூ.1,000 கோடி மத்திய அரசிடமிருந்து பெற்றேன். நீங்கள் ரூ.200 கோடி தானே பெற்றிருக்கிறீர்கள் என்று ஒரு கேள்வியைக் கேட்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால் கூட்டணி அரசு என்றுகூட பாகுபாடு இல்லாமல் மத்திய அரசு தன்னுடைய கடமையை ஆற்றியிருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்பதற்காகத்தான் நான் இதை நினைவுபடுத்துகிறேன்.

**பத்திரிகைகள் பாராட்டு**

அடுத்து, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம். இது இங்கு பரவலாகப் பேசப்பட்டது. ஆக இதற்கு பலநேரங்களில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதையும் பத்திரிகைகளின் மூலமாக நாம் பார்க்கிறோம். இதற்கு பல விளக்கங்கள் இந்த அவையிலே என்னாலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போல வெளியிலே இந்தத் துறையினுடைய அதிகாரிகள் மூலமாக இதற்கு விளக்கங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் Front-line என்கிற ஒரு ஆங்கில நாளேடு இந்தத் திட்டத்தைப் பற்றி விரிவாகப் பாராட்டி தெளிவாக எழுதியிருக்கிறது. அதிலே குறிப்பிட்டு இருக்கக்கூடிய ஒரு முக்கியமான பகுதி, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் பற்றிய ஒரு ஆய்வு. அது 6 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் தமிழ்நாடு மற்றும் சட்டிஸ்கர் ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற பணிகளை ஒப்பிட்டு -- சட்டீஸ்கர் மாநிலத்தில் நடை பெறுகின்ற இந்தத் திட்டத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

அதாவது, ஒப்பந்ததாரர்கள் மூலம் பணிகள் செய்யப்படுவதாகவும், Musterroll–ல் திருத்தங்கள் செய்யப்பட்டு இருப்பதாகவும், பொருட்கள் வழங்குவதில் ஊழல் நடைபெற்று இருப்பதாகவும், குறைந்த அளவே வேலைகள் நடைபெற்று இருப்பதாகவும், கூலி வழங்குவதிலே காலதாமதம் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில் இத்தகைய தவறுகள் நடைபெறாமல், இயந்திரங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மூலம் வேலைகளை செய்வது தடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் தமிழகத்திலே உள்ள பெரும்பாலான நீர்நிலைகள் மற்றும் கால்வாய்களில் பயன்தரத்தக்க பல்வேறு வேலைகள் அதிக

எண்ணிக்கையில் ஆட்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.



தமிழ்நாட்டில் வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் கூலி வழங்குவதின் மூலம் காலதாமதம் தவிர்க்கப் பட்டுள்ளது. ஆனால், சட்டீஸ்கரில் கூலி வழங்குதில் காலதாமதம் ஏற்பட்டு தொழிலாளர்கள் மிகுந்த சிரமத்திற் குள்ளாகிறார்கள். ஒவ்வொரு ஊராட்சியிலும் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்கள் ஒவ்வொரு நாளும் காலை 10 மணிக்குள் வேலைக்குச் செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கையை ஒன்றிய அலுவலகத்திற்குத் தெரிவிக்கிறார்கள். இந்த எண்ணிக்கை உடனடியாக இணைய தளத்தில் வெளியிடப்பட்டு உடனடியாக மாவட்ட அளவில் தொகுக்கப்படுகிறது.

மேலும், அதேநாளில் பல்வேறு அதிகாரிகள் ஆங்காங்கு வேலை நடைபெறும் இடங்களுக்குச் சென்று இந்தத் தகவல்களை சரிபார்க்கிறார்கள். சட்டீஸ்கரில் இதுபோல் பணியாளர் பட்டியல், இதுபோல் வேலை நடைபெறும் இடத்தில் பணியாளர் பட்டியல், பணியாளர் வருகை சரியாக கண்காணிக்கப்படுவதில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இத்திட்டத்தில் பயன்பெறும் பணியாளர்களில் மிகப் பெரும்பான்மையினர் ஏறத்தாழ 80 விழுக்காட்டினர் பெண்கள் என்பது இத்திட்டத்தில் உள்ள மற்றொரு சிறப்பாகும். சமூக வளர்ச்சிப் பணிகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகம் பாரம்பரிய சிறப்புடையதாகும். அது இந்த தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலமாக பரிணாமத்தைக் கொண்டிருக்கிறது என்று Frontline ஏடு பாராட்டுகிறது. அதுமட்டுமல்ல திட்டக்குழு, இந்தத் திட்டத்தைப் பற்றி என்ன சொல்கிறது என்று சொன்னால் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை பொறுத்தவரைக்கும் மாநில அளவிலேயே இராஜஸ்தான், திரிபுரா, தமிழ்நாடு இந்த மூன்று மாநிலங்கள்தான் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று பாராட்டுச் சான்றிதழை வழங்கிபிருக்கிறது.

சமூக வளர்ச்சிப் பணிகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகம் பாரம்பரிய சிறப்புடையதாகும். அது இந்த தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலமாக பரிணாமத்தைக் கொண்டிருக்கிறது என்று Frontline ஏடு பாராட்டுகிறது. அதுமட்டுமல்ல திட்டக்குழு, இந்த திட்டத்தைப் பற்றி என்ன சொல்கிறது என்று சொன்னால் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை பொறுத்தவரைக்கும் மாநில அளவிலேயே இராஜஸ்தான், திரிபுரா, தமிழ்நாடு இந்த மூன்று மாநிலங்கள்தான் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று பாராட்டுச் சான்றிதழை வழங்கியிருக்கிறது.

அதுபோல தென்மாநிலங்களில் தமிழகத்தின் அடித்தட்டு மக்களான ஏழையெளிய ஆதிதிராவிடப் பெண்கள் அதிக அளவில் பயன்பட்டிருக்கிறார்கள் என்று Business Line பத்திரிகை 27-1-2009-இல் ஒரு ஆய்வுக் கட்டுரையே தீட்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இங்கே பேசியிருக்கக்கூடிய திரு. அக்ரி. எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி, வரகூர் திரு. சந்திரகாசி அவர்களும் இங்கே பேசுகிறபோது இந்தத் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திலே குறைபாடுகள் இருக்கிறது. அது இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரே ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார் என்றெல்லாம்கூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அதற்கு ஒரு விளக்கத்தை தர விரும்புகிறேன்.

**மத்திய அரசின் விருது**

பதிவு செய்த அனைத்துக் குடும்பங்களுக்கும் 100 நாட்கள் வேலைவாய்ப்பு என்ற ஒரு தவறான கருத்தின்

அடிப்படையிலே தணிக்கை அதிகாரிகள் அந்த அறிக்கையை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். வேலைக்கு வந்தால்தான் அதற்குரிய ஊதியத்தை வழங்கமுடியும். தேவையின் அடிப்படையில் செயல்படுத்தப் படும் திட்டம் என்பதை அந்தத் தணிக்கையினர் அதை கருத்தில்கொள்ளாமல் அனைத்துக் குடும்பங்களுமே 100 நாட்கள் வேலை செய்யவேண்டுமென்று நாம் கட்டாயப்படுத்த முடியாது. அதை அவர்கள் அன்றைக்குப் புரிந்துகொள்ளமுடியாத நிலையிலேதான் அந்த அறிக்கை வெளியிட்டார்களே தவிர, வேறு அல்ல.

அவர்களே சொல்லியிருக்கிறார்கள், தணிக்கை முறையிலேகூட சில தவறுகள் இருக்கலாமென தணிக்கைத் துறையினரே ஏற்றுக்கொண்டு அந்தச் செய்திகூட Deccan Chronicle பத்திரிகை 20–11–2008–இல் அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று இரவு இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு ஒரு பெரிய விருது வழங்கியிருக்கிறது. என்ன விருது என்று கேட்டால் இந்தியா முழுவதும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இந்தியாவிலே எந்தெந்த மாநிலங்களில் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதை ஆய்வு நடத்தி அதற்கு விருது தந்திருக்கிறார்கள். நேற்று இரவு 11–00 மணிக்குத்தான் எங்களுக்கு செய்தி கிடைத்தது. நான் இந்த உரையைத் தயாரித்துக் கொண்டிருந்தபோதுதான் எனக்கு இந்தச் செய்தி கிடைத்தது. என்னவென்று கேட்டால் இந்தியாவில் 612 மாவட்டங்கள் இருக்கிறது. ஒட்டுமொத்த இந்தியாவிலே 612 மாவட்டங்கள் இருக்கிறது. அந்த 612 மாவட்டங்களில் இன்றைக்கு 13 மாநிலங்களில் இருக்கக் கூடிய 22 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து விருது தந்திருக்கிறார்கள். அப்படி 22 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து இந்தியா முழுவதும் இன்றைக்கு விருது தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதிலே நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து விருது தந்திருக்கிறார்கள்.

அது எந்தெந்த மாவட்டங்கள் என்று சொன்னால் திண்டுக்கல், சிவகங்கை, கடலூர். ஆக, இந்த 3 மாவட்டங்கள் இந்த விருதினைப் பெற்றிருக்கிறது. இங்கேகூட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் சகோதரி பத்மாவதி அவர்கள் கூட இங்கே பேசுகிறபொழுது எங்களுடைய பேரூராட்சிக்கு வரவேண்டும் என்று பேரூராட்சியில் இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் கேட்கிறார்கள் என்று கேட்டார்கள், அதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ளலாம். ஆக, பேரூராட்சியில் இருக்கக்கூடிய மக்கள்கூட அந்தத் திட்டத்தை எதிர்பார்க்கிறார்கள் என்று சொன்னால் அந்த அளவிற்கு இன்றைக்கு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய தலைப்பு "தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்". ஆக ஊரகப் பகுதிகளுக்காகத்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அவர்களுடைய எண்ணத்தை அவர்கள் இங்கே கேட்டிருக்கிறார்கள். ஆக, இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டுகளாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

அடுத்து, பல்வேறு கட்சிகளைச் சார்ந்திருக்கக்கூடிய தலைவர்கள், உறுப்பினர்கள் தொடர்ந்து ஒரு கோரிக்கையை அதாவது கரும்பு கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு 2,000 ரூபாயாக ஏன் உயர்த்தவில்லை என்று ஒரு கேள்வியைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இரண்டு ஆண்டுகாலமாக மத்திய அரசு தற்போதுள்ள கரும்பு கொள்முதல் விலையை 811 ரூபாய் 80 காசுவிலிருந்து அதை உயர்த்தவேயில்லை என்பது உங்களுக்கும் தெரியும், இருந்தாலும் கேட்கிறீர்கள். ஆனால் இந்த நிலையிலேகூட 1,050 ரூபாய் என்று சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய அரசு உயர்த்தியதும் உங்களுக்கும் தெரியும். மீண்டும் உயர்த்த வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை வந்துகொண்டிருக்கிற காரணத்தால், அதையும் ஏற்றுக் கொண்டு 1,100 ரூபாய் நிர்ணயம் செய்தது மட்டுமல்ல, போக்குவரத்துக் கட்டணம் என்று அந்தத் தலைப்பிலே 90 ரூபாயும், சர்க்கரைக் கட்டுமான ஊக்கத் தொகை என்ற தலைப்பிலே சராசரியாக 30 ரூபாயும் ஆக விவசாயிகளுக்கு மொத்தமாக டன் ஒன்றுக்கு 1,220 ரூபாய் நிர்ணயம் செய்து, அதை இன்றைக்கு நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது.

1,050 ரூபாய் என்று சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய அரசு உயர்த்தியதும் உங்களுக்கும் தெரியும். மீண்டும் உயர்த்த வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை வந்துகொண்டிருக்கிற காரணத்தால், அதையும் ஏற்றுக் கொண்டு 1,100 ரூபாய் நிர்ணயம் செய்தது மட்டுமல்ல, போக்குவரத்துக் கட்டணம் என்று அந்தத் தலைப்பிலே 90 ரூபாயும், சர்க்கரைக் கட்டுமான ஊக்கத் தொகை என்ற தலைப்பிலே சராசரியாக 30 ரூபாயும் ஆக விவசாயிகளுக்கு மொத்தமாக டன் ஒன்றுக்கு 1,220

ரூபாய் நிர்ணயம் செய்து, அதை இன்றைக்கு நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது.

சர்க்கரைத் தொழிலில் தமிழகத்துடன் போட்டிப் போடக்கூடிய ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில்கூட இந்த ஆண்டு மாநில அரசினுடைய பரிந்துரை விலை இதுவரை அறிவிக்கவேயில்லை. கரும்பு உற்பத்தியில் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மகாராஷ்டிரா மாநிலத்தில் கூட மாநில அரசினுடைய பரிந்துரை விலையை தனியாக எப்பொழுதுமே அவர்கள் அறிவித்தது கிடையாது. இருந்தாலும் நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும், நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகள்மீது நலம் கொண்டு தன்னால் இயன்ற அளவிற்கு அதை உயர்த்தி இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் இதைக்கூட யோசித்துப் பார்க்காமல் 2,000 ரூபாய், 2,000 ரூபாய் என்று தொடர்ந்து இன்றைக்கு நீங்கள் கேட்பது முறைதானா, அது முடியக் கூடிய காரியம்தானா, நடக்கக்கூடிய காரியம்தானா என்பதையும் நீங்கள் உணர்ந்து பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**நதி நீர் இணைப்பு**

அடுத்து, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர். ராமதாஸ் அவர்கள் இந்த ஆளுநர் உரையின்மீது தன்னுடைய கருத்துகளை அறிக்கை மூலமாக வெளியிட்டிருந்தார்கள்.

மாநிலத்தினுடைய வளர்ச்சி விகிதம், வறுமை ஒழிப்பு, தனி நபர் வருமானம், இவைகள் எல்லாம் ஆளுநர் உரையிலே எதுவும் சொல்லப்படவில்லை. உண்மைதான். ஆளுநர் உரை என்பது கொள்கை அறிவிப்புகள்தான் பெரும்பாலும் அதில் இடம் பெற்றிட முடியும். ஆனால் அவர் கேட்பதைப்போல அவைகள் எல்லாம் நிச்சயமாக நிதிநிலை அறிக்கையிலேதான் இடம்பெறும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அடுத்து அவரே சொல்கிறார். நதிநீர்ப் பிரச்சினையைப்பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்று சொல்கிறார். ஆளுநர் உரை பக்கம் 11 பத்தி 15–லே நதிநீர் இணைப்பு குறித்தும், நெல்லையிலே தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு இணைப்புத் திட்டத்திற்கு வருகிற 9–2–2009–இல் அடிக்கல் நாட்டக்கூடிய அந்தச்செய்தியும் வெளியிடப்பட்டிருக்கிறது.

மேலும் திருமங்கலம் இடைத் தேர்தல் வெற்றி ஆட்சிக்கு மக்கள் அளித்த மதிப்புரை என்பது யதார்த்த நிலைக்கு மாறானது என்ற ஒரு கருத்தை அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு வேளை அதில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுகிற வாய்ப்பை இழந்திருந்தால் மக்கள் இந்த ஆட்சிக்குத் தந்த மதிப்புரை என்றுதானே நிச்சயமாக அவர் சொல்லியிருப்பார்! எனவே இடைத்தேர்தலோ, பொதுத் தேர்தலோ அதன் வெற்றி, தோல்விகள்தான் மக்கள் அளிக்கக்கூடிய மதிப்புரை என்பதையும் நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சியாக இருக்கிற நேரத்திலும் பல நேரங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் இடைத் தேர்தலில் வெற்றிபெற்றிருக்கிறது. எனவே அதை உதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. அதேபோல்,

**சமூக நீதி என்பது, இந்த அரசின் கொள்கை. அதனால்தான் அருந்ததியர்க்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கச் சட்டம். கிருத்தவ மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர்களையும் அட்டவணைப் பட்டியலில் சேர்த்து இட ஒதுக்கீடு வழங்கிடவும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் சமுதாயத்தினருக்கு தேசிய அளவில் தனி ஒதுக்கீடு வழங்க அறிவிப்பு செய்திடவும் மத்திய அரசுக்குக் கோரிக்கை ஆகியவை இந்த ஆளுநர் உரையிலே இடம்பெற்றுள்ளன.**

தேர்தல் அறிக்கையிலே நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன வாக்குறுதிகளை நிறைவேற்றப் போகிறோம், என்னென்ன உறுதிமொழிகளையெல்லாம் எடுத்துச் சொன்னோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலே முக்கியமான ஒன்று. யார் யாருக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லையோ, அவர்களுக்கு எல்லாம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படும் என்ற உறுதிமொழி எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த வாக்குறுதி தந்தபோது, தேர்தல் அறிக்கையிலே வெளியிடப்பட்டபோது, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த, இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய அம்மையார் அவர்கள் அப்போது என்ன சொன்னார்கள் ? "நடக்காது, சாத்தியப் படாது, முடியவே முடியாது, யாரும் நம்ப வேண்டாம்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல. சி.என்.என். தொலைக்காட்சிப் பேட்டியிலே கூட அவர் குறிப்பிட்டிருக்கிறார். "தி.மு.க. நிலாவைத் தருவதாகக் கூறுகிறது, யாரும் நம்ப வேண்டாம்" என்று ஊர் ஊராகப் போய்ச் சொன்னார்கள் இதே கருத்தை. 2006–இலே ஆட்சிக்கு வருகிறோம். ஆட்சிக்கு வந்தவுடன் முதல் நிதிநிலை அறிக்கை இதே அவையிலே தாக்கல் செய்யப்படுகிறது. ஜுலைத் திங்களில் தாக்கல் செய்யப்பட்ட அந்த நிதிநிலை அறிக்கையிலே இந்தத் திட்டத்திற்காக 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதிலே முதல் கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, தமிழகத்திலே இருக்கக்கூடிய சமத்துவபுரத்திலே குடியிருக்கக்கூடியவர்களுக்கு முதல் கட்டமாக அவற்றை வழங்கினோம். அதற்கடுத்து இரண்டாவது, மூன்றாவது கட்டங்களாக 62,80,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, 54,28,204 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இதுவரையில் வழங்கப்பட்டிருக்கின்றன.

இங்கேகூட சிலர் கேட்டார்கள், மீதி என்ன ? அது எங்கே போயிருக்கிறது என்றுகூட சந்தேகத்தோடு சிலர் கேள்விகளைக் கேட்டார்கள். சொல்கிறேன். மீதி 8,51,796. ஆக, அவைகள் தொடர்ந்து இப்போது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆக ஓரிரு மாதங்களில் அவைகளும் முழுமையாக வழங்கப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிற அதேநேரத்தில், நான்காவது கட்டமாக இந்த ஆண்டு 41,62,500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு நடப்பாண்டில் அவையும் வழங்கப்பட இருக்கின்றன. இந்தத் திட்டத்தைத்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த, இன்றைக்கு எதிர்க்கட்சித்தலைவராக இருக்கக்கூடிய அம்மையார் அவர்கள் முடியவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால் கழக அரசினுடைய சாதனைகளில் ஒரு இமாலயச் சாதனை இதுதான் என்பதையும் நான் இங்கே அழுத்தந்திருத்தமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**கல்வியாளரின் பாராட்டு**

இதற்கொரு சான்றைக்கூட நான் தெரிவிக்கமுடியும். 9–1–2009 அன்று 'Indian Express' பத்திரிகையிலே ஒரு செய்தி, கட்டுரை வந்திருக்கிறது. Michigan பல்கலைக்கழகப் பேராசிரியர், Management Guru என்று அழைக்கப்படக் கூடிய சி.கே. பிரகலாத்– அண்மையிலேகூட அவருக்கு 'பத்மஸ்ரீ' பட்டம் கிடைத்திருக்கிறது. அவர் கூறுகிறார்; அந்தச் செய்திக்குத் தலைப்பு, "Management guru lauds MK's. Colour T.V. Freebie. இந்தத் தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கிற செய்தி என்னவென்றால், "The D.M.K. Government free colour T.V. scheme may have faced severe criticism on home turf, but management guru and professor, School of Business, University of Michigan, C.K. Prahalad, is all praise for Chief Minister M.Karunanidhi's pet project. Addressing a session, as part of the Pravasi Bharatiya Divas here, he said the scheme enabled the poor to stay connected and informed" என்று அந்தச் செய்தியிலே வெளியிட்டிருக்கிறார்கள்.

அதாவது, 'Indian Express' செய்தி, 'திராவிட முன்னேற்றக் கழக அரசால், பொது மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டித் திட்டமானது, உள்ளூர் அரசியல் அளவில் பல்வேறு விமர்சனத்திற்கு உள்ளாகியிருந்தாலும், Michigan பல்கலைக்கழக வணிகவியல்துறைப் பேராசிரியரும், 'மேலாண்மையியல் குரு' என அழைக்கப்படுபவருமான சி.கே. பிரகலாத் என்பவர், சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற Pravasi Bharatiya Divas நிகழ்ச்சியிலே உரையாற்றும்போது, 'இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் திட்டமானது, அடித்தளத்து மக்களை உலகத்தினோடும் இணைக்கும் திட்டமாகும். மக்களிடையே தகவல் அளிக்கும் சிறந்த திட்டமாக உள்ளது' என்று முதல்வர் கலைஞர் அவர்களை வெகுவாக அவர்கள் அந்தக் கட்டுரையிலே பாராட்டியிருக்கிறார்கள்.

Michigan பல்கலைக்கழக வணிகவியல்துறைப் பேராசிரியரும், 'மேலாண்மையியல் குரு' என அழைக்கப்படுபவருமான சி.கே. பிரகலாத் என்பவர், சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற Pravasi Bharatiya Divas நிகழ்ச்சியிலே உரையாற்றும்போது, 'இலவச வண்ணத்தொலைக்காட்சி வழங்கும் திட்டமானது, அடித்தளத்துமக்களை உலகத்தினோடும் இணைக்கும் திட்டமாகும். மக்களிடையே தகவல் அளிக்கும் சிறந்த திட்டமாக உள்ளது' என்று முதல்வர் கலைஞர் அவர்களை வெகுவாக அவர்கள் அந்தக்கட்டுரையிலே பாராட்டியிருக்கிறார்கள்.

அதேபோல், எதிர்க்கட்சியைச் சார்ந்த அ.தி.மு.க.–வினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு.டி. ஜெயக்குமார் அக்கறையோடு ஒரு கேள்வியைக் கேட்டார்கள். 'சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாக்க எந்தவித நடவடிக்கையிலும், முயற்சியிலும் ஈடுபடவில்லையே; எல்லாம் சொல்வதோடு சரியா?'– பழைய அனுபவம். அதை அவர் உணர்ந்து பேசினார். 'என்ன ஆயிற்று' என்று கேட்டார். சொல்லுகிறேன்; 6–12–2006, இதே சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இதற்காகத் தீர்மானம் போடப்பட்டு, குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுக்கு அது அனுப்பி வைக்கப்பட்டு, அதற்குப்பிறகு தொடர்ந்து நம்முடைய மத்திய சட்டத்துறை அமைச்சர், பிரதமர், அம்மையார் அன்னை சோனியா காந்தி ஆகியோருக்கு 11–3–2007 அன்று நம்முடைய முதல்வர் அவர்களே இது சம்பந்தமாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அதற்குப்பிறகு மத்திய சட்டத்துறை அமைச்சருக்கு 25–2–2008 அன்றும், 23–4–2008 அன்றும், இதை வலியுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆக, உரிய நடவடிக்கை முறையாக எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. விரைவிலே அதுவும் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்பதை அக்கறையோடு கேட்ட திரு. டி.ஜெயக்குமாருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு**

அதுபோல, இன்னொரு அக்கறை மிகுந்த ஒரு கேள்வியைக் கேட்டார்கள். 'காவல் துறையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய காலியிடங்களையெல்லாம் நிரப்பவில்லையே? தேர்தல் நேரத்திலே வாக்குறுதி தந்தீர்களே, என்னவாயிற்று?' என்ற ஒரு கேள்வியைக் கேட்டார். நல்ல கேள்வி. 14,617 காலியிடங்கள் இருக்கின்றன என்ற அந்த விவரத்தையும் அவர் இங்கே எடுத்துச் சொன்னார். ஆக, இரண்டாம் நிலைக் காவலர்கள்; நான் ஒரு கணக்கைச் சொல்கிறேன். இரண்டாம் நிலைக் காவலர்களைப் பொறுத்த வரைக்கும், 2006–2007–லே நேரடி தேர்வு நடத்தி அறிவித்தது 5 ஆயிரம்; அதிலே தேர்வு செய்யப்பட்டவர்கள் 4,873. நான் சொல்வது இரண்டாம் நிலைக் காவலர்கள். 2007–2008–லே, அறிவித்தது 6,272; அதிலே தேர்வு செய்யப்பட்டிருக்கக் கூடியவர்கள் 6,151. 2008–2009–லே அறிவித்தது 4,000; தேர்வுப் பணி நடந்துகொண்டிருக்கிறது. அதேபோல, கருணை அடிப்படையிலே 2007–2008–லே, 310 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

உதவி ஆய்வாளர்களைப் பொறுத்தவரைக்கும், 2006–2007 ஆம் ஆண்டு 755 பேர் அறிவிக்கப்பட்டு, அதிலே 742 பேர் தேர்வாகியிருக்கிறார்கள். ஆக, 11,434 காவலர்களும், 742 உதவி ஆய்வாளர்களும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இந்த ஆண்டு 2008–2009–லே மீண்டும் 4,000 பேர் தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அதே அ.இ.அ.தி.மு.க.–வைச் சார்ந்த உறுப்பினர் திருமதி. பதர் சயீத் அழகோடு பேசினார். அதுமட்டுமல்ல; மழலைத் தமிழிலும் கூட அவர் பேசினார். நாமெல்லாம் அதை ரசித்தோம்.

அவர் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார். பொத்தாம் பொதுவாக பல கருத்துகளைச் சொன்னார். அதிலே ஒன்று, இஸ்லாமியர்களுக்கு இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை அவர் குறிப்பிட்டுச் சொன்னார். அதற்கு ஒரு விளக்கம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 2006–லே பொறுப்பேற்றதற்குப் பின்னால் அரசு வேலைவாய்ப்பில் உயர் கல்வி பயில 3.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு வழங்கிய ஆட்சி இந்த ஆட்சி என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். வழங்கினீர்களே, அது எந்த அளவுக்குச் செயல்படுகிறது என்ற அந்த உணர்வோடு அந்தக் கேள்வியைக் கேட்டார்கள். அதற்கும் விளக்கம் சொல்கிறேன். ஆக, முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரைக்கும் 15–09–2007 முதல் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த 15 மாதங்களிலே தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக உரிமையியல் நீதிபதிகளாக 7 பேர்கள், மருத்துவர்களாக 54 பேர்கள், கால்நடை மருத்துவர்களாக 11 பேர்கள், சுருக்கெழுத்துத்

தட்டச்சர்களாக 111 பேர்கள், ஆக மொத்தம் 183 பேர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுபோல, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 42 பேர், பட்டதாரி ஆசிரியர்கள் 219 பேர், வட்டார வள மைய பயிற்றுனர் 22 பேர்கள், ஆக மொத்தம் 283 பேர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

காவலர் தேர்வு வாரியம் மூலமாக ஆண் காவலர்கள் 145 பேர், பெண் காவலர்கள் 17 பேர், ஆக மொத்தம் 162 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் முக்கியமான ஒன்று, உடல் தேர்விலே தேர்ச்சி பெற்றிருக்கக்கூடிய இஸ்லாமியர்கள் அனைவருமே தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது இப்போது இருக்கக்கூடிய நிலை.

ஆனால், 3.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு இல்லாத நிலையிலே என்ன நடந்தது தெரியுமா? இட ஒதுக்கீடு வழங்கப்படாத நிலையிலே 2006 ஆம் ஆண்டிலே ஆண் காவலர்கள் வெறும் 18 பேர்கள், பெண் காவலர்கள் வெறும் 4 பேர்கள், ஆக மொத்தம் 22 பேர்கள்தான் அப்போது அந்தச் சூழ்நிலையிலே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

அதேபோல், உயர்கல்வி பயில, பொறியியல் கல்லூரியிலே முஸ்லீம் மாணவர்கள் 2,564 பேர், மருத்துவக் கல்லூரியிலே முஸ்லீம் மாணவர்கள் 79 பேர் என்று இவர்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, இந்தச் செய்தி, ஒரு இஸ்லாமிய இனத்தினுடைய பிரதிநிதியாக இருக்கக்கூடிய அம்மையாருக்கு எப்படி தெரியவில்லை என்பதுதான் எங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்:**

ஆளுங்கட்சியைச் சார்ந்த திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. டி.செங்குட்டுவன் அவர்கள், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி இங்கே நேற்றையதினம் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி எடுத்துப் பேசுகிறபோது, எதிர்க் கட்சியைச் சார்ந்த முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.அன்பழகன் அவர்கள்கூட இங்கே குறுக்கிட்டு ஒரு செய்தியைச் சொன்னார்கள். அதாவது ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் உருவாக்கப்பட்டது என்று ஒரு தவறான செய்தியை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். நான் நேற்றைக்கே அதற்கு உடனடியாக பதில் சொல்லியிருக்கவேண்டும். இருந்தாலும் தேதிவாரியாக, ஆதாரங்களோடு அந்தச் செய்திகளைச் சொல்லவேண்டும்; நாளைய தினம் நான்தானே பேசப்போகிறேன்; எனவே, நாளைக்குப் பதில் சொல்லலாம் என்று நானும் பொறுத்துக்கொண்டு, இப்போது அதற்கு விளக்கம் தர விரும்புகிறேன்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த வரைக்கும், 1997 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், அப்போது 576 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டு, ஜப்பான் நாட்டினுடைய நிதியைப் பெறுவதற்காக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிய முதல் ஆட்சி, தலைவர் கலைஞர் தலைமையில் இருந்த ஆட்சிதான். அதைத் தொடர்ந்து 1997 ஜூலை மாதம் அந்த மதிப்பீட்டைக் கூட மாற்றி ரூ.636 கோடிக்கு திருத்தி, அந்த மதிப்பீட்டை உயர்த்தி, மீண்டும் மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்புகிறோம். அதைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் களஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து காவிரி ஆற்றிலிருந்து 1.4 டி.எம்.சி. நீர் எடுக்க தடையில்லாத சான்றிதழைப் பெற வேண்டுமென்று சொல்லி அதை எதிர்நோக்கி மத்திய அரசுக்கு நாம் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறோம்.

1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் தேதி மத்திய நீர்வள அமைச்சகத்தினுடைய செயலாளராக இருக்கக் கூடியவர், தமிழக, கர்நாடக மாநிலத்தினுடைய அதிகாரிகளை அழைத்து, ஒரு ஆலோசனைக் கூட்டத்தையும் நடத்துகிறார். அதற்குப் பிறகு, 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய நீர்வள அமைச்சகம் தடையில்லாச் சான்றிதழை வழங்கியது. 1998 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தருமபுரி மாவட்டத்திலிருந்து விடுபட்டிருக்கக்கூடிய சில பகுதிகளையும் சேர்த்து 1,000 கோடி ரூபாய்க்கு திருத்திய மதிப்பீடு போட்டு அதையும் அனுப்பி வைக்கிறோம்.

அதற்குப்பிறகு, அந்தப்பணிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கக்கூடிய அந்தக் காலகட்டத்திலேதான் 1998 மே மாதம் பொக்ரானில் நடைபெற்ற அணுசக்தி சோதனையைத் தொடர்ந்து, ஜப்பான் நாட்டினுடைய நிதியைப் பெறுவதிலே நமக்கு ஒரு பெரிய தடை ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஆட்சி மாற்றம், தமிழ்நாட்டிலே 2001 லே அ.தி.மு.க. ஆட்சி. ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் என்ன முயற்சியில்

ஈடுபட்டது ? மூன்று முறை மத்திய அரசுக்குக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். இதைத் தவிர வேறு எந்தப் பணியையும் அவர்கள் ஆற்றிடவில்லை. 2001, 2003, 2005 ஆகிய ஆண்டுகளில் இந்த நிலையிலேதான் அவர்கள் நினைவூட்டுக் கடிதங்களை அனுப்பியிருக்கிறார்களே தவிர, வேறு எந்தப் பணிகளும் நடைபெறவில்லை; இதுதான் உண்மை. அதற்குப் பிறகு, மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகம் 2006–லே ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், மீண்டும் ஜப்பான் நாட்டினுடைய நிதி உதவியைப் பெறுவதற்கு எல்லாவித முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டோம். அதற்குப் பிறகு ஜப்பான் நாட்டினுடைய நிதி நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் உண்மைக் கண்டறியும் குழு ஒன்றை அனுப்பி வைத்தார்கள். நிதி நிறுவன செயல் இயக்குனர், அவர் தமிழ்நாட்டிற்கே வருகைதந்து, ஜப்பான் நாட்டிலிருந்து வருகைதந்து, நம்முடைய தமிழக முதல்வர் அவர்களைக்கோட்டையிலே சந்தித்தார்கள்; என்னையும் சந்தித்தார்கள். ஆக, இந்தத் திட்டத்தைப் பற்றி முதல்வர் அவர்கள் தெளிவாக வலியுறுத்தி, வற்புறுத்தி எடுத்துச் சொல்லி, ஆக, இப்படி தொடர்ந்து அதற்குப் பிறகு அதிகாரிகள் அந்த இரண்டு மாவட்டங்களுக்கே சென்று தொடர்ந்து ஆய்வுப் பணிகளையும் நடத்தி, அதையும் தொடர்ந்து திருத்திய மதிப்பீடாக 1,334 கோடி ரூபாய் அளவில் தயாரித்து 2008 பிப்ரவரி மாதம் நானும், இந்தத் துறையினுடைய அதிகாரிகளும் ஜப்பான் நாட்டிற்குச் சென்று, அங்கே இருக்கக்கூடிய வங்கியினுடைய அதிகாரிகளோடு கலந்துபேசி, அதற்குப் பிறகு அவர்களுடைய முழு ஒப்புதலை அன்றைக்கு நாங்கள் பெற்றோம்.

அதைத் தொடர்ந்துதான் டில்லியிலே ஜப்பானிய அரசுக்கும், மத்திய அரசுக்கும் முழு அளவிலே ஒப்புதல் தந்து, ஒப்பந்தத்திற்குரிய கையெழுத்தும் இடப்பட்டு அதற்குப் பிறகுதான் அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தப் பணி இப்பொழுது வேக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. எனவே, குறித்த காலத்திற்குள் அந்தப் பணி நிச்சயமாக நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும் நான் மீண்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு இங்கு முடிந்தவரையிலே பல விளக்கங்கள் உங்களிடத்திலே, இந்த அவையின்மூலமாக, என்னுடைய உரையின்மூலமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இங்கே இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில், ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கக்கூடிய பல பிரச்சினைகளை அரசினுடைய திட்டங்கள், அரசினுடைய அந்த நிலைப்பாடுகள் எல்லாம்கூட அதிகமாக இங்கே கருத்துகள் எடுத்துச் சொல்ல முடியாத சூழ்நிலையில், இலங்கையில் இருக்கக்கூடிய தமிழர்கள் பிரச்சினையைப் பற்றி அதிகமாக இந்த அவையிலே பேசப்பட்டிருப்பது உண்மை. இங்கேகூட காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த துணைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திருமதி. யசோதா அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது, இந்த இலங்கைப் பிரச்சினை பொறுத்தவரையில், தலைவர் கலைஞர் அவர்கள் எந்த அளவுக்கு உணர்வு கொண்டிருக்கிறார், எந்த அளவுக்கு தன்னுடைய உள்ளத்திலே அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதை யாரும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

ஆகவே, அந்த நிலையிலே ஒரு செய்தியைக்கூட நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இன்று நேற்றல்ல, ஆண்டுகள் பலவற்றுக்கு முன்பே வரலாற்றுத் தொடர்பும், கலை இலக்கியத் தொடர்பும் உண்டு என்பதற்கு அவர் எழுதிய 'பண்டாரக வன்னியன்' என்ற வரலாற்றுப் பின்னணி கொண்ட வீரகாவியமே அதற்குச் சான்றாக அமைந்திருக்கிறது. இன்றைக்கும் பண்டாரக வன்னியரின் நினைவுச் சின்னத்தை இலங்கையிலே நாம் காணுகிறோம். அங்கே கண்டியை ஆண்ட விக்கிரமசிங்க ராஜா பண்டாரக வன்னியரின் வரலாற்றையும் நூலாகவும் எழுதியிருக்கிறார்.

புதையல் திரைப்படத்திலே ஓரங்க நாடகமாக எழுதி, அதிலே நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்ததும் நாடறிந்த உண்மை. அவருடைய நினைவைப் பாராட்டக் கூடிய வகையிலே, வேலூர் பாலாற்றங்கரையிலே நினைவுச் சின்னம் அமைத்ததும் நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தான் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத்தெரியும்.

அதுமட்டுமல்ல, நேற்றையதினம் இலங்கைப் பிரச்சினை குறித்து, தன்னுடைய மேனியிலே தீ வைத்து இறந்திருக்கக்கூடிய முத்துக்குமரனைப்பற்றி இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அது குறித்தும் ஒரு செய்தியை நான் வெளியிட விரும்புகிறேன், முதல்வருடைய அனுமதியோடு. இலங்கைப் போர்ப் பகுதியில் சிக்கித் தவித்திடும் அப்பாவித் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக, சென்னை, கொளத்தூர், திருவள்ளுவர் தெருவைச் சார்ந்த முத்துக்குமார் என்னும் இளைஞன் தீக்குளித்து மரணமடைந்துள்ளார். தீக்குளித்து தன்னைத்தானே மாய்த்துக்கொள்வதென்பது, தீவிர எண்ணத்தாலும், உணர்ச்சியாலும் ஏற்படும் தீவிரவாத செயல் என்பதால், அதனை ஜனநாயக அரசியல்

சிந்தனையுள்ள யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய உணர்ச்சிக் கொந்தளிப்பையும், தீக்குளிப்பது போன்ற தீவிர முடிவையும் கட்டாயம் தவிர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், தீக்குளித்து மாண்ட முத்துக்குமாரின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் பேரவைத் தலைவர் [illegible] இந்த அவையில் ஆழ்ந்த இரங்கலை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், முத்துக்குமார் குடும்பத்திற்கு நிவாரண நிதியுதவியாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய சார்பிலே நான் இங்கே அறிவிக்கிறேன்.

அதற்கடுத்து, முடிவுரையாக நான் குறிப்பிட விரும்புவது, ஆளுநர் உரை என்பது Statement of Policy. அதாவது, கொள்கை அறிக்கை என்ற வகையிலே இந்த ஆளுநர் உரை, கலைஞர் அவர்களின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், திட்டங்களையும், செயல்பாடுகளையும் உள்ளடக்கிய பெட்டகமாக, கழக அரசின் திசைகாட்டும் கருவியாக அமைந்திருக்கிறது என்பதிலே எள்ளளவும் ஐயமில்லை. சமூக நீதி என்பது, இந்த அரசின் கொள்கை. அதனால்தான் அருந்ததியர்க்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கச் சட்டம். கிருத்தவ மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர்களையும் அட்டவணைப் பட்டியலில் சேர்த்து இட ஒதுக்கீடு வழங்கிடவும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் சமுதாயத்தினருக்கு தேசிய அளவில் தனி ஒதுக்கீடு வழங்க அறிவிப்பு செய்திடவும் மத்திய அரசுக்குக் கோரிக்கை ஆகியவை இந்த ஆளுநர் உரையிலே இடம்பெற்றுள்ளன.

சமூக நீதி என்பது, இந்த அரசின் கொள்கை. அதனால்தான் அருந்ததியர்க்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கச் சட்டம். கிருத்தவ மதத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர்களையும் அட்டவணைப் பட்டியலில் சேர்த்து இட ஒதுக்கீடு வழங்கிடவும், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் சமுதாயத்தினருக்கு தேசிய அளவில் தனி ஒதுக்கீடு வழங்க அறிவிப்பு செய்திடவும் மத்திய அரசுக்குக் கோரிக்கை ஆகியவை இந்த ஆளுநர் உரையிலே இடம்பெற்றுள்ளன.

நலிந்தோர் நலன் கலைஞர் அரசின் குறிக்கோள். அதை நிறைவேற்றிடும் வகையில்தான் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, பத்து மளிகைப் பொருட்களை வழங்கக்கூடிய சிறப்புப் பொது விநியோகத் திட்டம், முதியோர், ஆதரவற்றோர், விதவைகள் மற்றும் ஊனமுற்றோருக்கான உதவித் தொகை, அமைப்புச் சாரத் தொழிலாளர் நல வாரியங்கள், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான முதலமைச்சரின் காப்பீடு திட்டம் ஆகியவை இந்த உரையிலே இடம் பெற்றுள்ளன. இப்படி ஒவ்வொன்றாக அடுக்கிக்கொண்டே போகும் அளவிற்கு, உயர்தனி சிறப்புமிக்க உரையாக ஆளுநர் உரை விளங்குகிறது என்பதை நடுநிலையாளர்கள் நிச்சயமாக உணர்வார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், இந்த ஆளுநர் உரை அழகிய ரோஜாவைப்போல் அமைந்திருக்கிறது. சிலருக்கு ரோஜாவின் கண்களைப் பறித்திடும் வண்ணம் தெரிகிறது. சிலருக்கு ரோஜாப் பூவின் நறுமணம் புரிகிறது. ரோஜாவைப் பார்த்ததும், கற்பனைச் செறிவுடைய ஒரு சிலரின் மனதில் கவிதை பிறக்கிறது. இந்த ரோஜாவைப் பார்த்ததும் சிலருக்கு ரோஜாவின் ராஜாவான பண்டித நேருவின் உருவம் தெரிகிறது. ஒரு சிலருக்கு ரோஜாவிற்குப் பக்கத்தில் இருக்கிற முள் தெரிகிறது. இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலே பார்த்தாலும், ரோஜா ரோஜாதான்.

விளைந்து குலுங்கிடும் நெற்பயிரைப் பாருங்கள் என்றால், சிலருக்குக் களை மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. கண்ணாடி போன்ற தெளிந்த நீரோடையைப் பாருங்கள் என்றால், சிலருக்கு நுரை மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. கானம் பாடிடும் வானம் பாடியைப் பாருங்கள் என்றால், சிலருக்கு ஆந்தை மட்டுமே கண்ணுக்குத் தெரிகிறது. ஆளுநர் உரையினைப் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், வெவ்வேறு வகையினிலே, அவர்கள் இருக்கக்கூடிய இடம் நடந்து செல்லும் பாதை இவற்றின் அடிப்படையிலே விமர்சனம் செய்திருக்கிறார்கள். நிறைகளைக் கண்டவர்கள், நிறைகளையும் குறைகளையும் கண்டவர்கள், குறைகளை மட்டுமே கண்டவர்கள் அனைவரது கருத்துக்களையும் வரவேற்று நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால், அனைவரது நோக்கமும் நாடும் வீடும் நலம்பெற வேண்டும் என்பதுதான். எல்லோருக்கும் எல்லாம் இடையூறின்றிக் கிடைக்க வேண்டும் என்பதுதான். மக்கள் மத்தியில் நிம்மதியும், நீடித்த மகிழ்ச்சியும் நிலவிட வேண்டும் என்பதுதான். அந்த வகையிலே என்னுடைய பதிலுரையை இணைத்து, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

# தமிழகத்தில் நல்லதொரு கண்காணிப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது! மகளிருக்கு வருமானம் – கிராமப்புற வேலைவாய்ப்பை உருவாக்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முனைப்பாக செயல்பட்டு வருகிறார்!

'ஃ பிரண்ட் லைன்' ஆங்கில ஏடு பாராட்டு!

பெண்களுக்கு வருமானம், கிராமப்புற வேலைவாய்ப்பு ஆகியவற்றை உருவாக்க, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரடிக் கவனம் செலுத்தி முனைப்பாகச் செயல்படுத்தி வரும் இரண்டு திட்டங்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவைகளாகும். தமிழ்நாட்டில் ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் சிறப்பாகவும், திறம்படவும் செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து (Front Line) 'பிரண்ட் லைன்' ஆங்கில மாதமிருமுறை ஏட்டின் ஜனவரி 16, 2009 இதழில் கருணா முத்தையா என்பவர் எழுதியுள்ள பாராட்டுக் கட்டுரையின் தமிழாக்கம் வருமாறு:–

2007 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் பற்றி நடத்தப்பட்ட



சமூகத் தணிக்கை மற்றும் எட்டு மாநிலங்களில் நடத்தப்பட்ட ஆய்வின் பகுதியாக சட்டிஸ்கர் மாநிலம், சுர்குஜா மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஒரு கள ஆய்வு ஆகியவை இந்தக் கட்டுரையாளருக்கு சட்டிஸ்கர் மாநிலத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை உணரவைத்தன.

சட்டிஸ்கரில், ஒப்பந்தக்காரர்கள் ஈடுபடுத்தப்படுவது, வருகைப் பதிவேடுகளில் குளறுபடி, பொருட்கள் பயன்படுத்தப்படுவதில் ஊழல், மிகக் குறைவான அளவு வேலை, கூலிப் பட்டுவாடாவில் தாமதம் உள்ளிட்ட அமலாக்கலில் பல குறைபாடுகள் உள்ளன.

மாறாக, தமிழ்நாடு இந்தப் பிரச்சினைகளை சமாளிக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் இயந்திரங்கள், ஒப்பந்தக்காரர்கள் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளதால் தமிழ்நாடு அவற்றை வெற்றிகரமாக நீக்கி வைத்துள்ளது.

தமிழ்நாட்டின் வெற்றிக்கு மற்றொரு காரணம் பொருட்களைப் பயன்படுத்தாத வேலைகளை மட்டும்தான் மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் நிபந்தனை விதித்திருப்பதாகும். (தேசிய சட்டம் பொருட்களின் செலவினங்களுக்கு 40 சதவீதம் வரை அனுமதிக்கிறது.) கிராமப் பஞ்சாயத்துகளுக்கு பொறியியல் திறமை இருக்காது என்பதால், பொருட்களைப் பயன்படுத்துவது தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு காலூன்ற இடம் கொடுத்துவிடும். தமிழ்நாட்டில் ஏராளமான வாய்க்கால்கள் மற்றும் பாரம்பரியமான நீர் இறைக்கும் ஆதாரங்கள் இருப்பதாலும் ஓரளவிற்குப் பொருட்கள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது சாத்தியமாகிறது. இந்தக் கட்டமைப்புகளைப் பழுது பார்ப்பதும், பராமரிப்பதும் பயனுள்ள, உழைப்பு அதிமிகுதியான பணிகளுக்கு மிகப்பெரிய ஆதாரமாகும்.

சட்டத்தின்படி 50 சதவீத பணிகளாவது கிராமப் பஞ்சாயத்துகளால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இருந்தபோதும், தமிழ்நாடு திட்டம் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின்கீழ் பணிகள் அனைத்தும் கிராமப் பஞ்சாயத்துகளால் நிருவகிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. சட்டிஸ்கரில், சம்பந்தப்பட்ட துறைகளை (உதாரணமாக பாசனத்துறை அல்லது வனத்துறை) அதிகம் சார்ந்துள்ளன. துறைகளிடம் கிராமப் பஞ்சாயத்துகளைப்போல கணக்கு கேட்க முடியாது, பொறுப்பாக்கவும் முடியாது. ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட ஒரு நாளில் கூலிகள் பட்டுவாடா செய்யும் வழக்கத்தை நல்லமுறையில் ஒத்திகை செய்து நடைமுறைப்படுத்தி தமிழ்நாடு கூலிப் பட்டுவாடாவில் தாமதத்தையும் தவிர்க்கிறது. இதற்கு நேர்மாறாக சட்டிஸ்கரில் கூலிப் பட்டுவாடாவில் தாமதம் ஏற்படுத்துவது தொழிலாளர்களுக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்தியதால் அவர்கள் இத்திட்டத்தின் வேலைகளையே கைவிட்டுவிட்டனர். உதய்ப்பூர் வட்டாரத்தில் வனத்துறையால் நிறைவேற்றப்பட்ட ஒரு பணிக்கு ஏறத்தாழ ஓராண்டாக மக்களுக்கு கூலி கொடுக்கப்படவில்லை.

தமிழ்நாடு நல்லதொரு கண்காணிப்பு முறையை அறிமுகப்படுத்தி வைத்துள்ளது. உதாரணமாக, ஒவ்வொரு தொழிலாளியும் வருகைப் பதிவேட்டில் தினசரி கையெழுத்து அல்லது கைப்பெருவிரல் ரேகை பதிக்க வேண்டும். இதனால் தில்லுமுல்லுகள் செய்வது சிரமமாகிறது. பணியிடத்தில் வேலையாட்கள் வருகையை ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் உள்ள மக்கள் நலப் பணியாளர் (வேலை வாய்ப்பு உறுதி உதவியாளர்) வட்டார அலுவலகத்துக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்க வேண்டும். இந்தத் தகவல் உடனடியாக மாவட்ட அளவில் திரட்டப்பட்டு பல்வேறு துறைகளில் உள்ள அதிகாரிகள் அந்த அறிக்கைகளை சரிபார்க்க அன்றே திடீர் சோதனைகள் நடத்துகின்றனர்.

சட்டிஸ்கர் மாநிலத்தில், வருகைப் பதிவேடுகளோ, வேலையாட்கள் வருகையோ முறையாகக் கண்காணிக்கப்படுவதில்லை. பணியிடங்கள் பலவற்றில் அதிகாரபூர்வமான வருகைப் பதிவேடுகள் இருக்கவில்லை. உதய்ப்பூர் வட்டாரம் கெத்மா பஞ்சாயத்தில் வேலை முடிக்கப்பட்ட பணியிடம் ஒன்றில் வருகைப் பதிவேடுகளில் இருந்த பெயர்களில் பாதிக்கும்மேல் போலியாக இருந்ததை எங்களது சர்வே கண்டுபிடித்தது.

மிகவும் முக்கியமாக தமிழ்நாட்டில், தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டப் பணிகள் இதர திட்டப் பணிகள் போன்று இல்லாமல் எந்தவிதத்திலும் ஊழல், விரயம் பொறுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்ற கடுமையான எச்சரிக்கை மேல்மட்டத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. பெரும் மோசடிகளில் ஈடுபட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள், வேலை வாய்ப்பு உறுதி உதவியாளர்கள் (மக்கள் நலப் பணியாளர்கள்). வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலம் இவ்வாறு செய்யப்படுகிறது. கடந்த 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சட்டிஸ்கர் மாநிலம் மரேயா பஞ்சாயத்தில் (உதய்ப்பூர் வட்டாரம்) நடத்தப்பட்ட சமூகத் தணிக்கையில் மாவட்ட நிருவாகத்திடம் ஒரு புகார் அளிக்கப்பட்டு அதன் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலம் இப்போதுதான் அம்மாநிலத்தில் இப்படிப்பட்ட ஒரு மாற்றத்திற்கான விதை ஊன்றப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலும் ஒரு சில குறைபாடுகள் இருந்தபோதிலும், மிகப்பெரும் அளவில் வேலை வாய்ப்பு வழங்குவதிலும், குறித்த காலத்தில் கூலி கொடுப்பதிலும், பெருமளவு ஊழலைத் தவிர்ப்பதிலும் தமிழ்நாடு வெற்றி பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் இத்திட்டத்தின்கீழ் பெரும்பாலான வேலையாட்கள் பெண்கள் என்பதாகும். இந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல உள்ளன.

இவ்வாறு அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

இந்த இரண்டு திட்டங்களையும் தமிழகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

❖ ❖ ❖

சென்னையை அடுத்த வண்டலூரில்
உள்ள
காவல் உயர் பயிற்சியகத்தில்
11-01-2009 அன்று
உதவி ஆய்வாளர்களின்
முதற்குழு பயிற்சி நிறைவு
அணிவகுப்பு விழா நடைபெற்றது.
இவ்விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் பயிற்சிபெற்ற உதவி ஆய்வாளர்களின் முதற்குழு பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழா 11.01.2009 அன்று சென்னையை அடுத்த வண்டலூரில் உள்ள காவல் உயர் பயிற்சியகத்தில் நடைபெற்றது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்த பாசறை தொடங்கிய போது தொடக்க விழா நிகழ்ச்சிக்கு வந்து உங்களையெல்லாம் வாழ்த்தி, நான் அன்று வழங்கிய அறிவுரை – நான் விடுத்த வேண்டுகோள் அவைகளையெல்லாம் இதயத்தில் ஏந்தி, பயிற்சி பெற்ற வீரர்களாக இன்றைக்கு என் முன்னால் நிற்கின்ற காட்சியைப் பார்த்து, மிக மிக பூரிப்படைகின்றேன். புளகாங்கிதம் கொள்கிறேன்.

நீங்கள் பயிற்சியை முடித்து பணிக்குச் செல்கின்றீர். வள்ளுவர் சொன்னதைப் போல,

கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக,

என்பதைப் போல பயில வேண்டியவை – கற்க வேண்டியவைகளையெல்லாம் கற்று, அப்படி

**தமிழ்நாட்டு காவல்துறையினர் தங்களுடைய வீரத்தையும் உள்ள உறுதியையும் எந்த நேரத்திலும் மெய்ப்பித்துக் காட்டக் கூடியவர்கள்**

கற்றவைகளை மனதிலே பதித்து அதற்குத் தக நிற்க வேண்டும் என்றார் வள்ளுவப் பெருந்தகை. அப்படி நிற்பீர்கள் என்ற நம்பிக்கையோடு நிற்க வேண்டும் என்ற வேண்டுகோளோடும் உங்களை யெல்லாம் நான் இந்த விழாவிலே வாழ்த்துகின்றேன்.

**கடமை, கண்ணியம், கட்டுப்பாடு**

பயிற்சிக் காலம் முடிந்து இனிமேல்தான் மிகப் பொறுப்புள்ள காலம், நீங்கள் பணிக் காலத்திலே அடியெடுத்து வைக்கின்றீர்கள். பயிற்சிக் காலத்தில் கற்க வேண்டியவைகளைக் கற்று; அறிந்து கொள்ள வேண்டியவைகளை அறிந்து கொண்டு நீங்கள் ஆற்றவிருக்கின்ற பணிக்கு உங்களுடைய உடலை– உள்ளத்தை உறுதிப்படுத்திக்கொண்டு – தயார்படுத்திக்கொண்டு; அப்படிப் பெற்ற அந்தப் பயிற்சியின் விளைவை மக்கள் நலத்திற்காகப் பயன்படுத்த இருக்கின்றீர்கள். அப்படிப் பயன்படுத்தும் பொழுது, நான் முதலிலே குறிப்பிட்ட பயிற்சிக் காலம் முடிந்து பணிக்காலத்தில் அடியெடுத்து வைக்கின்ற நீங்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்கின்ற – பொதுவாக எல்லா மக்களுக்கும் எல்லா இடத்திலும் இருப்பவர்களுக்கும் கட்சி சார்பற்ற முறையில், சமயச் சார்பற்ற முறையில் மனிதர்களாக இருக்கின்ற அத்தனைப் பேர்களுக்கும் அவர் தந்த அரும் செல்வமான "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" – இதுதான் காவல்துறை நண்பர்க்கு மிக மிக தேவையான அவர்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தாரக மந்திரங்களாகும்.

அந்தக் கடமை ஆற்றச் செல்கின்றீர்கள். அந்தக் கடமையை கண்ணியத்தோடு ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடமை ஆற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. கடமையை ஆற்றி – கண்ணியம் போற்றி –



நேரத்திலும் மெய்ப்பித்துக் காட்டக் கூடியவர்கள்.

**அகில இந்திய – விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் முதலிடம்**

ஆகவே அவர்கள் செய்த சிறப்பான ஏற்பாடுகள் தமிழக காவல்துறையினரால் செய்யப்பட்ட பாதுகாப்பு யாருக்கும் எந்த ஊனமும் வராமல் தலைவர்களை இந்தியாவினுடைய மேதகு குடியரசுத் தலைவர் அவர்களை, மாண்புமிகு பிரதமர் அவர்களை மற்றும் மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர்களையெல்லாம் அவர்களை மாத்திரமல்ல மாநாட்டில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளையெல்லாம் பாதுகாத்த பெருமை நம்முடைய காவலர்களுக்கும் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும் உரியதாகும். அவர்களுடைய பணியினைப் பாராட்டி இந்த மூன்று நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி பணிகளில் ஈடுபட்ட காவல் துறை, தீயணைப்புத் துறை வருவாய்த்துறை மற்றும் பிற அரசுத் துறை பணியாளர்கள் சுமார் 4,500 பேர், ஒவ்வொருவருக்கும் ஐநூறு ரூபாய் ரொக்கத் தொகையாக அரசின் சார்பில் வழங்கப்படும் என்பதை இந்த மகிழ்ச்சிகரமான நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்வதோடு, 2008ஆம் ஆண்டு நடைபெற்ற 52ஆவது அகில இந்திய காவல்துறை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு தமிழகக் காவல்துறை 7 தங்கப் பதக்கங்கள், 6 வெள்ளிப் பதக்கங்கள், ஒரு வெண்கலப் பதக்கம் என மொத்தம் 14 பதக்கங்களைப் பெற்று முதல் மாநிலமாகத் தேர்வு செய்யப்பட்டிருப்பது, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் நிகழ்வாகும். அந்தப் போட்டிகளில் பங்கேற்ற அனைத்துக் காவல் துறையினரும் பாராட்டுக்குரியவர்கள் என்பதையும் தெரிவித்து இந்த அளவில் என் உரையினை நிறைவு செய்கிறேன்.

❖ ❖ ❖

கட்டுப்பாடு காப்பீர்களேயானால் ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கே நீங்கள்தான் உத்தரவாதம் அளிக்கக்கூடிய உத்தமர்களாக விளங்குவீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

உடல் நலம் சரியில்லாத காரணத்தால் உங்களையெல்லாம் பார்க்கின்ற மகிழ்ச்சியில் ஏதோ என்னையும் அறியாமல் என் குரலை விட்டு வார்த்தைகள் வெளி வந்திருக்கின்றதே அல்லாமல் உடல் நிலை நீண்ட நேரம் பேச இடம் தரவில்லை என்றாலும் ஒரு அறிவிப்பை மாத்திரம் இங்கே பொறுத்தமான இடம் என்று கருதி வெளியிட விரும்புகின்றேன்.

வெளிநாடுவாழ் இந்தியர்கள் வந்து கலந்து கொண்ட தேசிய மாநாடு சென்னையில் 2009 ஜனவரி 7,8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களில் சுமார் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள். இது தவிர சிறப்பு விருந்தினர்களாக சுரினாம் மற்றும் மொரீசியஸ் ஆகிய நாடுகளின் குடியரசுத் துணைத் தலைவர்கள் மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள், முதல் அமைச்சர்கள் மற்றும் வெளிநாட்டுத் தமிழர்கள் எல்லாம் கலந்து கொண்டார்கள்.

இந்த மாநாட்டின் தொடக்க விழாவிலும் அதனைத் தொடர்ந்து மதுரவாயலில் நடைபெற்ற உயர்மட்ட மேம்பாலச் சாலை அடிக்கல் நாட்டு விழாவிலும் மாண்புமிகு பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும் நானும் கலந்து கொண்டோம் என்பதை அறிவீர்கள். அந்த மாநாட்டின் நிறைவு நாளில் மேதகு குடியரசுத் தலைவர் திருமதி பிரதிபா பாட்டீல் அவர்கள் கலந்து கொண்டார்கள். மத்திய அமைச்சர்களும் மற்ற மாநில முதலமைச்சர்களும் அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள்.

இந்த மாநாடு எத்தகைய நேரத்தில் என்னென்ன மிரட்டல்களோடு, என்னென்ன பயமுறுத்தல் செய்திகளோடு எல்லாம் நடத்த வேண்டியிருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். என்றைக்கும் நம்முடைய தமிழ்நாட்டு காவல் துறையினர் மிரட்டல்களுக்கு அஞ்சாதவர்கள். பயமுறுத்தல்களுக்கு பதறாதவர்கள். தங்களுடைய வீரத்தையும் உள்ள உறுதியையும் எந்த

# தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு 3 விருதுகள்

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு**

**தே**சிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாவட்டங்களுக்கு தேசிய அளவிலான விருதுகள் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 2007–08ஆம் ஆண்டிற்கான விருதுகளைப் பெற 13 மாநிலங்களைச் சார்ந்த 22 மாவட்டங்களைத் தேர்வு செய்து மத்திய அரசு 29.01.2009 அன்று அறிவித்துள்ளது. இந்த விருதுகளைப் பெறும் மாவட்டங்களின் பட்டியலில் தமிழ்நாட்டின் மூன்று மாவட்டங்கள் – திண்டுக்கல், சிவகங்கை மற்றும் கடலூர் – இடம் பெற்றுள்ளன. (இந்தியாவின் 28 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களில் 612 மாவட்டங்கள் உள்ளன).



விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள 22 மாவட்டங்களுக்கிடையே வரிசை நிர்ணயிக்கப்படவில்லை (No Inter-se ranking), தற்போது, மத்திய அரசு மாவட்டங்களுக்கு மட்டுமே தேசிய அளவிலான விருதுகளை அறிவித்துள்ளது. மாநிலங்களுக்கு விருதுகள் வழங்கும் திட்டம் ஏதும் அறிவிக்கப்படவில்லை.

தமிழ்நாடு மற்றும் இராஜஸ்தான் ஆகிய இரு மாநிலங்கள் மட்டுமே 3 மாவட்டங்களுக்கு விருதுகளைப் பெற்றுள்ளன. ஆந்திரபிரதேசம், சட்டிஸ்கர், ஜார்கண்ட், மத்தியபிரதேசம், ஒரிசா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் தலா 2 மாவட்டங்களுக்கு விருதுகளைப் பெற்றுள்ளன. இமாசலப்பிரதேசம், கேரளா, பஞ்சாப் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் தலா ஒரு மாவட்டத்திற்கு மட்டுமே விருதுகளைப் பெற்றுள்ளன. தமிழக அரசால் பரிந்துரை செய்யப்பட்ட 3 மாவட்டங்களுமே மத்திய அரசால் விருது பெறுவதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை தேசிய அளவில் மிகச் சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது என்பதை இது உறுதி செய்கிறது.

❖ ❖ ❖

---

**அண்ணாவின் பொன்மொழிகள்**

## சாதி பேதத்தின் நிலை

**சா**தி பேதமும் ஜனநாயகமும் ஒருங்கே இயங்கிட இயலாது. ஜனநாயகமென்பது உயிருள்ளதாக இருக்கவேண்டுமானால் – ஜனநாயகம் பாதுகாப்போடு இருக்கவேண்டுமானால் சாதி வேற்றுமை அழித்தொழிக்கப்பட வேண்டுமென்பது அவசியம். இன்னுமா சாதி வேற்றுமையைப் பற்றிப் பேசுகிறீர்கள்? அது எங்கே இருக்கிறது? என்று சிலர் கேட்கக்கூடும். சாதிப்பாகுபாடுகள் இன்னும் அழிந்தொழியவில்லை. ஆனால் அது இப்போது தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வழிகளைத் தேடி அலைகிற நிலைக்கு ஆளாகியுள்ளது.

# இளம் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம்
# பள்ளிச் சிறார் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம்

தமிழகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 86 ஆவது பிறந்த நாளான 03.06.2008 முதல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பள்ளிச் சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மனித உடம்பில் முக்கியப் பணியைச் செய்யும் இருதயத்தின் குறைபாடுகளைக் களைந்து, பள்ளிச் சிறார்களின் ஆரோக்கிய வாழ்விற்கு உத்திரவாதம் அளிக்கும் "பள்ளிச் சிறார் இருதய அறுவைச் சிகிச்சைத் திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம், பள்ளி மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

"வாழ்வொளித் திட்டம்" என அழைக்கப்படும் பள்ளி நலத் திட்டம் தமிழகத்திலுள்ள 40,308 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் மூலம் 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை 9,986 மாணவர்களுக்கு இருதயக் குறைபாடுகள் உள்ளதாகக் கண்டறியப்பட்டு, சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட குழு பரிசோதித்து 2,396 மாணவர்கள் இருதய அறுவைச் சிகிச்சைக்குத் தகுதியானவர்கள் எனக் கண்டறியப்பட்டனர்.

அரசு மருத்துவமனைகளில் இருக்கும் வசதிகளைக் கொண்டு கண்டறியப்பட்ட அத்தனை பேருக்கும் இருதய அறுவைச் சிகிச்சை செய்திட நீண்டகாலம் ஆகலாம் என்பதைக் கருத்தில் கொண்டு, தனியார் மருத்துவ மனைகளின் மூலம் விரைவாக அறுவைச் சிகிச்சை செய்து இளம் பிஞ்சுகளின் இன்னுயிர்க் காக்க, கீழ்க்கண்ட 17 தனியார் மருத்துவமனைகளிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் பெறப்பட்டது.

1. ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனை, போரூர், சென்னை–116.
2. அப்பல்லோ மருத்துவமனை, சென்னை – 6.
3. ப்ரான்டியர் லைப் லைன் மருத்துவமனை, சென்னை – 101.
4. ஹார்வே ஹெல்த் கேர் லிமிடெட் மருத்துவமனை, சென்னை – 18.
5. மெட்ராஸ் மெடிகல் மிஷன், சென்னை –37.
6. கே.ஜே. மருத்துவமனை, சென்னை–84.
7. சூரியா மருத்துவமனை, சென்னை–93.
8. மியாட் மருத்துவமனை, சென்னை–89.
9. லைப் லைன் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, சென்னை –96.
10. செட்டிநாடு மருத்துவமனை மற்றும் ரிசர்ச் இன்ஸ்டிடியூட், கேளம்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.
11. வடமலையான் மருத்துவமனை, மதுரை.
12. அப்பல்லோ மருத்துவமனை, மதுரை.
13. மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை, மதுரை.
14. கே.ஜி. மருத்துவமனை மற்றும் போஸ்ட் கிராஜ்வேட் மெடிக்கல் இன்ஸ்ட்டிடியூட், கோயம்புத்தூர்.
15. ஜி. குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனை, கோயம்புத்தூர் – 18.
16. ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை, கோயம்புத்தூர்.
17. பி.எல்.ஜி. மருத்துவமனை, கோயம்புத்தூர்.

தற்போது இத்திட்டத்தில் கீழ்காணும் மூன்று மருத்துவமனைகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன:

1. பில்ரோத் மருத்துவமனை, 43, லஷ்மி டாக்கீஸ் ரோடு, ஷெனாய் நகர், சென்னை – 30.
2. காவேரி மெடிக்கல் சென்டர் மற்றும் மருத்துவமனை, தென்னூர், திருச்சி–17.
3. விநாயகா மிஷன் மருத்துவமனை, சங்ககிரி மெயின் ரோடு, என்.எச்.47, வீரபாண்டி (போஸ்ட்), சேலம்–636 308.


இத்திட்டத்தில் தமிழக அரசு மூடிய எளிய இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ. 10,000 ஆகவும், திறந்த எளிய இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.30,000 ஆகவும், சிக்கலான திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.70,000 ஆகவும் நிதி உதவி வழங்கியது.

இந்த நிதி போதவில்லை என்று இம்மருத்துவமனைகள் அரசிற்கு தெரிவித்து மூடிய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.20,000 ஆகவும், திறந்த எளிய இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.50,000 ஆகவும், சிக்கலான திறந்த அறுவைச் சிகிச்சைக்கு ரூ.1,00,000 கோரியிருந்தனர். அரசு இக்கோரிக்கையை ஏற்று மூடிய எளிய இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.10,000 இலிருந்து ரூ.20,000 ஆகவும், திறந்த எளிய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.30,000 இலிருந்து ரூ.50,000 ஆகவும், சிக்கலான திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.70,000 இலிருந்து ரூ.1,00,000 ஆகவும் உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது.


இந்த நிதி உதவி உயர்வினை இருதயக் குறைபாடுள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் பயன்படுத்தி தங்கள் குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள துணை இயக்குநர், சுகாதாரப் பணிகளை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ★

# புத்துணர்வோடு பொங்கல் விழாக் கொண்டாட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 12.1.2009 அன்று புத்துணர்வோடு கொண்டாடுவோம் பொங்கல் விழாவை! என்று தெரிவித்து, கிராமப் புறங்களிலும், நகரங்களிலும், வீடுகள்தோறும், அரசுக் கட்டடங்கள் அனைத்திலும் பொங்கல் நாளன்று வண்ண வண்ணமாய்ச் சர விளக்குகள் அமைத்து எழில் குலுங்கிடச் செய்திடுவீர் என்று கேட்டுக் கொண்டார். அதன்படி அரசுக் கட்டடங்கள் மற்றும் தனியார் வீடுகள், வணிக வளாகங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.




கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும், சென்னையில் அரசுக் கட்டடங்களான, தலைமைச் செயலகம், காமராசர் சாலையில் அமைந்துள்ள எழிலகம், பொதுப்பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகம், செம்மொழி ஆய்வு நிறுவனம், தலைமைக் காவல் இயக்குநரகம், பத்திரப் பதிவு தலைமை அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள இராஜாஜி மண்டபம், கலைவாணர் அரங்கம், சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம் சட்டமன்ற தொகுதி அலுவலகம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் விடுதி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இல்லம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் இல்லங்கள், காந்தி மண்டபம், ஆளுநர் மாளிகை வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி அரசினர் கஸ்தூரிபா காந்தி மகளிர் மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சைதாப்பேட்டை தாடண்டர் நகர் சமுதாயக் கூடம், சைதாப்பேட்டை அரசினர் மருத்துவமனை, தேனாம்பேட்டை மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்துறை அலுவலகம். கீழ்ப்பாக்கம் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி, அரசு அருங்காட்சியகம், எழும்பூர், மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், எழும்பூர் கண் மருத்துவமனை, உள்ளிட்ட அரசுக் கட்டடங்கள் வண்ண விளக்குகளாலும், தோரணங் களாலும், தென்னை, வாழை, ஈச்சங் குலைகளும், தோகை விரிந்த கரும்புகளும், இஞ்சி மஞ்சள் கொத்துகளும் இன்னபிறவும் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. ★



மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. க. அன்பழகன் அவர்களின் தலைமையில், 30.1.2009 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தியாகிகள் தினத்தையொட்டி, தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழியினை, மாண்புமிகு தமிழக சட்டமன்ற பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக ஊழியர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், 20.1.2009 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் நகராட்சி நிருவாகம் ஆகிய துறைகளின் அமைச்சர்கள் கலந்து கொண்ட தேசிய மாநாட்டில் பங்கேற்றார்.




மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீரசாமி அவர்கள், 20.1.2009 அன்று, திருவள்ளூர் மாவட்டம் அத்திப்பட்டு கிராமத்தில், வடசென்னை அனல்மின் திட்டவளாகத்தில், முதலாவது அனல்மின் திட்டப் பணிக்கான கொதிகலன் தூண்கள் நிறுவும் பணியை துவக்கி வைத்தார். உடன் மாண்மிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் திரு. சி.பி.சிங், இ.ஆ.ப., எரிசக்தித்துறை செயலர் திரு.பி.டபுள்யூ.சி.டேவிதார் இ.ஆ.ப., உள்ளனர்.



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 113ஆவது பிறந்தநாளையொட்டி
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி,
மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன்,
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி.சாமி ஆகியோர்
சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு
அருகில் வைக்கப்பட்டிருந்த புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். (23.01.09)



குடியரசு நாள் விழா (26.1.2009)



குடியரசு நாள் விழா – அலங்கார ஊர்திகள் (26.1.2009)

R.N.I.No.21446/70-Regn.No.TN/ARD/48/09/-1
& WPP No.TN/PMG(CCR)518/09-11



தமிழரசு

தமிழரசு
அலுவலகப் பிரதி

# பயங்கரவாதத்தை ஒழிக்க ஒவ்வொரு குடிமகனும் உறுதி பூணவேண்டும்



புதுடெல்லியில் 6.1.2009 அன்று நடைபெற்ற
முதலமைச்சர்கள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின்
ஆங்கில உரையின் தமிழாக்கம்

தமிழரசு
அலுவலகப் பிரதி

# பயங்கரவாதத்தை ஒழிக்க - ஒவ்வொரு குடிமகனும் உறுதிபூண வேண்டும்

புதுடெல்லியில்
மாண்புமிகு இந்தியப் பிரதமர்
டாக்டர் **மன்மோகன் சிங்** அவர்கள் தலைமையில்
06.1.2009 அன்று நடைபெற்ற
உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான
முதலமைச்சர்கள் மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் உரை.

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

சிறப்பு வெளியீடு எண்.20

தமிழரசு இலவச வெளியீடு

ஜனவரி 2009

வெளியிடுபவர் :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

சென்னை.

அச்சிட்டோர் :

தமிழரசு அச்சகம்,

110, அண்ணா சாலை,

சென்னை - 600 002.

புதுடெல்லியில்

**மாண்புமிகு இந்தியப் பிரதமர்**

**டாக்டர் மன்மோகன் சிங்** அவர்கள் தலைமையில்

06.1.2009 அன்று நடைபெற்ற

உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான

முதலமைச்சர்கள் மாநாட்டில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின்

உரையை

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர்

திரு. **துரைமுருகன்** அவர்கள் படித்தார்.

அந்த ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு :

**ப**யங்கரவாதிகளால் ஏற்படும் அச்சுறுத்தல்கள், பயங்கரவாதத் தாக்குதல் எதையும் தடுக்க தேசத்தின் தயார் நிலைமை ஆகியவை தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மாநில அரசுகளை ஈடுபடுத்தும் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பை முதலில் நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

**தீவிரவாத சவால்களைச் சமாளிக்க மத்திய – மாநில அரசுகளிடையே ஒருங்கிணைப்பு தேவை!**

சமீபத்தில் மும்பை நகரில் ஏற்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் நாட்டின் முன்னுள்ள தீவிரமான சவால்களின் அளவை வெளிப்படுத்தின. நாட்டுக்குள் உள்ள பிரிவினைவாத சக்திகள் மற்றும் எல்லைக்கு அப்பாலுள்ள அமைப்புகள் ஆகியவற்றின் இந்த சவால்களை சந்திக்க மத்திய, மாநில அரசுகளிடையே தீர்மானகரமான ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.

தமிழ்நாடு எந்தவிதமான பெரும் நெருக்கடிகளும் இன்றி தொடர்ந்து இருந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். இந்த நிலைமையைத் தக்க வைத்துக் கொள்ள மாநில அரசு சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. பிரிவினை சக்திகளை தீர்மானகரமாக எதிர்த்துப் போரிட மாநில அரசுக்கு மத்திய அரசு நிதி ரீதியிலும், தொழில் நுட்ப ரீதியிலும் தொடர்ந்து உதவி அளிக்கும் என்று நம்புகிறோம்.

மத்திய உள்துறை அமைச்சர் அவர்களால் குறிப்பாக எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக தற்போதுள்ள

நிலைமையைப் பற்றிப் பின்வருவனவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இடதுசாரி தீவிரவாத சக்திகளையும், இலங்கைத் தமிழ்ப் போராளிகளையும் சமாளிக்க மாநிலத்தின் உளவுப்பிரிவில் க்யூ பிராஞ்ச் சி.ஐ.டி. அமைப்பு தனியாக உள்ளது; இதற்கு 'சிறப்புக் காவல்படை' மற்றும் ஒரு 'தனிப்பிரிவு' ஆகியவை உள்ளன.

தேசிய பாதுகாப்புப்படையால் (என்.எஸ்.ஜி.) பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படை, நவீனக்கருவிகளுடன் கூடிய குண்டுகளைக் கண்டுபிடித்து அழிக்கும் படைகள் ஆகியவை தொடர்ந்து பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடி வருகின்றன. இந்தப்படைகளை இராணுவப் படைகளிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் நிருவகித்து வருகின்றனர்.

**தமிழ்நாடு அதிரடிப்படை பள்ளி சார்பில்**
**தீவிரவாத தடுப்பு சிறப்புப் பயிற்சிகள்!**

நுணுக்கமான ஆயுதங்களைக் கையாளுதல், குண்டுகளைக் கண்டுபிடித்து அழித்தல், அதிரடியாக

செயல்பட்டு விடுவிக்கும் செயல்பாடுகள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு அதிரடிப்படை பள்ளி பயிற்சி அளிக்கிறது. திட்டமிடப்பட்ட குற்றங்கள் உளவுப்பிரிவு ஒன்றை அமைக்கவும் மாநில அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

ஒவ்வொரு நாளும், சட்டம் ஒழுங்கு நிலைமை மற்றும் மாநிலத்தில் இதர வளர்ச்சிப்போக்குகள் குறித்தும் மாநில உளவுப் பிரிவின் தலைவர் என்னிடம் தெரிவிக்கிறார். அவசரமான நிலைமை ஏற்படும்போது, தலைமைச்செயலாளர், உள்துறைச்செயலாளர், மாநில காவல்துறைத்தலைவர் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நிலைமையை ஆய்வு செய்ய ஆலோசனைக்கு அழைக்கப்படுகின்றனர். எங்களது மாநிலத்தில் மாநில ஆட்சியர்கள் மற்றும் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்களின் கூட்டம் காலம் தவறாமல் முறையாக நடத்தப்படுகிறது. மேலும் ஏதாவது தீவிரமான பிரச்சினைகள் எழுந்தால் உடனே நான் தொலைபேசியில் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு ஆலோசனை செய்கிறேன். 32 மாவட்டங்களைக் கொண்ட தமிழ்நாடு

போன்ற ஒரு மாநிலத்தில் ஓரிரு மாதங்களில் ஒவ்வொரு மாவட்டத்தலைநகரங்களிலும், மாவட்டங்களில் பாதுகாப்பு நிலைமையை ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியர், காவல்துறை ஐ.ஜி. போன்றோருடன் முதலமைச்சர் அல்லது உள்துறை அமைச்சர் கூட்டங்கள் நடத்துவது என்பது சாத்தியமான திட்டமாக இருக்காது.

மாபியா கும்பல்கள், நிலங்களைப்பறிப்பவர்கள், தேச விரோத சக்திகள் போன்றவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளைப்பொறுத்தமட்டில், தமிழக அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இத்தகைய நபர்களைச்சமாளிக்க சாராயம் காய்ச்சுவோர், போதைப்பொருள் குற்றவாளிகள், காடுகள் தொடர்பான குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சார குற்றவாளிகள், குடிசைகளைக்கைப்பற்றுவோர், வீடியோ திருட்டு குற்றவாளிகள் ஆகியோரின் ஆபத்தான நடவடிக்கைகள் தடுப்புச்சட்டத்தை உருவாக்கி, நடைமுறைப்படுத்தி வருகிறது.

**பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படை குழுக்களை அமைக்க மாநில அரசு திட்டம்!**

பெரும் நிறுவனங்கள், அமைப்புகள் முக்கியமான கட்டடங்கள், கட்டமைப்புகள் போன்றவற்றைத் தெரிவு செய்து அவற்றின் பாதுகாப்பை ஆய்வு செய்துள்ளது. இந்த முக்கியமான நிறுவனங்கள், கட்டமைப்புகள் ஒவ்வொன்றிலும் சிறிய அதிரடிப்படை குழுக்களை நிறுத்துவதற்குப் பதிலாக திருநெல்வேலி, மதுரை, கோவை, திருச்சி, சேலம், சென்னை ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்க பயிற்றுவிக்கப்பட்ட அதிரடிப்படை குழுக்களை அமைக்க மாநில அரசு திட்டமிட்டு வருகிறது.

தமிழக அரசு எடுத்து வரும் உறுதியான, செயல் துடிப்பு மிக்க நடவடிக்கைகளால் மாநிலம் தொடர்ந்து அமைதியாக இருந்து வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாநில காவல்துறை எந்தச் சவாலையும் சந்தித்து எந்த நெருக்கடிகளையும் உடனடியாக எதிர்கொள்ளும் வகையில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். காவல்படையை மேலும் பொறுப்புள்ளதாகவும், நவீனமானதாகவும் ஆக்க தமிழக

அரசு மூன்று காவல் துறை ஆணையங்களை அமைத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசு கணிசமான நிதி ஒதுக்குகிறது; 2008 – 09 ஆம் ஆண்டில் மாநில காவல்துறைக்கு 2,427 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழகத்தில் அரசு சார்பில் சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள்!**

சமுதாயத்தின் ஒத்துழைப்பு அடிப்படையில் அமையாவிட்டால் எந்தவிதமான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையும் வெற்றி பெறாது என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். இதை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, மக்களின் அனைத்துப் பிரிவினரது சமமான வளர்ச்சியை உறுதி செய்யவும், பொருளாதாரப் பாகுபாடுகளைக் குறைக்கவும், ஏழை, எளிய பிரிவினர் மற்றும் சிறுபான்மையினர் பலனடைவதற்காக பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

இடதுசாரித் தீவிரவாதிகள் இருப்பதைக் கண்ட மாவட்டங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சி

களை ஊக்குவிப்பதுடன் எங்களது அரசு சிறப்பு சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது.

**மாநில அரசுக்கு உதவ வேண்டியதன்**

**முக்கியத்துவத்தை மத்திய அரசு உணர வேண்டும்!**

சட்டம் ஒழுங்கு நிலைமையைப் பராமரிக்கும் பொறுப்பை முழுமையாக நிறைவேற்றி வரும் மாநில அரசு, தானாகவே பல்வேறு நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டுள்ளது. இருப்பினும், தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றை எதிர்த்துப் போராட மாநில அரசின் கைகளை வலுப்படுத்துவதற்காக மத்திய அரசு குறித்த காலத்தில் கணிசமான மத்திய உதவியின் முக்கியத்துவத்தை உணர வேண்டிய அவசியம் உள்ளது.

இவ்வளவு முயற்சிகள் இருப்பினும், நாட்டின் இதர பகுதிகளில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள போக்குகளால், தமிழக அரசு உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த அதன் உக்தியை மாற்றி அமைக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. நீண்ட நெடிய சர்வதேச

கடல் எல்லை மற்றும் இலங்கையில் நடைபெற்று வரும் உணர்ச்சிபூர்வமான போக்குகள் ஆகியவற்றால் இது மேலும் முக்கியமாகிறது. தேசவிரோத சக்திகள் ஊடுருவலைத் தடுக்க தீவிரமான கண்காணிப்பையும், நாட்டில் நுழையும் சக்திகளை முழுமையாகச் சோதிப்பதையும் உறுதி செய்ய மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

கடல் எல்லையில் கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகளுக்கு உதவ மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று தேவையான கப்பல்கள், படகுகளுடன் கடற்படை மற்றும் கடலோரக் காவல்படை ஆகியவற்றை நிலைநிறுத்த உத்தரவிட்டமைக்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரையை ஒட்டி நீளமான, இடைவெளிகள் மிகுந்த கடல் எல்லையை நாட்டின் வடக்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளிலுள்ள சர்வதேச எல்லைகளுக்கு நிகராகப்பாவித்து, மத்தியப் படைகள், கடலோரக் காவல்படை மற்றும் கடற்படை ஆகியவற்றின் இருப்பை அதிகரிக்குமாறு பிரதமரைக் கேட்டுக் கொள்கிறேன்.



தமிழரசு
அலுவலகப் பிரதி

## உளவுத் தகவல் சேகரிப்பில் உள்ள இடைவெளிகளை நிரப்ப உதவும் நடவடிக்கைகள்

உளவுத் தகவல்கள் சேகரிப்பதன் தரத்தை மேம்படுத்த, அடிக்கடி தொடர்ந்து உளவுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள மத்திய மற்றும் மாநில உளவு அமைப்புகளிடையே நீடித்த ஒருங்கிணைப்பு அமைப்பை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. மாநில காவல்படைகளில் பயங்கரவாத, எதிர்பயங்கரவாத வல்லுநர்களை சேர்த்தல், பயங்கரவாதம் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான இதர விஷயங்கள் பற்றிய பொதுவான விவரங்களின் தொகுப்பை மத்தியில் உருவாக்கி அவற்றை மாநில அமைப்புகளும் அடையக் கூடிய வசதியை உருவாக்குதல், வெளிநாட்டு நிறுவனங்களில் பயிற்சி பெற மாநிலங்களிலிருந்து காவல்துறை அதிகாரிகளை அனுப்புதல் போன்றவை உளவுத் தகவல்கள் சேகரிப்பு மற்றும் பரிமாற்றத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்ப உதவும் சில நடவடிக்கைகளாகும்.

## குடியேற்றக் கட்டுப்பாடுகளை உறுதி செய்வது அவசியம்!

மத்திய – மாநில ஒருங்கிணைப்பு தேவைப்படுகிற மற்றொரு பகுதி, பணப்பட்டுவாடா மற்றும் போதைப் பொருள்

கடத்தல் தொடர்பு அமைப்புகளை உடைப்பதும், அயல்நாட்டு நிதிகள் வருவதைக் கட்டுப்படுத்துவதும் ஆகும். இதுதொடர்பாக மேலும் அதிகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய தகவல்களை வருவாய் உளவு இயக்குநரகமும், அமலாக்கப்பிரிவும் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டும். அத்துடன் வெளிநாட்டினர் வந்தவுடன் புகைப்படம் எடுத்தல், அவர்களது கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்தல், ஆவணங்களை கவனமாகப் பரிசீலித்தல் போன்ற கடுமையான குடியேற்றக் கட்டுப்பாடுகளை உறுதி செய்வதும் அவசியமாகும். இணையதள அடிப்படையிலான பாஸ்போர்ட் தகவல் முறையை மாநில உளவுப் பிரிவுகளுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

மேற்கூறிய நடவடிக்கைகள் தவிர, மாநில காவல் படைகளுக்கு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், வளர்ச்சியடைந்த நாடுகள், மத்திய காவல் மற்றும் பாதுகாப்புப் படைகளின் நிறுவனங்களில் கடை பிடிக்கப்படும் சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும் மத்திய அரசு முன் வரவேண்டும்.

காவல்படைகளுக்கு நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் தற்போது வழங்கப்படும் நிதி போதுமானதாக இல்லாததால் மத்திய மாநில காவல்படைகளை நவீனமயமாக்கி மத்திய பட்ஜெட் கணிசமான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். காவல்படைகள் நவீனமயமாக்கலின் ஒருங்கிணைந்த பகுதியாக, நவீன தாக்குதல் ஆயுதங்கள், பாதுகாப்புக் கவசங்கள், கண்காணிப்பு சாதனங்கள், தகவல் தொடர்பு கருவிகள் ஆகியவற்றின் இருப்புக் கணக்கை எடுத்து மாநில அரசிடம் உள்ள முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட சிறப்பு பயங்கரவாத எதிர்ப்புப் படைப்பிரிவினருக்கு வழங்கலாம்.

காவல்படைகள் நவீன மயமாக்கல் திட்டத்தில் பெருநகரப் பகுதியை நிறைவேற்ற மத்திய அரசு மிகவும் சிந்தித்து திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாகத் தேவையான அத்தியாவசியமான குறைந்தபட்ச தேவைகளைப் பற்றி விரிவான, விளக்கமான விவாதங்களுக்குப்பிறகு மத்திய அரசிடம் ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைத் திட்டத்தில் சென்னை காவல்துறை 10 ஆண்டு காலத்திற்கான 7,377 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டம் ஒன்றை உத்தேசித்துள்ளது. இருப்பினும் இதில், மத்திய அரசு

கேட்டுக் கொண்டபடி 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதிக்கு முன்பாக நிறைவேற்றப்படுவதற்கான ரூ.149.6 கோடிக்கு ஆலோசனைத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க அனுமதி விரைவில் வழங்கப்படும் என்று நம்புகிறேன்.

ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டத்தின் 25 சதவிகிதத்தை, குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்பு சக்திகள், எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றில் 25 சதவீதத்தைப் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய தேவைகளைக் கைவிடலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன். இது மாநில அரசுகள் பெருமளவிற்கு மிகச் சிறந்த வகையில் தயார் நிலையை உறுதி செய்ய உதவும்.

**பயங்கரவாதத்தை ஒழிக்க ஒவ்வொரு குடிமகனும் உணர்வு ரீதியாக உறுதி பூணவேண்டும்**

பெருநகரங்கள் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இலக்காக மாறி வருவதால் பயங்கரவாத எதிர்ப்புக்காக பாதுகாப்பு தொடர்பான செலவினங்களை உறுதி கூறப்பட்டுள்ள 10 ஆண்டுகளுக்கு மேலும் மத்திய அரசே

ஏற்றுக்கொள்ளவேண்டும். தேசிய அளவில் எதிர்க்கப்பட வேண்டியதான பயங்கரவாத அச்சுறுத்தலால் விடப்பட்டுள்ள சவால்களைக் கருத்தில் கொண்டு, இதர மாநில அரசுகளாலும் எனது கருத்து ஆதரிக்கப்படும் என்று நம்புகிறேன். தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிற்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டம் தொடர்பாக இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் உணர்வூட்டப்பட வேண்டிய அவசியத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாட்டிற்குள்ளிருந்தும், வெளியிலிருந்தும் தேச விரோத மற்றும் பிரிவினைவாத சக்திகள் உருவாக்கும் தடைகளைக் கடக்க வெற்றிகரமான போரைத் தொடுப்பதற்கும் இத்தகைய எந்த சவாலையும், தாக்குதலையும் ஒன்றுபட்டு எழுந்து நிற்கும் வலிமையான சக்தியாக இந்தியாவை உருவாக்குவதற் கும் என்னுடைய அரசின், தமிழ்நாட்டு மக்களின் முழுமையான ஆதரவை உறுதி கூறி பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

❖ ❖ ❖

